தமிழரசு

Tamilarasu

(Monthly)

ஏப்ரல் 2023 (April 2023)
விலை ரூ.20/– (Price Rs.20/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 53
இதழ் (Issue) : 10

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.மு.க.ஸ்டாலின்** அவர்கள் 05.03.2023 அன்று சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை உலகத் தமிழர்கள் மற்றும் பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள கீழடி அருங்காட்சியகத்தை திறந்து வைத்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2054
சுபகிருது - சோபகிருது வருடம் :
பங்குனி - சித்திரை
ஏப்ரல் 2023

மலர் : 53 விலை ரூ.20 இதழ் : 10

ஆசிரியர் - வெளியிடுபவர்
த. மோகன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
க.அ. முகம்மது ரசூல்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
கு. சுபாஷ்
இரா. பாலாஜி
மு. பரத்குமார்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ். ஸ்ரீந்தர்
ஜெ. ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.

தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை. (குறள் 411)

செழுமையான கருத்துக்களைச் செவிவழியாகப் பெறும் செல்வமே எல்லாச் செல்வங்களுக்கும் தலையாய செல்வமாகும்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் 4
★ கோவை மற்றும் மதுரையில் மெட்ரோ இரயில் திட்டங்களைச் செயல்படுத்த ஒன்றிய அரசு விரைந்து ஒப்புதல் தர வேண்டும் 8
★ தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை 2023-2024 12
★ தமிழ்நாடு வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2023-2024 37
★ ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு 'மகளிர் உரிமைத் தொகை' வழங்கும் திட்டம் 42
★ "அனைவருக்கும் IITM" திட்டத்தில் 250 அரசுப் பள்ளிகளுக்கு மின்னணு செய்முறைப் பெட்டகங்கள் 45
★ "வைக்கம் போராட்ட நூற்றாண்டு" ரூ. 8.14 கோடி செலவில் கேரள மாநிலம் பெரியார் நினைவிடம் மறுசீரமைப்பு 49
★ இந்தியாவுக்கே வழிகாட்டிய வைக்கம் சத்தியாகிரகப் போராட்டம் 53
★ மகளிர் காவலர்கள் பொன்விழா ஆண்டு "அவள்" திட்டம் தொடக்கம் 57
★ சிவகங்கை மாவட்டத்தில், ரூ.18.43 கோடி செலவில் "கீழடி அருங்காட்சியகம்" 64
★ இன்றைய இளைய தலைமுறையினர் வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்பத்தினைச் சரியாகப் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற்றம் காண வேண்டும் 73

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 20.03.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் 2023 - 2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பு மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களை, சென்னை விமான நிலையத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வரவேற்று வளர்ச்சித் திட்டத்திற்கான மனுவை வழங்கினார் - 08.04.2023

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வரவேற்று புத்தகம் வழங்கினார்.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் 50:50 என்ற சதவிகிதப் பங்களிப்பு அடிப்படையில் ஒப்புதல்

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் – கட்டம்-IIஐ, கட்டம்-Iஐ செயல்படுத்தியதைப்போல் ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் 50:50 என்ற சமவிகிதப் பங்களிப்புடன் செயல்படுத்துவதற்கான ஒப்புதலை விரைவில் வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

விமான நிலைய விரிவாக்கத்திற்கான பாதுகாப்புத்துறை நிலங்களை இலவசமாக வழங்குதல்

இந்திய அரசின்கீழ்ச் செயல்படும் நிறுவனங்களுக்கு சொந்தமான நிலங்கள், பாதுகாப்புத்துறை நிலங்கள் ஆகியவற்றை விமான நிலைய செயல்பாட்டிற்காக இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு இலவசமாக வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். விமான நிலைய விரிவாக்கம் / நவீனமயமாக்கல் பணிகளுக்குத் தேவைப்படும் பாதுகாப்புத்துறை நிலங்களின் முக்கியத்துவம் மற்றும் அவசர தேவையைக் கருத்தில் கொண்டு இந்நேர்விற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டு அவசர தீர்வுகாண வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

காலணி உற்பத்திக்கான புதிய உற்பத்தி சார்ந்த ஊக்கச் சலுகைத் திட்டம்

தோல் மற்றும் தோல் அல்லாத காலணி உற்பத்திக்கான விரிவான உற்பத்தி சார்ந்த ஊக்கச்சலுகைத் திட்டத்தை இந்திய அரசு அறிமுகப்படுத்த வேண்டப்படுகிறது. இது தற்போதுள்ள உற்பத்தியாளர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதோடு, காலணி ஏற்றுமதியாளர்களுக்கு மிகவும் உகந்த இடமாக இந்தியாவை உருவாக்கும். மேலும், உற்பத்தி சார்ந்த ஊக்கச்சலுகைத் திட்டம், ஆபரணங்கள், ஜிப்பர்கள், காலணியின் அடிப்பகுதிகள், கொக்கிகள், அலங்காரப் பொருட்கள் போன்ற உள்ளீட்டுப் பொருட்களுக்கான இறக்குமதி மாற்றீடு செய்ய உதவும். எனவே, காலணி உற்பத்திக்கான புதிய உற்பத்தி சார்ந்த ஊக்கச்சலுகைத் திட்டத்தை செயல்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பி.எம். மித்ரா பூங்காவின் முதன்மை மேம்பாட்டாளராக சிப்காட்டினை நியமித்தல்

சிப்காட் தன்னகத்தே நிலத்தின் உரிமையினை வைத்துள்ளதாலும், தொழிற்பூங்காக்களை நிருவகிப்பதில் தனது செயல்திறனை நிரூபித்ததாலும், சிப்காட்-ஐ தமிழ்நாட்டில் உள்ள பி.எம். மித்ரா பூங்காவினை நிருவகிக்க ஒன்றிய அரசு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. அவ்வாறு நிருவகிக்க அனுமதிக்கப்படுவது திட்ட வழிகாட்டியிலும் ஏற்கெனவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

(அ) தமிழ்நாட்டில் இந்திய விளையாட்டு ஆணையத்தின் மண்டல மையத்தை அமைத்தல்

சென்னையிலுள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (TNPESU) வளாகத்தில் இந்திய விளையாட்டு ஆணையத்தின் மண்டல மையத்தை நிறுவுவதற்கான கருத்துரு ஏற்கெனவே உள்ளது. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் அமையவுள்ள இந்த மண்டல மையம், சிறந்து விளங்கும் விளையாட்டுக் கல்வியுடன் கைகோர்த்து செல்லும் ஒரு முன்மாதிரி மையமாக அமையும். எனவே, அங்கு இந்திய விளையாட்டு ஆணையத்தின் மண்டல மையத்தை அமைத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஆ) ஆசிய கடற்கரை விளையாட்டுப் போட்டிகளைத் தமிழ்நாட்டில் நடத்துதல்

ஆசிய ஒலிம்பிக் கவுன்சிலால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிய கடற்கரை விளையாட்டு, பல்வகை விளையாட்டு நிகழ்வுகளுள் மூன்றாவது பெரிய ஆசிய பல்வகை-விளையாட்டு நிகழ்வு ஆகும். ஐந்து நாடுகள் (இந்தோனேசியா, ஓமன், சீனா, தாய்லாந்து மற்றும் வியட்நாம்) மட்டுமே ஆசிய கடற்கரை விளையாட்டுகளை நடத்தியுள்ளது. மேலும், நாற்பத்தைந்து நாடுகள் இந்த விளையாட்டுக்களில் பங்கேற்றுள்ளன.

இந்த நிகழ்ச்சியை இந்தியா இதுவரை நடத்தியதில்லை. தமிழ்நாடு 1,076 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரையைக் கொண்டுள்ளது. இது இந்தியாவின் மொத்த கடற்கரை நீளத்தில் 15 சதவிகிதம் ஆகும். கடற்கரை கைப்பந்து விளையாட்டில் மிகுந்த ஆர்வத்துடன் உள்ள தமிழ்நாடு, 2022இல் சென்னையில் தேசிய விளையாட்டுப் போட்டியையும் நடத்தியது. இதனை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் விதமாக தமிழ்நாட்டில் ஆசியக் கடற்கரை விளையாட்டுப் போட்டிகளை நடத்திட அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(இ) தமிழ்நாட்டில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விளையாட்டுகள் மற்றும் நிகழ்வுகளை நடத்துதல்

சர்வதேசப் பல்வகை விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான தமிழ்நாட்டின் தொலைநோக்குப் பார்வையைக் கருத்தில் கொண்டு, அடுத்த கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு தமிழ்நாடு அரசு தனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

போக்குவரத்துத் துறை

இராமேஸ்வரம் முதல் தனுஷ்கோடி வரை புதிய அகல இரயில் பாதை அமைக்கும் திட்டத்தைக் கைவிடுதல்

தெற்கு இரயில்வேயின் கோரிக்கையின் அடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி இடையே புதிய அகல இரயில் பாதை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்துதல் மற்றும் நில உரிமை மாற்றம் செய்வதற்கான செயல்முறையைத் தொடங்குவதற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டது. இருப்பினும், இராமேஸ்வரம் - தனுஷ்கோடி இடையே புதிய இரயில் பாதை அமையும் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை அமையும் பகுதி குறுக்கிடுவதால், நிலம் கையகப்படுத்துவதற்கான 3(2) அறிவிப்பின் செயல்முறை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

43.82 ஹெக்டேர் அரசு நிலம் மற்றும் 28.61 ஹெக்டேர் வனப்பகுதி நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்த பின்பே, இத்திட்டத்தின் பணிகள் விரைவில் தொடங்கப்படும் எனத் தெற்கு இரயில்வே மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அப்பகுதியின் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தில் (eco sensitive zone) உள்ள பலவீனமான சுற்றுச்சூழல் அமைப்பைக் கருத்தில் கொண்டு, புதிய இரயில் பாதை அமைப்பதற்கு இந்தப் பகுதி பொருத்தமானது அல்ல என்று தமிழ்நாடு அரசு கருதுகிறது. எனவே, இத்திட்டத்தினை மறுபரிசீலனை செய்யலாம் அல்லது சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்த நிபுணர்களின் உள்ளீடுகளின் அடிப்படையில் இந்தத் திட்டத்தினைப் பகுப்பாய்வு செய்யலாம் அல்லது இந்தத் திட்டத்தின் நிலையற்ற தன்மையின் காரணமாகக் கைவிடலாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சாதிப்பட்டியலில் 'ன்(N)', 'க(GA)', 'ட(DA)', "க(KA)' என முடிவடையும் பெயர்களை "ர் (R)" என மாற்ற கோருதல்.

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டியலில் உள்ள சாதி பெயரில் இறுதி எழுத்தில் முடிவடையும் "ன்-In" "க-ka" என்பதற்குப் பதிலாக "ர்-R எனப் பெயர் மாற்றம் செய்து மக்களுக்கு மதிப்பு மற்றும் மரியாதை கிடைக்கும் வண்ணம் உரிய சட்டம் இயற்ற, விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது

எரிசக்தித் துறை

தமிழ்நாடு கடற்கரையில் கடலோரக் காற்றாலைகள்

தமிழ்நாடு கடற்கரையில் மிகப்பெரிய அளவிலான காற்றாலை மின்திட்டங்கள் அமைப்பதற்கான வளங்கள் உள்ளன. ஆரம்பக்கட்ட ஆய்வறிக்கையில் அதிகபட்சமாக 31 ஜிகாவாட் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் கடற்கரையோரங்களில் வினாடிக்கு 9 மீட்டர் முதல் 12 மீட்டர் வரையிலான அதிகபட்ச காற்றின் வேகம் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வதிகப்படியான காற்றின் வேகம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு மிகவும் உகந்ததாக உள்ளது. இவ்வாறு கடலோரக் காற்றாலைகள் மூலம் கிடைக்கப்பெறும் அதிகப்படியான மின்சாரத்தினால் அனல் மின்நிலையம் மூலம் பெறப்படும் மின்சாரத்தினைக் குறைப்பதற்கு வழிவகை செய்வதுடன் காற்றுமாசினை பெருமளவு குறைத்திட வழிவகை செய்யும். தமிழ்நாடு மீனவர்களையும் கடலோர காற்றாலை மின் திட்டங்கள் அமைக்க ஒருங்கிணைத்து அவர்களைத் தொடர்ந்து இத்திட்டத்தில் பங்கேற்க செய்வதில் தமிழ்நாடு மாநிலத்தின் மிகப்பெரிய பங்களிப்பு உள்ளது.

மத்திய மின்துறை அமைச்சகம் 27.05.2013 அன்று வெளியிட்ட அறிவிப்பின்படி மத்திய தொகுப்பிலிருந்து ஒதுக்கப்படும் மின்சாரத்தினை, மின்திட்டங்கள் செயல்படுத்தப்படும் சொந்த மாநிலத்திற்கு 50 விழுக்காடு ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்கிறது. அதன் அடிப்படையில் தற்போது தமிழ்நாட்டில் உள்ள நெய்வேலி அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம்-I&II, புதுநெய்வேலி அனல் மின் திட்டம், மெட்ராஸ் அணுமின் நிலையம், கல்பாக்கம் மற்றும் கூடங்குளம் அணுமின் நிலையம் ஆகிய திட்டங்களில் 50 விழுக்காடு அளவு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதே வழிமுறையினை கையாண்டு காற்றாலைகளில் இருந்து பெறப்படும் மொத்த மின்சாரத்தில் 50 விழுக்காட்டினை அதன் சொந்த மாநிலமான தமிழகத்திற்கே ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், கடலோரக் காற்றாலைகளிலிருந்து பெறப்படும் மின்சாரத்தினை பவர்கிரிட் கார்ப்பரேசன் ஆப் இந்தியா லிமிடெட் (PGCIL) மின்கட்டமைப்பின் வழியே வழங்காமல், மாநிலத்தின் மின் தொடரமைப்பு (STU) கட்டமைப்பின் வழியே வழங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI)

சுங்கக் கட்டணம் வசூலிப்பதில் உள்ள முரண்பாடுகள்

- கப்பலூர் மற்றும் கிருஷ்ணகிரி சுங்கச்சாவடிகளை நகராட்சிக்கு வெளியே மாற்றுதல்.
- கடினப் புருவங்களுடன்கூடிய 2 வழிச் சாலைகளுக்குச் சுங்கக்கட்டணம் வசூலிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும்.
- பரனூர் மற்றும் ஆத்தூர் சுங்கச்சாவடிகளில் சுங்கக்கட்டணம் 40 சதவீதமாகக் குறைக்கப்படவேண்டும்.
- 4 வழிச்சாலைக்கான வாகனகொள் திறனைக் கடந்த சாலைகளில் 6/8 வழிச்சாலையாக அகலப்படுத்தி தேவைப்படும் இடங்களில் போதுமான மேம்பாலங்கள் / வாகனக் கீழ்ப்பாலங்கள், சேவைச்சாலைகள் அமைக்கும் வரை சுங்கக்கட்டணம் வசூலிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

பாக்வளைகுடா பகுதிகளில் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்தல்

சர்வதேசக் கடல் எல்லைக் கோட்டைத் தாண்டிச் செல்லும் நிகழ்வுகளில் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால்

அவர்களது பாரம்பரிய கடற்பரப்பில் மீன்பிடிக்கும் போது அடிக்கடி கைது செய்யப்படுகின்றனர். நமது மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகள் இலங்கை அரசால் நீண்ட காலமாகச் சிறையில் அடைக்கப்படுவது தமிழக மீனவர்கள் மத்தியில் கவலையையும், பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே, பாக் வளைகுடா பகுதிகளில் மீனவர்களின் பாரம்பரிய மீன் பிடி உரிமைகளைப் பாதுகாத்து அவர்களின் பாதுகாப்பினையும் உறுதி செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கச்சத்தீவைத் திரும்பப் பெறுவது மற்றும் தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையைப் பாதுகாத்தல்

பாக்-நீரிணைப் பகுதியிலுள்ள இராமநாதபுரம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் வாழும் மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக நேரடியாக மீன்பிடித் தொழிலை நம்பியுள்ளனர். சர்வதேசக் கடல் எல்லைக்கோட்டைத் தாண்டிச் செல்லும் நிகழ்வுகளில் இலங்கைக் கடற்படையின் தாக்குதல் மற்றும் தாக்குதலுக்கு வழிவகுக்கும்போது இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு உறவுகளைச் சீர்குலைக்கும்.

எனவே, "கச்சத்தீவை" இந்தியாவிற்குத் திரும்பப் பெறுவது, பாக் - வளைகுடா பகுதியில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பது ஆகியவை தமிழ்நாடு அரசின் முதன்மையான குறிக்கோளாக உள்ளது.

எனவே, மீனவர்கள் எதிர்கொள்ளும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண கச்சத்தீவு மீதான இந்தியாவின் இறையாண்மையை மீட்டெடுப்பதன் மூலமே, பாரம்பரியக் கடற்பரப்பில் மீன்பிடிக்கும் உரிமையை மீட்டெடுக்க முடியும் என்பதைத் தமிழ்நாடு அரசு மீண்டும் வலியுறுத்துகிறது.

இலங்கைத் தமிழர்கள் விவகாரம்

ஈழத் தமிழர்களுக்குச் சமமான குடிமுறை மற்றும் அரசியல் உரிமைகள் அளிப்பது தொடர்பாக இலங்கை அரசினை வலியுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பருவம் தவறிய கனமழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.112.72 கோடி நிவாரண உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் உத்தரவு - 02.03.2023

- நடப்பாண்டு 2023 ஜனவரி கடைசி வாரத்திலும், பிப்ரவரி முதல் வாரத்திலும் பெய்த பருவம் தவறிய கனமழையால் பாதிக்கப்பட்டு, 33 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள நெற்பயிருக்கு உயர்த்தப்பட்ட நிவாரணமாக எக்டேருக்கு ரூ.20 ஆயிரமும்; நெல் அறுவடை தரிசில் விதைக்கப்பட்டுச் சேதமடைந்த இளம் பயறு வகைப் பயிர்களுக்கு இழப்பீடாக எக்டேருக்கு ரூ.3 ஆயிரமும் வழங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.02.2023 அன்று அறிவித்தார்.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவுரையின்படி அரியலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய 9 மாவட்டங்களில் வருவாய்த் துறை மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பயிர்ச்சேதக் கணக்கெடுப்பு மேற்கொண்டனர். இதில் 93,874 எக்டேர் பரப்பில் பயிரிடப்பட்ட நெற்பயிர் உள்ளிட்ட இதரப் பயிர்கள் 33 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் சேதமடைந்துள்ளதெனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.
- பருவம் தவறிய கனமழையால் பாதிப்பிற்குள்ளான விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1,33,907 விவசாயிகள் பயனடையும் வகையில், 93,874 எக்டேர் பரப்பில் பயிரிடப்பட்ட பயிர்களுக்கு, உயர்த்தப்பட்ட நிவாரணமாக மாநிலப் பேரிடர் நிவாரண நிதி மற்றும் மாநில நிதியிலிருந்து ரூ.112.72 கோடி வழங்க ஆணையிட்டுள்ளார். இந்த நிவாரண உதவியானது தொடர்புடைய விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்க விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுரையும் வழங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து, பாதிப்பிற்குள்ளான விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள் தலைமையில்,
செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரத்தில் நடைபெற்ற
சென்னை விமான நிலைய புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டடம்,
பல்வேறு திட்டங்களின் திறப்பு விழா மற்றும் அடிக்கல் நாட்டு விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை - 08.04.2023

கோவை மற்றும் மதுரையில் மெட்ரோ இரயில் திட்டங்களைச் செயல்படுத்திட ஒன்றிய அரசு விரைந்து ஒப்புதல் தரவேண்டும்

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

Firstly, I thank our Hon'ble Prime Minister for inaugurating and laying the foundation stone for important infrastructure projects in Tamil Nadu.

தமிழ்நாட்டின் தலைமகனான பேரறிஞர் அண்ணா பெயரிலான பன்னாட்டு விமான நிலையத்தில், ரூ.1,260 கோடி மதிப்பிலான புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டடம், சென்னை - கோவை இடையிலான வந்தே பாரத் அதிவிரைவு இரயில் சேவை, திருத்துறைப்பூண்டி - அகஸ்தியம்பள்ளி இரயில் சேவை எனத் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான சில முக்கிய திட்டங்களைத் தொடங்கி வைக்க வருகை தந்திருக்கிறார் நமது மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள்.

பல்வேறு இனங்களைச் சார்ந்த பல மொழிகளைப் பேசும் மக்கள் பரந்து வாழும் பன்முகத்தன்மைக் கொண்ட மாநிலங்களைக் கொண்ட இந்தியத் துணைக் கண்டத்தின்

ஒன்றிய அரசானது, மாநிலங்களின் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களைத் தொடர்ந்து தொய்வில்லாமல் நிறைவேற்றித் தரும்போதுதான் ஒட்டுமொத்த இந்தியாவும் வளம் பெறும்! இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் வகுக்கப்பட்ட கூட்டாட்சிக் கருத்தியலும் செழிக்கும்!

அந்த அடிப்படையில், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் திராவிட மாடல் அரசும் முனைப்போடு முயன்று வருகிறது. நெருக்கடியான நிதிநிலைச் சூழல் இருக்கும் போதிலும், நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது சாலைகள் – பாலங்கள் போன்ற கட்டமைப்புகளுக்கு மூலதனச் செலவாக இருந்த ரூ.33,068 கோடி, இந்த ஆண்டு ரூ.44,365 கோடியாக உயர்த்தியுள்ளோம்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் நெடுஞ்சாலை ஆணையத்தால் செயல்படுத்தப்பட்டுள்ள ரூ.2,423 கோடி மதிப்பிலான இரண்டு சாலைத் திட்டங்களைத் தொடங்கி வைத்து, ரூ.1,277 கோடி மதிப்பீட்டிலான இரண்டு திட்டங்களுக்கு மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் அடிக்கல் நாட்ட இருக்கிறார்கள்.

நமது மாநிலப் பொருளாதாரத்தின் இரத்த நாளங்களாக விளங்கும், சாலைக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான ஒன்றிய அரசின் முயற்சிகளுக்கு, தமிழ்நாடு அரசு தன்னுடைய முழு ஒத்துழைப்பைத் தொடர்ந்து வழங்கும்!

இந்தியாவில் உள்ள மாநிலங்களிலேயே, சிறந்த சாலைக் கட்டமைப்பைப் பெற்று, சாலைகள் அடர்த்திக் குறியீட்டில் முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு வளர்ந்துள்ளது. சாலைக் கட்டமைப்பை மேலும் மேம்படுத்துவதற்குப் பெரும் மூலதனச் செலவினங்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம்.

இருப்பினும், தமிழ்நாட்டின் பல பகுதிகளில், அடுத்தகட்ட வளர்ச்சிக்கு இன்றியமையாத சாலைக் கட்டமைப்புத் தேவைகள் தொடர்ந்து உயர்ந்தவாறு உள்ளன.

இத்தகைய தேவைகளை நிறைவு செய்வதற்கான முக்கிய திட்டங்களான,

- ❖ சென்னை - மதுரவாயல் உயர்மட்டச் சாலை,
- ❖ சென்னை - தாம்பரம் உயர்மட்டச் சாலை,
- ❖ கிழக்கு கடற்கரைச் சாலையை நான்கு வழிச்சாலை ஆக்குதல்,
- ❖ சென்னை – காஞ்சிபுரம் – வேலூர் நெடுஞ்சாலையையும், சென்னை – மதுரை தேசிய நெடுஞ்சாலையையும் ஆறு வழித்தடமாக மேம்படுத்துதல் போன்ற பல்வேறு முக்கிய திட்டங்கள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

I take this opportunity to request Our Hon'ble Prime Minister to direct the NHAI for the speeding up of ongoing road projects.

மாண்புமிகு பிரதமர் அவர்கள் இன்றையதினம் தொடங்கி வைத்துள்ள 'வந்தே பாரத்' இரயில் சேவை தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் வாழும் மக்களுக்குப் பேருதவியாக விளங்கும் என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

இதேபோல், தமிழ்நாட்டில் வாழும் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில், சென்னையிலிருந்து மதுரைக்கும் இந்த 'வந்தே பாரத்' இரயில் சேவை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைக்கிறேன். அதோடு 'வந்தே பாரத்' இரயில் சேவைக்கான டிக்கெட் கட்டணத்தை அனைவரும் பயணம் செய்வதற்கு ஏதுவாகக் குறைக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு இரயில்வே திட்டங்கள் குறித்த ஒரு முக்கிய கருத்தையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக விளங்கும் தமிழ்நாட்டுக்கு, பல ஆண்டுகளாகவே இரயில்வே துறையால் போதிய முக்கியத்துவம் வழங்கப்படவில்லை என்பதும் தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த கருத்து.

இது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டுக்கு அறிவிக்கப்பட்டத் திட்டங்களுக்கும், இரயில்வே வரவு செலவுத் திட்டத்தில் போதிய அளவு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படாததால், இந்தத் திட்டங்கள் அனைத்தும் பல ஆண்டுகளாக இன்னும் நிறைவடையாத நிலையில் இருக்கிறது.

எனவே, தமிழ்நாட்டுக்குப் புதிய இரயில்வே திட்டங்களை அறிவிப்பதோடு, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டையும் உயர்த்தித் தரவேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

I request our Hon'ble Prime Minister to increase the fund allocation for the railway projects in Tamil Nadu and to speed up the pending projects.

தமிழ்நாட்டின் அடுத்தகட்டப் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான புதிய நவீன விமான நிலையம் ஒன்றைப் பரந்தூரில் அமைப்பதற்கான பணிகளைத் தொடங்கியுள்ளோம்.

இதுதவிர கோவை, மதுரை, திருச்சி, தூத்துக்குடி போன்ற பல விமான நிலையங்களின் விரிவாக்கத்திற்குத் தேவைப்படும் நிலங்களுக்காக மாநில அரசால் ரூ.1,894 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிலம் எடுக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதி மக்களும் பயன்பெறக்கூடிய வகையில் இந்த விமான நிலைய விரிவாக்கப் பணிகளுக்கும் ஒன்றிய அரசு போதிய நிதி ஒதுக்கீடு செய்து பணிகளை விரைவுபடுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் மெட்ரோ இரயில் திட்டங்கள் குறித்து, மாண்புமிகு பிரதமர் அவர்களை ஒவ்வொரு முறை சந்திக்கும்போதும் நான் வலியுறுத்தி வந்துள்ளேன்.

சென்னையில் தற்போது சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வரும் மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகளுக்கான ஒன்றிய அரசின் பங்கினை வழங்குவதற்கான ஒப்புதல் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒன்றிய அரசில் நிலுவையிலே உள்ளது. அதனை மேலும் காலதாமதமின்றி உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்மையில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையில், ரூ.9,000 கோடிச்

செலவில் கோவையிலும், ரூ.8,500 கோடிச் செலவில் மதுரையிலும் மெட்ரோ இரயில் திட்டங்களைச் செயல்படுத்திட அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களுக்கான கருத்துருக்களும் விரைவில் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட உள்ளன. இவற்றுக்கும் ஒன்றிய அரசு விரைந்து ஒப்புதல் தர வேண்டும் என்று வேண்டுகிறேன்.

I request our Hon'ble Prime Minister for the speedy approval of funds for the second phase of Chennai Metro Rail Project works and support the newly announced Metro Rail for Madurai and Coimbatore also.

தமிழ்நாட்டில் இயங்கி வரும் 'திராவிட மாடல்' அரசானது, எத்தனையோ சமூக வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சமூகவளர்ச்சித் திட்டங்களோடு உட்கட்டமைப்புகளையும் சீர்செய்து வருகிறது. அனைத்துத் துறை வளர்ச்சியின் நோக்கம் கொண்ட அரசாக இருப்பதால், அனைத்துத் துறைக்கும் சமமான அளவில் நிதிகளை ஒதுக்கி திட்டங்களைத் தீட்டி வருகிறோம். அதற்குத் துணைபுரிவதாக ஒன்றிய அரசினுடைய திட்டங்கள் அமைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றியத்தில் உண்மையான கூட்டாட்சி இருக்க வேண்டுமானால், மாநிலங்கள் சுயாட்சித் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்பதை எங்களை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களும் வலியுறுத்தி வந்தார்கள். ஒரு மண்டபத்தின் மேல்பகுதியில் அனைத்துப் பளுவையும் வைத்துவிட்டு, பலமற்ற தூண்களை மண்டபத்தைத் தாங்குவதற்காக அமைப்பது கேலிக்குரியது அல்லவா என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கேட்டார்கள்.

மக்களுக்கு நெருக்கமானவை மாநிலங்களாக இருப்பதால் மக்கள் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய கடமை மாநிலங்களுக்கே அதிகம் இருக்கிறது. எனவே, மாநிலங்களின் நிதித் தேவைகளையும் மாநில மக்களின் எண்ணங்களை நிறைவேற்றும் திட்டங்களை நிறைவேற்றவும் ஒன்றிய அரசினுடைய ஒத்துழைப்பு மிகமிகத் தேவை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களும் ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சராக இருந்தவர் என்பதால் எனது கோரிக்கையின் உள்ளீட்டை அவரும் உணர்வார் என்று நான் கருதுகிறேன்.

Once again, I thank our Hon'ble Prime Minister for inaugurating many development projects for Tamil Nadu and conclude my speech.

நன்றி வணக்கம்!

தமிழ்நாடு அரசின்

நிதிநிலை அறிக்கை

2023 - 2024

மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர் **பழனிவேல் தியாகராஜன்** அவர்கள், 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்தார் - 20.03.2023

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி

(குறள் – 390)

★ நல்வாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

தமிழ் வளர்ச்சி, பண்பாடு

★ தாய் தமிழைக் காக்க, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இன்னுயிர் நீத்த மொழிப்போர் தியாகிகளான திருவாளர்கள் தாளமுத்து, நடராசன் ஆகியோரின் பங்களிப்பைப் போற்றும் வகையில், சென்னையில் நினைவிடம் ஒன்று அமைக்கப்படும்.

★ இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தையும், முற்போக்குச் சமத்துவ இந்தியாவின் சிற்பியுமான அண்ணல் அம்பேத்கரின் சிந்தனைகளைப் பரப்புவதற்காக, அவரது படைப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப்படும். இதற்காக அரசால் ரூ.5 கோடி மானியமாக வழங்கப்படும்.

★ தொழில்நுட்பத் துறையில், தமிழ் மொழியின் பயன்பாட்டினை அதிகரிப்பதன் மூலம், தமிழ் மொழி உலக மொழியாக வளர்வதற்கு, புகழ்பெற்ற வல்லுநர்களைக் கொண்டு, 'தமிழ்க் கணினி பன்னாட்டு மாநாடு' நடத்தப்படும். தமிழ்மொழியில் பெருமளவில் மென்பொருட்கள் உருவாக்கப்படுவதை இது ஊக்குவிக்கும்.

★ கடல் தாண்டி கொடி நாட்டிய தமிழர் பெருமை கூறும் பண்பாட்டு விழுமியங்களை எடுத்தியம்பும் வகையில், தமிழர் பண்பாட்டுத் தலங்களை இணைக்க தமிழ்ப் பண்பாட்டுக் கடல்வழிப் பயணங்கள் ஊக்குவிக்கப்படும். இந்தப் பயணங்கள், நம் இனத்தின் செம்மையான வரலாறு, இலக்கியம், கலை, பண்பாடு, கைவினைப்பொருட்கள், உணவு வகைகளை வெளிக்கொணர்வதோடு, தமிழ்நாட்டின் புகழை எட்டுத்திக்கும் பரப்பும்.

★ நமது தாய்மொழிக்கு ஆற்றிய அளப்பரிய பங்களிப்பினைக் கருத்திற்கொண்டு அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டையை அரசு வழங்கி வருகிறது. வரும் ஆண்டில், மேலும், 591 அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு இச்சலுகையை அரசு வழங்கும்.

★ பார் போற்றும் நம் கலைப் பண்பாட்டினை இளைய தலைமுறையினர் அறிந்து, மகிழும் வகையில், சென்னையில் அனைத்துத் தரப்பு மக்களின் வரவேற்பினைப் பெற்றுள்ள சங்கமம் கலை விழா, வரும் ஆண்டில் மேலும் எட்டு முக்கிய நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும். நாட்டுப்புறக் கலைகளையும், கலைஞர்களையும் பேணி வளர்ப்பதற்கும், தமிழ் மக்களின் பண்பாட்டு விழுமியங்களின் பகிர்வினைக் கொண்டாடுவதற்கும் நல்வாய்ப்புக்களை இவ்விழாக்கள் ஏற்படுத்தும். இதற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.11 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

★ நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்கவும், இப்பண்பாடு தொடர்ந்து வருங்காலங்களிலும் செழித்தோங்கவும், மாநிலம் முழுவதும் 25 பகுதி நேர நாட்டுப்புறக் கலைப் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும்.

★ கடல் பல கடந்து, சமர் பல வென்று, இந்தியாவிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் பெரும் நிலப்பரப்பைப் பல நூற்றாண்டுகள் ஆட்சி செய்த பெருமைக்குரியது சோழப் பேரரசு. தமிழரின் கலை, இசை, கட்டடக்கலை, சிற்பக்கலை, கைவினை, நடனம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளும் சோழர் காலத்தில் புகழின் உச்சத்தை அடைந்து பாரெங்கும் பரவின. உலகாண்ட சோழர்களின் பங்களிப்பைப் போற்றவும், அக்காலக் கலைப்பொருட்கள், நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கவும், தஞ்சாவூரில் "மாபெரும் சோழர் அருங்காட்சியகம்" ஒன்று அமைக்கப்படும்.

இலங்கைத் தமிழர் நலன்

★ இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில், அத்தியாவசியப் பொருட்களை அளித்து உதவி செய்வதற்கான ஒப்புதலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசிடம் பெற்று, மூன்று கப்பல்களில், 40,000 டன் அரிசி, 500 டன் பால் பவுடர், 102 டன் மருந்துப் பொருட்கள் ஆகியன, ரூ.197 கோடிச் செலவில் இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து ஒன்றிய அரசை வலியுறுத்தி வருகின்றோம். இந்தக் கோரிக்கை நிறைவேறும் வரையிலும் அவர்களுக்கு, பாதுகாப்பான, தரமான தங்குமிடங்களை வழங்கும் நோக்கத்துடன் மறுவாழ்வு முகாம்களில் 7,469 புதிய வீடுகள் கட்டப்படும் என இந்த அரசு அறிவித்திருந்தது. இதன் முதற்கட்டமாக, 3,510 வீடுகளுக்கான பணிகள் ரூ.176 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்டமாக மீதமுள்ள 3,959 வீடுகளைக் கட்ட, வரும் நிதியாண்டில் ரூ.223 கோடியை அரசு வழங்கும்.

முன்னாள் படை வீரர்கள் நலன்

★ தம் இன்னுயிர் ஈந்து நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்கும் படை வீரர்களின் வீரத்தையும் தியாகத்தையும் போற்றும் வகையில், போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளின் போது உயிர்த் தியாகம் செய்த தமிழ்நாட்டைச் சேர்ந்த படை வீரர்களின் குடும்பத்தினருக்கு மாநில அரசால் வழங்கப்படும் கருணைத் தொகை ரூ.20 இலட்சத்திலிருந்து, இருமடங்காக உயர்த்தி ரூ.40 இலட்சமாக வழங்கப்படும். மேலும், வீரதீரச் செயல்களுக்கான உயர் விருதுகளைப் பெறும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பாதுகாப்புப் படையினருக்குத் தற்போது வழங்கப்படும் பரிசுத்தொகையும் நான்கு மடங்காக உயர்த்தி வழங்கப்படும்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு

★ தரமான கல்வியும், மருத்துவ வசதிகளும் அனைத்து மக்களுக்கும் கிடைத்திடச் செய்வதே இந்த அரசின் அடிப்படை நோக்கம். இதனைக் கருத்தில் கொண்டே, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர்க் காப்போம் போன்ற பல முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதோடு, தமிழ்நாட்டின் பொது சுகாதாரக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான பல்வேறு பணிகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகின்றது. இந்த அரசின் முன்னோடித் திட்டமான 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தில், தொற்றா நோய்களைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து, குணப்படுத்த சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கும் தொழிலாளர்களின் நலனில் தனி அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, தொழிற்சாலைகளிலும், கட்டுமானம் உள்ளிட்ட அமைப்புசாராத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தொற்றா நோய்களால் பாதிக்கப்படுவதைத் தடுக்க ஒரு சிறப்பு முயற்சியைத் தொடங்க உள்ளது. இதன்படி, முதற்கட்டமாக 711 தொழிற்சாலைகளிலுள்ள 8.35 இலட்சம் தொழிலாளர்களுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் விரிவுபடுத்தப்படும். உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற தொற்றா நோய்களுக்கு முக்கியத்துவம் அளித்து, இந்த மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். இத்திட்டத்தில் புலம்பெயர் தொழிலாளர்களும் பயனடைவார்கள்.

★ முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில், குடும்பம் ஒன்றிற்கு ஆண்டுக்கு ரூ.5 இலட்சம் காப்பீடு வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில், இதுவரை இல்லாத அளவிற்கு அதிகபட்சமாக 11.82 இலட்சம் நோயாளிகளுக்கு ரூ.993 கோடி மதிப்பிலான உயிர்காக்கும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன.

★ கிண்டி கிங் நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் 1,000 படுக்கை வசதி கொண்ட 'கலைஞர் நினைவுப் பன்னோக்கு மருத்துவமனை' இந்த ஆண்டு திறந்து வைக்கப்படும். ரூ.1,020 கோடிச் செலவில் மதுரை, கோயம்புத்தூர், கீழ்ப்பாக்கம் ஆகிய இடங்களிலுள்ள மூன்று அரசு மருத்துவக் கல்லூரி வளாகங்களில் கட்டப்பட்டு வரும் புதிய உயர்மருத்துவக் கட்டடங்களும் விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

★ திருச்சிராப்பள்ளி மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களின் உயர் மருத்துவச் சிகிச்சைத் தேவைகளை நிறைவு செய்து வரும் மகாத்மா காந்தி நினைவு அரசினர் மருத்துவமனையில், ரூ.110 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும். வடசென்னைப் பகுதி மக்களின் மருத்துவத் தேவையை நிறைவு செய்யும் வகையில், அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பன்னோக்கு மருத்துவப் பிரிவும், செவிலியர் பயிற்சி பள்ளி மற்றும் விடுதிக்குப் புதிய கட்டடங்களும் ரூ.147 கோடிச் செலவில் கட்டப்படும்.

★ மாநிலத்தின் முதல் அரசு சித்த மருத்துவக் கல்லூரி பாளையங்கோட்டையில் 1964ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்கல்லூரியில் தற்போது 100 இளங்கலைப் பட்டதாரிகளும், 60 முதுகலை பட்டதாரிகளும் பயின்று வருகின்றனர். நாள்தோறும் ஏறத்தாழ 1,000 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு

வருகிறது. இந்தக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான பணிகள் ரூ.40 கோடிச் செலவில் மேற்கொள்ளப்படும். வரவு-செலவுத் திட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூ.18,661 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வி

★ இந்த அரசு மேற்கொண்ட பல்வேறு முன்னெடுப்புகளால் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை கடந்த இரண்டு ஆண்டுகளில் கணிசமாக உயர்ந்துள்ளது. எனவே, அரசுப் பள்ளிகளின் கட்டமைப்பை மேம்படுத்தவும், புதிய கட்டடங்கள் கட்டிடவும் ரூ.7,000 கோடிச் செலவில், 'பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை' அரசு தொடங்கியுள்ளது. நடப்பாண்டில், ரூ.2,000 கோடிச் செலவில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வரும் நிதியாண்டில், புதிய வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிப்பறைகள் என மொத்தம் ரூ.1,500 கோடிச் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

★ 'எண்ணும் எழுத்தும் திட்டமானது' 2025ஆம் ஆண்டுக்குள் ஒன்று முதல் மூன்றாம் வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அனைவரும் அடிப்படைக் கல்வியறிவும் எண்கணிதத் திறனும் அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பின் அடிப்படையில், வரும் நிதியாண்டில் ரூ.110 கோடிச் செலவில் நான்காம் ஐந்தாம் வகுப்புகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

★ அறிவைப் பரவலாக்கிக் கடைக்கோடி மனிதருக்கும் கொண்டு சேர்ப்பதன் மூலமே சமூக நீதித் தத்துவம் முழுமை அடைகிறது. அந்த அடிப்படையில் தலைநகர் சென்னை மட்டுமன்றித் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகத் திருவிழாக்களும் ஐந்து இலக்கியத் திருவிழாக்களும் வெற்றிகரமாக, இவ்வாண்டு நடத்தப்பட்டன. மகத்தான இம்முயற்சியை வரும் ஆண்டில் ரூ.10 கோடி நிதியுடன் தொடர உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். முதல் சென்னை சர்வதேசப் புத்தகக் கண்காட்சியினை 24 நாடுகளின் பங்கேற்புடன் 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அரசு வெற்றிகரமாக நடத்தியது. தமிழ்நாடு மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வெளியீட்டாளர்களிடையே அறிவுப் பரிமாற்றம் மற்றும் பதிப்புரிமைப் பரிமாற்றத்திற்கு வழி வகுக்கும் 355 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன. இந்தச் சர்வதேச புத்தகக் கண்காட்சி வரும் ஆண்டிலும் நடத்தப்படும்.

★ பொது வாழ்வில் அனைத்துத் தளங்களிலும் சமூகநீதியையும் சமத்துவத்தையும் சமஉரிமையையும் நிலைநாட்டிட கல்வி நிலையங்களின் பங்கு மிகவும் இன்றியமையாதது. இதன் அடிப்படையில் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் எண்ணும் எழுத்தும், மாதிரிப் பள்ளிகள், திறன்மிகு பள்ளிகள், உயர்தர ஆய்வகங்கள், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் போன்ற பல்வேறு முன்னோடி முயற்சிகளைக் கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. இத்திட்டங்களின் பயன்கள் அனைத்து மாணவர்களையும் சென்றடைய வேண்டியது அவசியமாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 19.08.2021, 12.04.2022 ஆகிய நாட்களில் நடைபெற்ற மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டங்களில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளைப் பள்ளிக்கல்வித்துறை மூலம் நடத்தவும், பராமரிக்கவும், கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. கல்விப் பெருவழியில் நமது இலட்சியமான சமூகநீதியை அடைந்திட, பல்வேறு துறைகளின்கீழ்ச் செயல்படும் பள்ளிகளின் கல்வித் தரத்தை உயர்த்தவும், அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வி வழங்கப்படுவதை உறுதி செய்யவும் வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு, ஆதிதிராவிடர்

மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை, வனத்துறை போன்ற பல்வேறு துறைகளின்கீழ்ச் செயல்படும் அனைத்து பள்ளிகளும் பள்ளிக் கல்வித் துறையின்கீழ்க் கொண்டு வரப்படும். இப்பள்ளிகளில் தற்போது பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் அனைத்துப் பணிப் பயன்களும் பாதுகாக்கப்படும்.

★ தரவுகள் அடிப்படையிலான ஆளுகை மூலம், திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள குறைபாடுகளைக் களைய அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பல்வேறு அரசுத் துறைகள் மூலம் வழங்கப்படும் கல்வி உதவித்தொகையில் உள்ள தேவையற்ற தாமதங்களைக் குறைக்கவும், தகுதிவாய்ந்த மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை உரிய நேரத்தில் நேரடிப் பணப்பரிமாற்ற முறையில், அவர்களது வங்கிக் கணக்கில் செலுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் ஒருங்கிணைந்த கல்வி உதவித்தொகை இணையதளம் ஒன்று உருவாக்கப்படும்.

★ சங்கத்தமிழ் வளர்த்த மதுரையில் இரண்டு இலட்சம் சதுர அடிப் பரப்பளவில் எட்டுத் தளங்களுடன் நவீன வசதிகளைக் கொண்ட மாபெரும் நூலகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. குழந்தைகள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், போட்டித் தேர்வு எழுதும் இளைஞர்கள். இல்லத்தரசிகள், மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் என அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில், இந்த நூலகம் அமைக்கப்பட்டு வருகிறது. குழந்தைகளைக் கவரும் வண்ணமயமான நூலகச் சூழல், போட்டித் தேர்வு மாணவர்களுக்கான இணைய வசதியுடன் கூடிய சிறப்புப் பிரிவு, பார்வைத் திறன் குறைந்த வாசகர்களுக்காக பிரெய்லி வகை நூல்கள், குளிர்சாதன வசதி கொண்ட கூட்ட அரங்குகள், தென்தமிழகத்தின் பண்பாட்டைப் பறைசாற்றும் வகையில் கலை அரங்கம் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகள், பேச்சுகள் இடம் பெறும் வகையில் எழிலார்ந்த கூடம் உள்ளிட்ட சிறப்பம்சங்கள் இம்மாபெரும் நூலகத்தில் இடம் பெற்றிருக்கும்.

★ முதற்கட்டமாக, இந்த நூலகத்தில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இலக்கியம், பண்பாடு, அறிவியல், பொறியியல், சட்டம், மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் 3 இலட்சத்து 50 ஆயிரம் நூல்கள் இடம்பெறும். தென்தமிழ்நாட்டின் அறிவாலயமாகத் திகழப்போகும் இந்நூலகம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுத் தொடக்க நிகழ்வாக, தமிழ்ச் சமுதாயத்திற்கு அவர் ஆற்றிய பணிகளைப் போற்றும் வகையில், "கலைஞர் நூற்றாண்டு நூலகம்" என்ற பெயரைத் தாங்கி, வரும் ஜூன் மாதம் முதல் வாசகர்களை வரவேற்கும். வரவு-செலவுத் திட்டத்தில் பள்ளிக்கல்வித் துறைக்காக ரூ.40,299 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>உயர்கல்வியும் திறன்மேம்பாடும்</u>

★ மனிதவளமே மாநிலத்தின் மாபெரும் செல்வம் என்பதை உணர்ந்துள்ள இந்த அரசு, அதனை மேம்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள, திறன்மிக்க பணியாளர்களே பன்னாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கு ஒரு முக்கியக் காரணி என்பதை நன்கு அறிந்துள்ளோம். ஆகவே, மின்னல் வேகத்தில் மாறி வரும் தொழில் சூழலுக்குத் தேவைப்படும் மனிதவளத்தை உருவாக்குவதற்கு, ரூ.2,877 கோடிச் செலவில், 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைத் தலைசிறந்த திறன் மையங்களாக மாற்றும் திட்டம் நடைபெற்று வருகிறது. வரும் கல்வியாண்டிலேயே, இப்பணிகள் முடிக்கப்பட்டு, புதிய பாடப் பிரிவுகளில் மாணவர் சேர்க்கை நடைபெறும்.

★ இதன் அடுத்த கட்டமாக, தொழில் துறையினருடன் இணைந்து தொழில்துறை 4.0 தரத்திற்கு ஏற்ப அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளைத் 'திறன்மிகு மையங்களாக' மாற்றும் திட்டத்தை வரும் ஆண்டில் அரசு தொடங்கும். இக்கல்வி நிறுவனங்களில், கட்டமைப்பை மேம்படுத்துவது, தொழில்சார் பாடத்திட்டங்களை உருவாக்குவது, ஆசிரியர்களின் திறன் மேம்பாடு, மாணவர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவது ஆகியவை இத்திட்டத்தின் குறிக்கோள்களாகும். இத்திட்டத்தில், 54 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் ரூ.2,783 கோடி மதிப்பீட்டில் 'திறன்மிகு மையங்களாகத்' தரம் உயர்த்தப்படும்.

★ தொழிற் பயிற்சி நிறுவனங்களிலும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த திறன் பயிற்சியை வழங்குதல், திறமையான பணியாளர்களை உருவாக்குதல் போன்ற நோக்கங்களுடன், ரூ.120 கோடிச் செலவில் சென்னை அம்பத்தூரில் 'தமிழ்நாடு உலகளாவிய புதுமை முயற்சிகள் மற்றும் திறன் பயிற்சி மையம்' (TN-WISH) அமைக்கப்படும். இந்த மையத்தில், இயந்திர மின்னணுவியல் (Mechatronics), இணைய வழிச் செயல்பாடு (Internet of things), அதிநவீன வாகனத் தொழில்நுட்பம் (Advanced Automobile Technology), துல்லியப் பொறியியல் (Precision Engineering), உயர்தர வெல்டிங் (Advanced Welding) போன்ற தொழில்நுட்பங்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்படும்.

★ 10 இலட்சம் மாணவர்கள், இளைஞர்களுக்குத் தொழில் சார்ந்த திறன்களில் பயிற்சி அளித்து நல்ல வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்காக "நான் முதல்வன்" என்ற தொலைநோக்குத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு தொடங்கினார்கள். நான் முதல்வன் திட்டம் அனைத்துப் பொறியியல் மற்றும் கலை, அறிவியல் கல்லூரிகளிலும் முன்னணித் தொழில் நிறுவனங்களின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. வேலைவாய்ப்புகளை மேம்படுத்த தொழில்துறைக்குத் தேவையான பயிற்சித் திட்டங்களை உள்ளடக்கி கல்விப் பாடத் திட்டங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் மொத்தமாகச் சுமார் 12.7 இலட்சம் மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 12,582 பொறியியல் ஆசிரியர்களுக்கும், 7,797 கலை மற்றும் அறிவியல் ஆசிரியர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு வரவு-செலவு திட்டத்தில் ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ திறன் பயிற்சி கட்டமைப்பைப் பெருமளவில் அதிகரிக்க, தற்போதுள்ள தொழிற்சாலைகள் தொழிற்பயிற்சிக் கூடங்களாகப் பயன்படுத்தப்படும். இளைஞர்களுக்குத் தொழிற்சாலைகளிலேயே பயிற்சி அளித்திட தொழில் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும். தொழிற்சாலைகளில் திறன் பள்ளிகள் (Factory Skill Schools) என்ற இத்திட்டத்திற்கு இந்த ஆண்டில், ரூ.25 கோடி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் மூன்றாவது பெரும் தொழில் தொகுப்பாக உருவெடுத்து வரும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சூளகிரி சிப்காட் தொழில் பூங்காவில் ரூ.80 கோடி மதிப்பீட்டில் அதிநவீனத் திறன் மேம்பாட்டு மையம் நிறுவப்படும்.

★ பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம் கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்மூலம் அரசுக் கல்லூரிகளில் கட்டமைப்பு, அடிப்படை வசதிகள் ரூ.1,000 கோடிச் செலவில் ஐந்தாண்டுகளில் மேம்படுத்தப்படவுள்ளன. நடப்பாண்டில் 26 பல்தொழில்நுட்பக் கல்லூரிகள், 55 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய வகுப்பறைகள், கூடுதல் ஆய்வகங்கள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் வரும் நிதியாண்டிலும் ரூ.200 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

★ கடந்த சில ஆண்டுகளாக ஒன்றிய குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டிலிருந்து தேர்ச்சி பெறுபவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இந்தப் போக்கை மாற்றியமைக்க, குடிமைப் பணிகள் தேர்வு மாணவர்களுக்கு மேம்பட்டப் பயிற்சி மற்றும் பயிற்சிப் பொருட்கள் வழங்கும் திட்டத்தை அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியுடன் இணைந்து தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் செயல்படுத்தும். ஒவ்வோராண்டும் மதிப்பீட்டுத் தேர்வு மூலம் 1,000 மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் முதல்நிலைத் தேர்விற்குத் தயாராகுவதற்காக மாதத்திற்கு ரூ.7,500 வீதம் 10 மாதங்களுக்கு ஊக்கத்தொகை

வழங்கப்படும். முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு ரூ.25,000 ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

★ இந்த திட்டத்திற்காக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கு 2023-2024ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தமாக, உயர்கல்வித் துறைக்கு ரூ.6,967 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு

★ நாளைய சமுதாயம் இன்றைய இளைஞர்களின் பொறுப்பு என்பதை உணரும் இந்த அரசு அவர்களை வலிமையும் துடிப்பும் மிக்கவர்களாக மாற்றிட முனைந்துள்ளது. இந்த வகையில், சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியைச் சென்னையில் வெற்றிகரமாக நடத்தியும், மாநிலமெங்கும் முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகளை நடத்தியும் விளையாட்டுத் துறைக்குப் புது உத்வேகம் அளித்துள்ளது. இதன் அடுத்த கட்டமாக, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் சென்னையில் ஓர் உலகளாவிய அதிநவீன விளையாட்டு நகரத்தை இந்த அரசு அமைக்கும். இது விளையாட்டுக்களின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதுடன், முன்னணி விளையாட்டுப் போட்டிகளின் முனையமாக அமையும். இதற்கு, பன்னாட்டு வல்லுநர்களைக் கொண்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

★ ரூ.25 கோடி மதிப்பீட்டில் நவீன விளையாட்டு வசதிகளுடன் சென்னை ஜவஹர்லால் நேரு திறந்தவெளி விளையாட்டு அரங்கத்தை விரிவாகச் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலன்

★ சமூக நீதியையும், சமத்துவம் நோக்கிய வளர்ச்சியையும் அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்டுள்ள இந்த அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் வளர்ச்சிக்கு உயர் முன்னுரிமை அளித்து வருகின்றது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் மொத்த உயர்கல்விச் சேர்க்கையை அதிகரிக்கவும், அவர்களுக்குப் பாதுகாப்பான, தரமான தங்குமிட வசதிகளை வழங்கவும்,மதுரை,கோயம்புத்தூர்,திருச்சிராப்பள்ளி, நீலகிரியில் அம்மாணவர்கள் பயன்பெறும் வகையில் நான்கு புதிய விடுதிகள் நவீன வசதிகளுடன் ரூ.100 கோடி மொத்த மதிப்பீட்டில் கட்டப்படும். இந்த விடுதிகளின் பராமரிப்புப் பணிகள் நிபுணத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும்.

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்டம் செவ்வனே செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய தனிச் சட்டம் ஒன்றை இயற்ற வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. இதனை ஏற்று, இத்துணைத் திட்டத்தின் செயல்பாட்டிற்கு வலுசேர்க்கும் விதமாக ஒரு சிறப்புச் சட்டத்தை இந்த அரசு இயற்றும். உரிய ஆலோசனைக்குப் பின்னர், அடுத்த சட்டமன்ற கூட்டத்தொடரில் இதற்கான சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்படும்.

★ பாதாள சாக்கடைகளையும், கழிவுநீர்த் தொட்டிகளையும் மனிதர்களே சுத்தம் செய்யும் நடைமுறை, மானுடத்திற்கே களங்கமாய் விளங்குகிறது. இதனால் ஏற்படும் உயிரிழப்புகளை முற்றிலும் தடுப்பதற்காக, ஒரு புதிய திட்டத்தை அண்மையில் இந்த அரசு தொடங்கியுள்ளது. தூய்மைப் பணியாளர்களைத் தொழில்முனைவோர்களாக மாற்றி, நவீன இயந்திரங்கள் வாங்க வழிவகை செய்து, இத்திட்டம் தூய்மைப் பணிகளைப் பாதுகாப்பாக மேற்கொள்வதுடன், அவர்கள் வருவாய் ஈட்டிடவும் வழிவகுக்கும். முதற்கட்டமாக, இப்பணிபுரியும்போது இறக்க நேரிட்ட இப்பணியாளர்களின் குடும்பங்களுக்கும்,

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு ரூ.3,513 கோடி ஒதுக்கீடு"

இப்பணியில் தற்போது ஈடுபட்டுள்ள நபர்களுக்கும் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து பெருநகரச் சென்னை பகுதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். தேவையான திறன் பயிற்சியுடன் இயந்திரங்களையும், பாதுகாப்புக் கருவிகளையும் கொள்முதல் செய்திடவும் சிறப்பு மானியம் வழங்கப்படும். இந்த முன்னோடி முயற்சியின் அடிப்படையில், இத்திட்டம் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்படும்.

★ அரசு வழங்கும் சுயதொழில் ஊக்குவிப்பு மானியங்கள் மூலம் பயன்பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் எண்ணிக்கை, மிகவும் குறைவாகவே உள்ளது. ஆகவே, ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினத் தொழில்முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வண்ணம், வரும் நிதியாண்டிலிருந்து 'அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்' என்னும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் இயந்திரங்களையும், கருவிகளையும் கொள்முதல் செய்வதற்காக, 35 சதவீதம் மூலதன மானியமும் 6 சதவீதம் வட்டி மானியமும் வழங்கப்படும். 2023-2024ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

★ புதிரை வண்ணார்கள் நல வாரியத்திற்குப் புத்துயிர் அளித்து, வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள், நலப் பணிகளை மேற்கொள்ள ரூ.10 கோடி வழங்கப்படும்.

★ நகர்ப்புரப் பகுதிகளிலும் ஊரகப் பகுதிகளிலும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை உறுதி செய்து, முழுமையான சமூக-பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த 'அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்' நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டம் வரும் ஐந்தாண்டுகளில் ரூ.1,000 கோடிச் செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.

★ இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு ரூ.3,513 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் நலன்

★ மாற்றுத்திறனாளிகள் என்ற பெயரையே முத்தமிழறிஞர் கலைஞர்தான் சூட்டினார் என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். இந்தத் துறை மிக முக்கியமானது என்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது நேரடி கட்டுப்பாட்டின்கீழ் வைத்து, பணிகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறார். உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.1,763 கோடி மதிப்பில், மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைத் திட்டம் (RIGHTS Project) செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகக் கூடிய தடையற்ற கட்டமைப்புக்களை அமைத்து, தொழில் பயிற்சி மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயம் ஒன்றை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம், 2023-2024ஆம் ஆண்டில் 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். உடல் குறைபாடு மதிப்பீட்டுச் சான்றளித்தல், ஆரம்ப நிலை சிகிச்சை போன்ற சேவைகளைக் கோட்ட அளவிலேயே வழங்க 39 ஒருங்கிணைந்த சேவை மையங்கள் அமைக்கப்படும். மேலும், வீட்டிலேயே சிகிச்சை அளிப்பதற்காகவும் பல்வேறு நலத்திட்டங்களில்

சலுகைகளைப் பெற உதவுவதற்காகவும் தன்னார்வலர்களைக் கொண்ட 150 அண்மை மையங்கள் உருவாக்கப்படும்.

★ மாநிலம் முழுவதும் 6.84 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் அவர்களின் ஓய்வூதியத்தை ரூ.1,000த்திலிருந்து ரூ.1,500ஆகவும், கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித்தொகையை ரூ.1,500த்திலிருந்து ரூ.2,000 ஆகவும் உயர்த்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டுள்ளார்கள். இதற்கென, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.1,444 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ மாற்றுத்திறனாளிகளின் தொழில் முன்னேற்றத்திற்காகக் கடன் உத்தரவாதம், வட்டி மானியம் ஆகியவற்றை மாநில அரசு வழங்கி வருகிறது. இதன் பயனாக, 11,155 மாற்றுத்திறனாளிகளுக்குத் தேசிய மாற்றுத்திறனாளிகள் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக ரூ.50 கோடி கடனுதவியை இந்த ஆண்டில் வழங்கி, நாட்டிலேயே முதல் இடத்தில் தமிழ்நாடு விளங்குகிறது.

★ அரசுத் திட்டங்களின் பலன்கள் முழுமையாக மாற்றுத்திறனாளிகளைச் சென்றடைய, மாற்றுத்திறனாளிகள் பற்றிய ஒரு விரிவான தரவுத்தளத்தை அரசு உருவாக்கி வருகிறது. இதன் முதற்கட்டமாக, பல்வேறு அரசு நலத்திட்டங்களில் பயன்பெறும் 9,08,000 பேர்களின் விவரங்கள் கொண்ட தரவுத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்

★ கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, தரமான உணவினை வழங்கி பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளின் செயல்பாட்டை மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில், ரூ.36.25 கோடி மதிப்பீட்டில் ஒன்பது விடுதிகளின் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மாணவர்களின் தேவைக்கேற்பப் பதினைந்து பள்ளி விடுதிகள் கல்லூரி விடுதிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

★ இம்மதிப்பீடுகளில் பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வி உதவித்தொகை வழங்குவதற்காக ரூ.252 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்குவதற்காக ரூ.305 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைக்கு ரூ.1,580 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகள்

★ பண்டைத் தமிழ் மரபின் தொடர்ச்சியாக, தமிழ்ச் சமுதாயத்தை வழிநடத்திய தலைவர்கள் பலரும், வறுமையை அகற்றிடவும், மாணவர்களின் கல்வி நலனைப் பாதுகாத்திடவும் பல முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தி வந்துள்ளனர். அந்த வகையில், 1920ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சி மன்றத் தலைவராக இருந்த சர். பிட்டி தியாகராயர் அவர்களால் இந்தியாவிலேயே முதன்முறையாக மதிய உணவுத் திட்டம் சென்னையில் கொண்டு வரப்பட்டது. பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது மாநில அளவில் கொண்டுவரப்பட்ட மதிய உணவுத் திட்டம், தமிழ்நாட்டின் கல்வி வரலாற்றில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அதைத் தொடர்ந்து புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் சத்துணவுத் திட்டம், முத்தமிழறிஞர் கலைஞரின் சத்துணவில் முட்டைகள் வழங்கும் திட்டம் என, தொடர்ந்து பசிப்பிணி அகற்றும் முயற்சிகள் தொடர்ந்தன.

★ இந்தச் சூழ்நிலையில், தற்போது தமிழ்நாட்டின் அரசுப் பள்ளிகளில் பயிலும் சில குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் பாதிக்கப்படுவதும், அவர்களின் வளர்ச்சித் தடைபடுவதும் தெரியவந்தது. பல குழந்தைகள் காலை உணவு அருந்தாமல் பள்ளிக்கு வருவதால், அவர்கள் கல்வியில் கவனம் செலுத்த இயலாமல் போய்விடும் வாய்ப்பு இருப்பதை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சமூகநீதியை உள்ளடக்கிய திராவிட மாடல் அரசின் மகத்தான கனவுத் திட்டமான 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினைக்' கடந்த ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாளன்று மதுரையில் தொடங்கி வைத்து, வரலாற்றில் முத்திரை பதித்திருக்கிறார்.

★ முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 1,937 பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 1,48,315 மாணவர்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட 1,543 தொடக்கப் பள்ளிகளில் 1,319 பள்ளிகளில் மாணவர்களின் வருகை அதிகரித்துள்ளது. இதில், 624 பள்ளிகளில் 10 சதவீதமும், 462 பள்ளிகளில் 20 சதவீதமும், 193 பள்ளிகளில் 30 சதவீதமும் என மாணவர் வருகை அதிகரித்துள்ளது. திருப்பத்தூர், பெரம்பலூர், அரியலூர், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் மாணவர்கள் வருகை அதிகரித்துள்ளது. 'பள்ளிக்கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லாக் குழந்தைகளும் பசியின்றிக் கல்வியறிவு பெற்றிடவும் எந்தத் தியாகத்தையும் செய்திடுவோம்' என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உன்னத நோக்கத்தைச் செயல்படுத்திட, வரும் கல்வி ஆண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள 30,122 அரசுத் தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை பயிலும் 18 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இந்த நல்ல நோக்கத்திற்கு வரும் நிதியாண்டில் ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ ஒரு சமுதாயம் செழித்துத் தன்னிறைவுடன் திகழ வேண்டுமென்றால் அச்சமுதாயத்திலுள்ள

> **மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்குவதற்காக ரூ.305 கோடி ஒதுக்கீடு**

பெண்கள் கல்வியறிவு பெற்றவர்களாய் இருப்பது மிகவும் அவசியம். இதனை நன்குணர்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெண் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு 1989ஆம் ஆண்டு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித்தொகை திட்டத்தினை அறிமுகப்படுத்தினார். தமிழ்நாட்டில் பல ஏழை குடும்பங்களைச் சேர்ந்த மாணவியர் 12ஆம் வகுப்பு முடித்தவுடன் உயர்கல்வியைத் தொடர முடியாமல் போகிறது என்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு இத்திட்டத்தை மாற்றியமைத்தது. அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர்கல்வியில் சேர்ந்த அனைத்து மாணவிகளுக்கும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1,000 வழங்கப்படுகிறது. தற்போது, ஒவ்வொரு மாதமும் 2.20 இலட்சம் மாணவிகள் இத்திட்டத்தின்கீழ்ப் பயனடைந்து வருகின்றனர். 2021-2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, உயர்கல்வியில் முதலாம் ஆண்டில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை நடப்பு ஆண்டில் 29 சதவீதம் அதிகரித்துள்ளது. அதாவது, கூடுதலாக 20,477 மாணவியர்கள் சேர்ந்துள்ளனர். பள்ளிப்படிப்பு முடித்தபின் உயர்கல்வியைத் தொடராத பல மாணவிகள்கூட தற்போது கல்லூரிகளில் சேர்ந்திருப்பது இத்திட்டத்தின் வெற்றிக்குச் சான்றாகும்.

★ 1989ஆம் ஆண்டில் நாட்டுக்கே முன்னோடியாக, தருமபுரியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சுயஉதவிக் குழு இயக்கம் ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரோடி, இன்று ஒரு மகத்தான மக்கள் இயக்கமாகத் திகழ்கிறது. மகளிர் சுயஉதவிக் குழுக்களின் திறன் மேம்பாட்டிற்கும் வாழ்வாதார வளர்ச்சிக்கும் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. இவ்வாண்டு, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு,

இதுவரை, சுமார் ரூ.24,712 கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில், ரூ.30,000 கோடி அளவிற்கு வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

★ பெண் தொழில்முனைவோர்கள், தேவையான கடன்களை உரிய நேரத்தில் பெறுவதிலும், பொருட்களைச் சந்தைப்படுத்துவதிலும், தொடர்ந்து இடர்பாடுகளை சந்திக்கின்றனர். இச்சவால்களை எதிர்கொள்ள, பெண்களுக்கெனச் சிறப்புப் 'புத்தொழில் இயக்கம்' ஒன்றை அரசு தொடங்கும். பெண் தொழில்முனைவோர், புத்தொழில்களைத் தொடங்குவதற்கு அனைத்து வகையிலும் இந்த இயக்கம் உதவும்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

★ தானிய சேமிப்புக் கொள்ளளவை அதிகரித்து, இழப்பினைக் குறைப்பதற்காக, 2021-2022ஆம் ஆண்டு முதல் ரூ.238 கோடி செலவில் 2.86 இலட்சம் மெட்ரிக் டன் சேமிப்புக் கொள்ளளவுடன் 213 கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், 28,000 மெட்ரிக் டன் சேமிப்புக் கொள்ளளவு கொண்ட 12 கிடங்குகள் ரூ.54 கோடி செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

★ இந்த அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள முக்கிய வாக்குறுதிகளான விவசாயக் கடன் தள்ளுபடிக்கு ரூ.2,393 கோடியும், நகைக்கடன் தள்ளுபடிக்கு ரூ.1,000 கோடியும், சுயஉதவிக்குழு கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு ரூ.600 கோடியும் என மொத்தம் ரூ.3,993 கோடி வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் செயல்திறனையும் நிதி நிலையையும் மேம்படுத்த அடிப்படைச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கான, நீண்டகாலத் திட்டமொன்றை அரசு வகுக்கும். பொது விநியோகத் திட்டத்தில் உணவு மானியத்திற்காக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.10,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கு ரூ.16,262 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீர் வளங்கள்

★ நீர்நிலைகளை மீட்டெடுத்து, புத்துயிர் அளிக்க பல முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தில் ரூ.462 கோடி மதிப்பீட்டில் 341 ஏரிகள், 67 அணைக்கட்டுகள், 11 கால்வாய்களைப் புனரமைப்பதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.259 கோடி மதிப்பீட்டில் 309 ஏரிகளில் பழுதுபார்த்தல், புனரமைத்தல், மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மாவட்டங்களில் ரூ.184 கோடி மதிப்பீட்டில் நீண்டகால வெள்ளத் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ஒன்பது பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, இரண்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. நடப்பாண்டில் காஞ்சிபுரம், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் 12 வெள்ளத் தணிப்புப் பணிகள் ரூ.434 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு, முடியும் தருவாயில் உள்ளன.

கால்நடைப் பராமரிப்பு

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு விலங்குகள் நல வாரியம், மாநிலத்தில் விலங்குகளின் நலனைப் பேணிக் காக்க மறுசீரமைக்கப்பட்டுள்ளது. பெருகிவரும் தெரு நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த விலங்குகள் இனவிருத்திக் கட்டுப்பாட்டு மையங்கள் அமைப்பது

அவசியமாகும். விலங்குகள் நல வாரியத்தை வலுப்படுத்திச் செம்மையாக செயல்படுத்தும் பொருட்டு, இம்மதிப்பீட்டில் ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. விலங்குகள் இனவிருத்திக் கட்டுப்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளவும், உள்ளாட்சிகளின் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், விலங்குகள் நலப்பணிகளைச் செயல்படுத்தவும் இந்நிதி பயன்படுத்தப்படும்.

மீனவர் நலன்

★ மீனவர்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு அவர்களது சிறப்புத் தேவைகளை நன்கு உணர்ந்து பல்வேறு நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. மீன்பிடி குறைவு காலத்தில் மீனவர்கள் பயன்பெறும் பொருட்டு ரூ.5,000 என வழங்கி வந்த சிறப்பு நிவாரணத் தொகையினை ரூ.6,000ஆக கடந்த ஆண்டு முதல் இவ்வரசு உயர்த்தி வழங்கி வருகிறது. வரும் நிதியாண்டில் மீன்பிடிக் குறைவு காலச் சிறப்பு நிவாரணம், மீன்பிடித் தடைக்கால நிவாரணம், மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டங்கள் என 4.3 இலட்சம் மீனவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.389 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ பவளப்பாறைகள் மீன்களுக்குப் புகலிடம், உணவு அளித்து மீன்குஞ்சுகள் பிழைக்கும் வாய்ப்புக்களை அதிகரித்து மீன்வளத்தைப் பாதுகாக்கின்றன. நாட்டுப் படகு மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட, பாக் வளைகுடா பகுதியில் 3 மாவட்டங்களில் கடற்பகுதியில் 217 செயற்கைப் பவளப்பாறை அலகுகள் ரூ.79 கோடியிலும், பாக் வளைகுடா தவிர ஏனைய மாவட்டங்களில் 200 செயற்கைப் பவளப்பாறை அலகுகள் ரூ.64 கோடியிலும் ஒன்றிய மாநில நிதியுதவியுடன் அமைக்கப்படும்.

சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம்

★ பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தாலும், மக்கள்தொகைப் பெருக்கத்தாலும் கடலோரச் சுற்றுச்சூழலும், கடலோர மக்களின் வாழ்வாதாரமும் வருங்காலங்களில் கடுமையாகப் பாதிக்கப்படக்கூடும். கடல் அரிப்பைத் தடுக்கவும், கடல் மாசுபாட்டைக் குறைக்கவும், கடல்சார் உயிரியல் பன்முகத்தன்மையைப் பாதுகாக்கவும், 'தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்' என்ற திட்டத்தை ரூ.2,000 கோடி மதிப்பீட்டில் உலக

வங்கி நிதியுதவியுடன் அடுத்த ஐந்து ஆண்டுகளில், இந்த அரசு செயல்படுத்த உள்ளது.

★ அழிந்து வரும் வன உயிரினங்களைக் காக்க ஒரு தொடர்ச்சியான பாதுகாக்கப்பட்ட வனப்பரப்பு அவசியம். எனவே, நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தை, தென்காவிரி வனவிலங்கு சரணாலயத்துடன் இணைக்கும் வகையில், ஈரோடு மாவட்டத்தில் உள்ள அந்தியூர், கோபிசெட்டிபாளையம் வட்டங்களில் உள்ள 80,567 ஹெக்டேர் வனப்பரப்பில் "தந்தை பெரியார் வனவிலங்கு சரணாலயம்" என்னும் புதிய சரணாலயத்தை இந்த அரசு ஏற்படுத்தும். இது மாநிலத்தின் 18ஆவது வனவிலங்கு சரணாலயமாகும்.

★ மத்திய ஆசியாவின் பறவைகள் வலசைப் பாதையில் தமிழ்நாடு அமைந்துள்ளதால், ஒவ்வொரு ஆண்டும் பெரும் எண்ணிக்கையில் பறவைகள் நமது மாநிலத்திற்கு வருகை தருகின்றன. பறவைகளின் பாதுகாப்பைப் பேணவும், பறவையியல் ஆராய்ச்சியை ஊக்குவிக்கவும், இயற்கையில் பறவைகளின் பங்கைப் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும், மரக்காணத்தில் ரூ.25 கோடி செலவில் "பன்னாட்டுப் பறவைகள் மையத்தை" அரசு அமைக்கவுள்ளது.

★ காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் மகளிரின் முக்கியப் பங்கை உணர்ந்துள்ள இந்த அரசு, மகளிர் சுயஉதவிக் குழுக்களின் மூலம் "காலநிலை மாற்ற வீராங்கனைகள்" என்ற காலநிலை விழிப்புணர்வு திட்டத்தைத் தொடங்கும். சுற்றுச்சூழல், காலநிலைமாற்றம்

குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதற்காக முதற்கட்டமாக 500 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இந்தச் சுற்றுச்சூழல் பற்றிய பரப்புரையை முன்னெடுப்பார்கள். இதற்காக, அவர்களுக்கு ரூ.20 கோடி செலவில் மின் ஆட்டோக்கள் வழங்கப்படும். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறைக்கு ரூ.1,248 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித்துறை

★ அடுத்த இரண்டு ஆண்டுகளில் 10,000 கி.மீ. சாலைகளின் தரத்தை மேம்படுத்தி, ஊரகப் பகுதிகளில் சிறப்பான சாலை வசதிகளையும், பொருளாதார மேம்பாட்டையும் உறுதிசெய்திட, முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தை அரசு இவ்வாண்டு தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், முக்கியமான இணைப்புச் சாலைகள், பேருந்துகள் இயங்கும் சாலைகள் தரம் உயர்த்தப்படும். வரும் நிதியாண்டில், ரூ.2,000 கோடி மதிப்பீட்டில் 5,145 கி.மீ. சாலைகளுக்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

★ கிராமப்புரங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளில், 6,618 நீர்நிலைகளில் மொத்தம் ரூ.638 கோடி மதிப்பீட்டில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடுத்த இரண்டு ஆண்டுகளில், மேலும், 10,000 சிறிய நீர் நிலைகள், குளங்கள், ஊரணிகள் ரூ.800 கோடி செலவில் புதுப்பிக்கப்படும்.

★ வீட்டுவரி, தொழில் வரி, குடிநீர் வரியை ஊராட்சிகளுக்கு இணையவழியில் எளிதில் செலுத்துவதற்கு ஒரு வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. விரைவில், கட்டட வரைபடம், மனை வரைபட அனுமதிகளையும் இணைய வழியில் பெற வழிவகை செய்யப்படும்.

★ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், இவ்வாண்டு இதுவரை, ரூ.10,914 கோடி செலவில்' 30.87 கோடி வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 2023-2024ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ், 35 கோடி வேலை நாட்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு ரூ.22,562 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புர மேம்பாடு

★ அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ், குடிநீர் வழங்கலைச் சீரமைத்தல், கழிவுநீர்க் கட்டமைப்பை மேம்படுத்துதல், நீர்நிலைகளைப் புதுப்பித்தல், பசுமையான நகர்ப்புரங்களை உருவாக்குதல் போன்ற திட்டங்களை அரசு மேற்கொண்டு வருகிறது. இதுவரை, இத்திட்டத்தின்கீழ், ரூ.9,378 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது, அவற்றில் ரூ.5,960 கோடி மாநில அரசாலும் உள்ளாட்சி அமைப்புகளாலும் செலவிடப்படும். இந்தத் திட்டத்திற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.612 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ மக்களுக்குக் குடிநீர் வசதிகளை மேம்படுத்துவதற்காக, உயிர் நீர் (ஜல் ஜீவன்) இயக்கத்தின்கீழ், 103 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு, ரூ.15,734 கோடி மதிப்பீட்டில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில் 54 சதவிகித செலவினத்தை மாநில அரசு ஏற்கும். மேலும், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் ரூ.7,145 கோடி செலவில் செயல்படுத்த பன்னாட்டு நிறுவனங்களில் நிதியுதவிக்காக முன்மொழியப்படும். வரும் நிதியாண்டில் உயிர் நீர் இயக்கத்தைச் செயல்படுத்த ரூ.6,600 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ 2010ஆம் ஆண்டு, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின்போது, கோவையில் செம்மொழிப் பூங்கா அமைக்கப்படும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். கிடப்பில் போடப்பட்ட இத்திட்டத்தை மீட்டெடுத்து, கோவையில் உலகத் தரம் வாய்ந்த 'செம்மொழிப்பூங்கா'

இரண்டு கட்டங்களாக அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். இதன் முதற்கட்டமாக, 45 ஏக்கர் பரப்பளவில் தாவரவியல் பூங்கா அமைக்கவும் இதர வசதிகளை மேம்படுத்துவதற்கும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மொத்தம் ரூ.172 கோடிச் செலவில் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. இதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.43 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ சிங்காரச் சென்னையை உருவாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, அடையாறு, கூவம் உள்ளிட்ட நீர்வழிகளைச் சுத்தப்படுத்தி, மறுசீரமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இந்த முயற்சிகளின் முதற்கட்டமாக, 44 கி.மீ. நீளமுள்ள அடையாறு ஆற்றில் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தில் கழிவுநீர் ஆற்றில் கலப்பதைத் தடுத்தல், கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் (STPs) அமைத்தல் போன்ற ஆற்றைத் தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், எழில் கொஞ்சும் பூங்காக்கள், பசுமை நடைபாதைகள், திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடங்கள், தரமான அருந்தகங்கள் போன்ற கண்கவர் பொழுதுபோக்கு அம்சங்கள் அடையாறு ஆற்றங்கரையை அலங்கரிக்கும். இத்திட்டம் அரசு-தனியார் பங்களிப்புடன் ஏறத்தாழ ரூ.1,500 கோடிச் செலவில் செயல்படுத்தப்படும்.

★ நகர்ப்புர உள்ளாட்சிகளைத் தரம் உயர்த்தியதன் காரணமாக, அருகிலிருக்கும் புறநகர்ப் பகுதிகளும் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ளன. அவற்றிலுள்ள மண் சாலைகளைத் தரம் உயர்த்துவது அவசியமாகும். இப்பகுதிகளில், 4,540 கி.மீ. நீளமுள்ள மண் சாலைகளில், 1,633 கி.மீ. மண் சாலைகள் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்கெனவே உள்ளாட்சி அமைப்புகளால் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டில், 1,424 கி.மீ. மண் சாலைகள், மொத்தம் ரூ.1,211 கோடிச் செலவில் தரமான சாலைகளாக மேம்படுத்தப்படும்.

★ நகர்ப்புர உள்ளாட்சிகளில் பொதுக் கழிப்பறைகளின் செயல்பாட்டையும் பராமரிப்பையும் மேம்படுத்த அரசு முயற்சிகளை எடுத்து வருகின்றது. பெருநகரச் சென்னை மாநகராட்சியில் புதிய பொதுக் கழிப்பறைகள், சமுதாயக் கழிப்பறைகள் கட்டுதல், இயங்கி வரும் கழிப்பறைகளைச் சீரமைத்தல், அவற்றின்

பராமரிப்பு ஆகிய பணிகள் ரூ.430 கோடிச் செலவில் அரசு - தனியார் பங்களிப்பு மூலம் ஒரு முன்னோடித் திட்டமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் வெற்றியின் அடிப்படையில், மாநிலத்தில் உள்ள பிற மாநகராட்சிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

★ ஒளிர்மிகு உயிரோட்டமுள்ள பொது இடங்களை நகரங்களில் உருவாக்க அரசு பல முன்னெடுப்புகளைச் செய்து வருகின்றது. சென்னைத் தீவுத்திடலில் 30 ஏக்கர் நிலப்பரப்பில், இயற்கை வனப்புடன் நகர்ப்புரப் பொதுச் சதுக்கம், கண்காட்சி அரங்குகள், திறந்தவெளி திரையரங்கம், உணவகங்கள் போன்ற நவீன நகர்ப்புர வசதிகளை ரூ.50 கோடிச் செலவில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஏற்படுத்தும்.

★ தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள மறுகுடியிருப்புகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில், விளையாட்டு, பொழுதுபோக்கு மையங்கள் உருவாக்கப்படும். இந்த மையங்களில் விளையாட்டு வசதிகள், நவீன உடற்பயிற்சிக் கூடம், தொழிற்பயிற்சி வழங்க பல்நோக்கு சமுதாயக்கூடம், நூலகம் போன்ற வசதிகள் அமைக்கப்படும். வரும் ஆண்டில், ரூ.20 கோடிச் செலவில் கண்ணகி நகர், பெரும்பாக்கம், நாவலூர், அத்திப்பட்டு ஆகிய நான்கு இடங்களில் இந்த மையங்கள் உருவாக்கப்படும்.

★ சென்னைக்கு அடுத்தபடியாகப் பெரிய நகரங்களான கோயம்புத்தூர் மற்றும் மதுரையில்

திட்டமிட்ட வளர்ச்சியை மேற்கொள்வது இன்றியமையாததாகும். ஆகவே இவ்விரண்டு நகரங்களையும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் உள்ளடக்கி, அனைத்து மக்களின் பங்களிப்புடன் எழில்மிகு கோவை மற்றும் மாமதுரை என்ற ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படும். பசுமையான பூங்காக்கள், தூய்மையான தெருக்கள், அனைவருக்கும் சுத்தமான குடிநீர், பாதுகாப்பான போக்குவரத்து அமைப்புகள், தொழிற்பூங்காக்கள், தரமான வீட்டுவசதி போன்ற பொருண்மைகள் இத்திட்டங்களில் இடம்பெறும். தலா ரூ.1 கோடி செலவில் இத்திட்ட அறிக்கைகள் தயார் செய்யப்படும்.

★ இம்மதிப்பீடுகளில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு ரூ.24,476 கோடியும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறைக்கு ரூ.13,969 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வெள்ள மேலாண்மை

★ அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தின் போது அரசால் முன்கூட்டியே திட்டமிட்டு, நிறைவேற்றப்பட்ட வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகள் அனைவராலும் பாராட்டப்பட்டன. ரூ.1,355 கோடி மதிப்பிலான வெள்ளத் தடுப்புப் பணிகள், போர்க்கால அடிப்படையில் முடுக்கிவிடப்பட்டு, சென்னைப் பெருநகரில் வெள்ளப் பாதிப்புப் பெருமளவு குறைக்கப்பட்டது. வருங்காலங்களில் வெள்ளம், கனமழையை எதிர்கொள்ளும் வகையில், கட்டமைப்புக்களை மேலும் வலுப்படுத்த, வரும் ஆண்டில் வெள்ளத் தடுப்புப் பணிகளும், நீர் வழிகளைத் தூர்வாரும் பணிகளும் ரூ.320 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

சமச்சீர் வளர்ச்சி

★ தமிழ்நாடு ஒரு வளர்ச்சி பெற்ற மாநிலமாகத் திகழ்ந்தாலும் சமூக, பொருளாதாரக் குறியீடுகளின் அடிப்படையில், சில வட்டாரங்கள் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. இப்பகுதிகளும் வளர்ச்சியடையும் வகையில், பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் இலக்குகளை எட்டுவதற்காக 'வளமிகு வட்டாரங்கள் திட்டம்' என்ற புதிய திட்டத்தை அரசு தொடங்கும். இத்திட்டத்தின் கீழ், மலைப்பகுதிகள் உட்பட மாநிலத்தில் மிகவும் பின்தங்கிய 50 வட்டாரங்கள் கண்டறியப்பட்டு, ஒவ்வொன்றிலும் தலா ரூ.5 கோடி மதிப்பிலான திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

★ நாட்டிலேயே வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான, சென்னை, பல்வேறு நிறுவனங்களால் வெளியிடப்பட்ட 'வாழ உகந்த நகரங்கள் பட்டியலில்' முன்வரிசையில் உள்ளது. இருப்பினும், நகரத்தின் சில பகுதிகளில், குறிப்பாக வடசென்னையில், போதிய அளவில் அடிப்படை வசதிகளும் கட்டமைப்புகளும் இல்லா நிலை உள்ளது. சென்னையில் சீரான, சமமான வளர்ச்சியை உறுதி செய்ய "வடசென்னை வளர்ச்சித் திட்டம்" என்ற திட்டத்தை ரூ.1,000 கோடிச் செலவில் அடுத்த மூன்று ஆண்டுகளில் அரசு செயல்படுத்தும். இத்திட்டத்தில், கட்டமைப்புப் பற்றாக்குறைகளையும் வளர்ச்சிக் குறியீடுகளின் குறைபாடுகளையும் கண்டறிந்து, அவற்றைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டம் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நிதியையும் நடைமுறையிலுள்ள திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தப்படும்.

நெடுஞ்சாலைகள்

★ மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்க, சாலைக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு அரசு அதிக முன்னுரிமை அளிக்கின்றது. முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.1,407 கோடிச் செலவில் 148 கி.மீ., சாலைகளை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணிகளும், 524 கி.மீ., சாலைகளை ரூ.803 கோடி மதிப்பில்

இருவழிச் சாலையாக அகலப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ வரும் ஆண்டில், ரூ.621 கோடி மதிப்பீட்டில், தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை அண்ணாசாலையில் நான்கு வழி மேம்பாலம் கட்டப்படும். பன்னாட்டுப் பொறியியல் நிபுணர்களின் ஆலோசனைகள் பெற்றுச் சென்னை மெட்ரோ இரயில் சுரங்கப்பாதைகளுக்கு மேல் கட்டப்பட உள்ள இந்த மேம்பாலம் ஒரு நவீன பொறியியல் சாதனையாக அமையும். இப்பணிகள் நிறைவுற்றவுடன், பல முக்கிய சந்திப்புகளில் போக்குவரத்து நெரிசல் குறைந்து, சாலைப் பாதுகாப்பும் மேம்படும்.

★ பருவமழை மற்றும் வெள்ளக் காலங்களின் போது, போக்குவரத்துத் துண்டிக்கப்படாமல் இருக்க, ரூ.996 கோடி மதிப்பீட்டில் 215 தரைப்பாலங்களுக்குப் பதிலாக உயர்மட்டப் பாலங்கள் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ சென்னை புறவட்டச் சாலை திட்டத்திற்காக ரூ.1,847 கோடியும், சென்னை-கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டத்திற்கு ரூ.1,500 கோடியும், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-IIக்கு ரூ.645 கோடியும் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ இம்மதிப்பீடுகளில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு ரூ.19,465 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து

★ நகரங்களில் தற்போதுள்ள பேருந்து பணிமனைகள் முக்கிய இடங்களில் அமைந்திருந்தாலும், அவற்றின் முழுப் பயன்பாடு வெளிக்கொணரப்படவில்லை. பயணிகளின் அனுபவத்தை மேம்படுத்தவும், பேருந்து பணிமனைகளை உயர்தரப் போக்குவரத்து மையங்களாகத் தரம் உயர்த்தவும் அரசால் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, ரூ.1,600 கோடி முதலீட்டில் வடபழனி, திருவான்மியூர், வியாசர்பாடியில் உள்ள பேருந்து பணிமனைகள் மேம்படுத்தப்படும். இரண்டாம் கட்டமாக, தாம்பரம், திருவொற்றியூர், சைதாப்பேட்டையில் உள்ள 3 பணிமனைகள் ரூ.1,347 கோடி முதலீட்டில் மேம்படுத்தப்படும்.

★ தரமான, வசதியான போக்குவரத்து சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்காக பேருந்துகளைத் தொடர்ந்து புதுப்பிப்பதற்கானத் தேவை எழுந்துள்ளது. 1,000 புதிய பேருந்துகளைக் கொள்முதல் செய்யவும். 500 பழைய பேருந்துகளைப் புதுப்பிக்கவும், இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.500 கோடி நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

★ இம்மதிப்பீடுகளில் மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயணத்திற்கு ரூ.2,800 கோடியும், மாணவர்களுக்கான பேருந்துக் கட்டண மானியத்திற்கு ரூ.1,500 கோடியும், டீசல் மானியத்திற்கு ரூ.2,000 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, நம் மாநிலத்தின் போக்குவரத்து அமைப்பில் இரயில்வேத் துறையின் பங்கு மிகவும் குறைவாகவே உள்ளது. இந்நிலையைச் சரிசெய்ய, இந்திய இரயில்வேத் துறையுடன் ஒருங்கிணைந்து, மாநிலத்தில் புதிய இரயில் திட்டங்களைக் கண்டறிந்து செயல்படுத்திட, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்துடன் (TIDCO) இணைந்து ஒரு சிறப்பு நிறுவனத்தை அரசு உருவாக்கும்.

★ இம்மதிப்பீடுகளில் போக்குவரத்துத் துறைக்கு ரூ.8,056 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மெட்ரோ இரயில்

★ சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணிகள் ரூ.63,246 கோடிச் செலவில் 119 கி.மீ. தூரத்திற்கு மூன்று வழித்தடங்களில் முழுவீச்சில் நடைபெற்று

வருகின்றன. இதன் முதல் வழித்தடமாக, பூந்தமல்லிப் பணிமனை முதல் கோடம்பாக்கம் மின் நிலையப் பிரிவு வரையிலான உயர் வழித்தடம் 2025ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வரவு-செலவுத் திட்டத்தில், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு ரூ.10,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோயம்புத்தூர் மாநகரம், இந்தியாவிலேயே வேகமாக வளர்ந்து வரும் இரண்டாம் நிலை நகரங்களில் முதன்மையானது. ஜவுளி, தொழில், வர்த்தகம், தொழில்நுட்பம், மருத்துவ வசதிகள், உற்பத்தித் துறை எனப் பல்தொழில்களின் இருப்பிடமாகவும் தொழில்முனைவுக்கு எடுத்துக்காட்டாகவும் திகழும் கோயம்புத்தூரின் எதிர்கால வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, இந்நகரில் மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம் அவிநாசி சாலை, சத்தியமங்கலம் சாலைகளை உள்ளடக்கி ரூ.9,000 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

★ தூங்காநகரமான மதுரை மாநகரம், தென்னகத்தின் வளர்ச்சிக்கு மையமாக விளங்கும் வகையில் மெட்ரோ இரயில் திட்டம் ரூ.8,500 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். மதுரை நகரின் மையப் பகுதிகளில் நிலத்திற்கு அடியில் அமைக்கப்படும் மெட்ரோ இரயில் திருமங்கலத்தையும் ஒத்தக்கடையையும் இணைக்கும். இந்த இரண்டு நகரங்களில் ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, பன்னாட்டு நிதி நிறுவனங்களின் நிதியுதவி மூலம் மெட்ரோ இரயில் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

எரிசக்தி

★ மாநிலத்தில் அதிகரித்து வரும் மின் தேவையை நிறைவு செய்திட பசுமை ஆற்றல் வளங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, 2030ஆம் ஆண்டிற்குள் 33,000 மெகாவாட் அளவிற்கு மாநிலத்தின் உற்பத்தித் திறனை உயர்த்தி மாநிலத்தில் மின் உற்பத்தியினை இரட்டிப்பாக்க அரசு முடிவு செய்துள்ளது. மாநில மின் உற்பத்தியில் தற்போது 20.88 சதவிகிதமாக இருக்கும் பசுமை ஆற்றலின் பங்களிப்பை

2030ஆம் ஆண்டிற்குள் 50 சதவிகிதமாக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

★ சூரிய ஆற்றல் திறன் 20 GW, நிலப்பரப்பில் காற்றாலைகள் திறன் 70 GW, கடல் பரப்பில் காற்றாலைகள் திறன் 30 GW என மிகுதியான பசுமை ஆற்றல் வளங்களையும் வாய்ப்புகளையும் தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் மொத்த மின் உற்பத்தியில் 50 சதவிகிதத்துக்கும் மேல் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்களிப்பு இருக்கும் வகையில் பசுமை மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றுவதற்குச் சிறப்பு நிறுவனம் ஒன்றை அரசு உருவாக்கும். மேலும், மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ள காற்றாலைகளின் செயல்திறனை மறுசீரமைக்க புதிய கொள்கை ஒன்றும் வகுக்கப்படும்.

★ மாநிலத்தின் உச்சநேர மின் தேவையை நிறைவு செய்வதற்காக அரசு - தனியார் பங்களிப்புடன் (PPP) நீரேற்று மின் திட்டங்கள் நிறுவப்படும். குந்தாவில் கட்டப்பட்டு வரும் 500 மெகாவாட் திறன்கொண்ட புனல் மின் திட்டம் 2024-2025ஆம் ஆண்டிற்குள் செயல்பாட்டிற்கு வரும். மேலும், 2030ஆம் ஆண்டுக்குள், ரூ.77,000 கோடிச் செலவில் 14,500 மெகாவாட் திறன்கொண்ட 15 புதிய நீரேற்று மின் திட்டங்கள் அரசு-தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும். மாநிலத்தில் நீரேற்று மின் திட்டங்களில் முதலீடுகளை ஊக்குவிக்க ஒரு விரிவான கொள்கையை அரசு வகுக்கும். மேலும், தற்போது நடைபெற்று வரும் 4,100 மெகாவாட் அனல் மின் திட்டப் பணிகள் விரைந்து முடிக்கப்படும்.

★ மின் பயன்பாட்டுத் தரவுகளைத் தானியங்கி முறையில் பெறுவதற்கு, முழு சீரமைக்கப்பட்ட

மின் பகிர்மானத் திட்டத்தின் (RDSS) கீழ், கட்டணம் செலுத்தும் அனைத்து நுகர்வோர் இணைப்புகளுக்கும் முன்கூட்டியே கட்டணம் செலுத்தும் வசதியுடன் 'திறன்மிகு மின் அளவிகள்' (Smart meter) நிறுவப்படும்.

★ அரசால் மேற்கொள்ளப்பட்ட அடிப்படைச் சீர்திருத்தங்களின் விளைவாக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் நிதிநிலை சற்று மேம்பட்டுள்ளது. இதனால், இக்கழகத்தின் இழப்பு 2021-2022ஆம் ஆண்டில் ரூ.11,955 கோடியிலிருந்து நடப்பாண்டில் ரூ.7,825 கோடியாகக் குறைய வாய்ப்புள்ளது. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு அரசால் வழங்கப்படும் மானியங்களுக்காக ரூ.14,063 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கைத்தறி, துணி நூல்

★ கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களின் நலனில் இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி வருகின்றது. 76,356 கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச மின்சார அலகுகள் 200இல் இருந்து 300ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல், 1.64 இலட்சம் விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச மின்சார அலகுகள் 750இல் இருந்து 1,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கு மண்டலத்தில் புதிய ஜவுளிப் பூங்கா ஒன்று அமைக்கப்படும் என அறிவித்தார்கள். அதனடிப்படையில் சேலத்தில் சுமார் ரூ.880 கோடிச் செலவில் 119 ஏக்கர் நிலப்பரப்பில் ஒன்றிய மாநில அரசுகளின் நிதியுதவியுடனும் தனியார் தொழில்முனைவோர்களின் பங்களிப்புடனும் இந்தப் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

★ தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மூலம் விருதுநகர் மாவட்டத்தில் ஏறத்தாழ ரூ.1,800 கோடி செலவில் கட்டமைப்பு வசதிகளுடன் ஜவுளிப் பூங்கா அமைத்திட 1,052 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிவடைந்து, ஒன்றிய அரசின் பங்களிப்புடன் இந்தப் பூங்காவின் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது. இந்த ஜவுளிப் பூங்காவின் மூலம் இரண்டு இலட்சம் வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

★ கைத்தறிப் பொருட்களின் தரத்தை உயர்த்தவும், நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவும், சந்தைப்படுத்தும் வாய்ப்புகளை ஏற்படுத்தவும் ரூ.20 கோடிச் செலவில் 10 சிறிய கைத்தறிப் பூங்காக்கள் அரசால் நிறுவப்படும்.

★ மேலும், கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் மதிப்புத் தொடரின் முழுமையான வளர்ச்சி, நவீன வடிவமைப்பு, துணிநூல் தயாரிப்பு இயந்திர உற்பத்தியை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் புதிய துணிநூல் கொள்கை ஒன்று வெளியிடப்படும்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

★ அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் பயன்களைப் பெறுவதற்காக, குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்வது இன்றியமையாததாகும். இத்தொழில் நிறுவனங்களைக் கண்டறிந்து பதிவு செய்வதற்கான ஒரு சிறப்பு முயற்சியை அரசு மேற்கொள்ளும். பெரிய தொழிற்சாலைகள் உட்பட அனைத்து தொழில் நிறுவனங்களையும் இணைத்து, ஒருங்கிணைந்த தரவுத்தளம் ஒன்றை ஏற்படுத்த இந்த முயற்சி வழிகோலும். இந்தக் கணக்கெடுப்பை மேற்கொள்ள ரூ.5 கோடி வழங்கப்படும்.

★ நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழில் வளர்காப்பகங்கள் (Business incubators) உள்ள மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது. காலநிலைத் தொழில்நுட்பம், ஊரகத் தொழில்நுட்பம், வேளாண் தொழில்நுட்பம், கடல்சார் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற விழையும் தொழில்

வளர்காப்பகங்களை ஆதரிக்கும் நோக்கில், உயர்நுட்ப மையங்களை அமைக்க புத்தொழில் தமிழ்நாடு இயக்கம் உதவும். தொழில் வளர்காப்பகங்கள் நிதி திரட்டிட உதவுவதுடன், 40 சதவிகித மானியமும் வழங்கப்படும். மாநிலத்தில் தொழில் வளர்காப்பகங்களின் கட்டமைப்பை வலுப்படுத்த புத்தொழில் தமிழ்நாடு இயக்கத்தில் ஒரு தனிப் பிரிவு உருவாக்கப்படும்.

★ இவ்வாண்டு, முதல் - தலைமுறை தொழில்முனைவோர் தொழில் மேம்பாட்டுத் திட்டத்தில் (NEEDS), ரூ.144 கோடி அளவிலான மானியத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டச் செயல்பாட்டில் இது ஒரு புதிய மைல்கல் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன். குறு, சிறு நடுத்தர நிறுவனங்களுக்கு, உரிய நேரத்தில் பணம் அளிக்கப்படுவதை உறுதிசெய்ய 'மின்னணு வர்த்தக வரவு தள்ளுபடி' (TReDS) தளத்தில் அனைத்துப் பொதுத்துறை நிறுவனங்களும் இணைவதைக் கட்டாயமாக்கியுள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடாகும்.

★ இம்மதிப்பீடுகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்கு ரூ.1,509 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழில்துறை

★ தமிழ்நாடு, கடந்த இரண்டு ஆண்டுகளாக, தொழில்துறையில் அதிக அளவிலான முதலீடுகளை ஈர்த்து வருகிறது. 2021ஆம் ஆண்டு மே மாதம் முதல் இதுவரை 3,89,651 பேர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடிய 221 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகி உள்ளன. இவற்றின் மூலம், ரூ.2,70,020 கோடி மதிப்பிலான முதலீடுகள் பெறப்படும்.

★ இந்த முதலீடுகளின் பலன்களை ஒருங்கிணைத்து, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை நோக்கிப் பயணிக்க, உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10, 11 நாட்களில் சென்னையில் நடத்தப்படவுள்ளது. தொழில்கள் செழிக்கும் தமிழ்நாட்டின் தனிச் சிறப்புகளையும், முதலீட்டை ஈர்ப்பதற்கு உகந்த சூழலையும் எடுத்துக்காட்டும் தளமாக இம்மாநாடு அமையும். மேலும், மாநிலத்தில் உள்ள பெருந்தொழில்கள், சிறு தொழில் நிறுவனங்கள், புத்தொழில்கள்

ஆகியவற்றை முதலீட்டாளர்களுடனும் உலகச் சந்தையுடனும் இணைக்க ஒரு வாய்ப்பாகவும் இது அமையும். இதற்கென, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ தொழில் வளர்ச்சியை மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் பரவலாக்க வேண்டும் என்பது இந்த அரசின் குறிக்கோளாகும். அண்மையில் கையொப்பமிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 85 தொழில் திட்டங்கள் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளன. இத்திட்டங்களின் மூலம் ரூ.1,44,028 கோடி முதலீட்டில் 2,14,478 பேர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

★ இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து திட்டமிட்ட தொழில் வளர்ச்சியை எய்த, துறை சார்ந்த புதிய பத்து கொள்கைகளை வெளியிட்டுள்ளது.

★ நிதிநுட்பக் கொள்கை, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கொள்கை, உயிரியல் கொள்கை, ஏற்றுமதிக் கொள்கை, வான்வெளி மற்றும் பாதுகாப்புக் கொள்கை, காலணி மற்றும் தோல் கொள்கை, மின்சார வாகனங்கள் கொள்கை, தளவாடக் கொள்கை, நகர எரிவாயு வழங்கல் கொள்கை, எத்தனால் கொள்கை.

★ தமிழ்நாடு, குறிப்பாகச் சென்னை திருப்பெரும்புதூர் தடம், வாகன உற்பத்தியில் நாட்டிலேயே முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. வழக்கமான புதைபடிம எரிபொருள் வாகனங்களுக்கு மாற்றாக, தற்போது பிரபலமாகி

வரும் பசுமை மின் வாகனங்கள் உற்பத்தியிலும், தமிழ்நாடு முதன்மை இடத்தை வகித்து வருகிறது. கடந்த ஆண்டில் இந்தியாவில் விற்பனை செய்யப்பட்ட இருசக்கர மின் வாகனங்களில் 46 சதவிகித வாகனங்கள் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவை என்பதை பெருமிதத்துடன் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். உலகிலேயே மிகப்பெரிய இரு சக்கர மின்வாகனம் தயாரிக்கும் தொழிற்சாலை தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ளது. அண்மையில் வெளியிடப்பட்ட மின்வாகனக் கொள்கை தமிழ்நாடு தொடர்ந்து அனைத்து வகை வாகன உற்பத்தியிலும் முன்னணி மாநிலமாகத் திகழும் என்பதை உறுதி செய்யும்.

★ தொழில்துறையில் அதிக முதலீடுகளை ஈர்ப்பதோடு மட்டுமல்லாமல் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதில், குறிப்பாகப் பெண்களுக்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதில் இந்த அரசு முனைப்பாக உள்ளது. பெண்களுக்கு அதிகளவில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் தோல் அல்லாத காலணிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு அரசு சிறப்பு முன்னுரிமை அளித்து வருகிறது. இத்தொழிற்சாலைகள் ஏற்கெனவே செய்யாறு, பர்கூர் ஆகிய இடங்களில் செயல்பாட்டில் உள்ளன. திண்டிவனத்தில் 5,400 பெண்களுக்கும், பெரம்பலூரில் 31,600 பெண்களுக்கும் வேலைவாய்ப்புகள் தரக்கூடிய இரண்டு தொழிற்சாலைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று அடிக்கல் நாட்டியுள்ளார். மேலும், இரண்டு புதிய தொழிற்சாலைகள் இராணிப்பேட்டையிலும், கள்ளக்குறிச்சியிலும் அமைக்கப்படவுள்ளன. இவற்றில் 32,000 பெண்களுக்கு வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும். தோல் அல்லாத காலணிகள் உற்பத்தித் துறையில் மேலும் முதலீடுகளை ஊக்குவிக்க இதற்கெனத் தனிக்கொள்கை வெளியிட்டுள்ளதுடன், தைவான் காலணி உற்பத்தியாளர்கள் சங்கத்துடன் 'தமிழ்நாடு வழிகாட்டி' நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் கையொப்பமிட்டுள்ளது.

★ மாநிலத்தில் எத்தனால் உற்பத்தியை ஊக்குவிக்க எத்தனால் கொள்கை வெளியிடப்பட்டுள்ளது. உழவர்களின் வருவாயை உயர்த்துவதுடன், சர்க்கரை ஆலைகளின் நிதிநிலையை மேம்படுத்துவது இக்கொள்கையின் நோக்கங்களாகும். எத்தனால் உற்பத்திக்காக ரூ.5,000 கோடி முதலீட்டை ஈர்க்க இக்கொள்கை வழிவகுக்கும்.

★ விருதுநகர், வேலூர், கள்ளக்குறிச்சி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் புதிய சிப்காட் தொழில் பூங்காக்கள் ரூ.410 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதனால், ஏறத்தாழ 22,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். மேலும், கங்கைகொண்டானில் உள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் 1,500 பணியாளர்கள் தங்கும் வசதிகளுடன் தொழிலாளர் குடியிருப்புகள் ஏற்படுத்தப்படும்.

★ இம்மதிப்பீடுகளில் தொழில் துறைக்கு ரூ.3,268 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பம்

★ மின்னணு முறையில், நேரடியாக, எளிதான, வெளிப்படையான முறையில் அனைத்துச் சேவைகளையும் மக்களுக்கு வழங்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது. இந்த நோக்கத்தை எய்த, 'Simple Gov' என்ற ஒரு புது முயற்சியை அரசு தொடங்கும். இம்முயற்சியின் ஒரு பகுதியாக, பல்வேறு அரசுத்துறைகளின் நடைமுறைகளையும் சேவைகளையும் கணினிமயமாக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மென்பொருட்களை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் உரிய தரநிலைகளுடன் உருவாக்குவதற்காக, ரூ.100 கோடி மதிப்பில் 'மின்-ஆளுகை நிதி' ஏற்படுத்தப்படும். இந்த நிதி, அரசுத் துறைகளால் மேற்கொள்ளப்படும் மின்-ஆளுகை முயற்சிகளுக்குப் பயன்படுத்தப்படும்.

★ உயர்தர இணைய இணைப்பை ஏற்படுத்தவும், குறைந்த விலையில் பல்வேறு மின் சேவைகளை வழங்கவும், "ஒருங்கிணைந்த மின்னணு கட்டமைப்பு" (Unified Digital Infrastructure) அரசால் அமைக்கப்படும். இதன்மூலம், மாநில தலைமையகத்தில் இருந்து அனைத்து மாவட்டங்களுக்கும் அதிவேக கண்ணாடி இழைக்கற்றை வலையமைப்பு (Optical Fibre Network) உருவாக்கப்படும். இத்திட்டம் ரூ.400 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இணையவழி மருத்துவம், கல்வி, வேளாண் விரிவாக்கச் சேவைகள் ஆகியவற்றை

மாநிலத்தில் குக்கிராமங்கள் வரை கொண்டு செல்வதற்கு மட்டுமன்றி அனைத்துப் பகுதிகளுக்கும் தங்குதடையின்றி இணையவசதி ஏற்படுத்துவதற்கும் இத்திட்டம் வழிகோலும்.

★ இன்றைய இணைய உலகத்தில், தகவலே ஆற்றலுக்கும் அதிகாரத்திற்கும் அடித்தளம். இந்த அரசின் சமூகநீதிக் கொள்கையை நிலைநாட்ட, தகவல்களையும், வாய்ப்புகளையும் பரவலாக்கி, அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை உருவாக்குவது மிக அவசியமாகும். எனவே, முதற்கட்டமாகச் சென்னை, தாம்பரம், ஆவடி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் மாநகராட்சிகளின் முக்கிய பொது இடங்களில் இலவச வைஃபை சேவைகள் வழங்கப்படும்.

★ உலகளவில் தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாட்டை ஒரு முக்கிய மையமாக நிலைநாட்டுவதற்கும், பெருகி வரும் அலுவலகக் கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்வதற்கும், சென்னை, கோயம்புத்தூர் மற்றும் ஓசூரில், "தமிழ்நாடு தொழில்நுட்ப நகரங்களை (TNTech city)" இந்த அரசு அமைக்கும். தகவல் தொழில்நுட்பம், உலகளாவிய திறன் மையங்கள் (Global Capability Centres), நிதிநுட்பம் மற்றும் புத்தொழில் நிறுவனங்கள் செயல்பட, திறன்மிகு மையங்கள், புத்தொழில் காப்பகங்கள், வர்த்தக மையங்கள், பொழுதுபோக்கு வசதிகள் போன்ற அனைத்துக் கட்டமைப்புகளும் இந்தத் தொழில்நுட்ப நகரங்களில் ஏற்படுத்தப்படும்.

★ சென்னையில் முதன்முறையாக 2000ஆம் ஆண்டில், TIDEL பூங்காவை நிறுவி, தகவல் தொழில்நுட்பப் புரட்சிக்கு வித்திட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இத்துறையின் வளர்ச்சி தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் பயனளித்திட வேண்டும் என்ற நோக்கில், ஏழு மாவட்டங்களில் நியோ-டைடல் பூங்காக்கள் (Neo-Tidel Parks) அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதன் நீட்சியாக, ஈரோடு, திருநெல்வேலி, செங்கல்பட்டில் தலா ஒரு இலட்சம் சதுரடி கட்டடப் பரப்பளவில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்படும். இதன்மூலம், சுமார் 4,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும்.

சுற்றுலா

★ தமிழ்நாட்டின் சுற்றுலாத்துறையானது, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப்பெரிய பங்களிப்பை நல்குகிறது. நடப்பாண்டில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் நாட்டிலேயே முதலிடத்தை தமிழ்நாடு வகிக்கிறது. 'சுற்றுலாத்தல மேம்பாட்டுத் திட்டத்தின்'கீழ், பல்வேறு சுற்றுலாத்தலங்களில் கட்டமைப்பு மேம்பாட்டிற்காக நடப்பாண்டில் ரூ.75 கோடி மதிப்பிலுள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பிச்சாவரம், பூம்புகார், ஒகேனக்கல் ஆகிய சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களுக்கு ரூ.55 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

★ சுற்றுலாத்துறைக்கு ஊக்கமளிக்கும் வகையில், அனைத்துத் துறையினருடன் கலந்தாலோசித்து, சுற்றுலாக் கொள்கை ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இது விரைவில் வெளியிடப்படும்.

சிறுபான்மையினர் நலன்

★ பள்ளிவாசல்களையும் தர்காக்களையும் பழுதுபார்ப்பதற்கும் சீரமைப்பதற்கும் வழங்கப்படும் ஆண்டு மானியம் நடப்பு ஆண்டில் ரூ.6 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. புகழ்பெற்ற நாகூர் தர்காவைச் சீரமைக்க இவ்வாண்டில் ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று, தேவாலயங்களைப் பழுதுபார்ப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் வழங்கப்படும் மானியமும், ரூ.6 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தப்படும். தொன்மையான மதுரை புனித ஜார்ஜ் தேவாலயம், தஞ்சாவூர் ஸ்வார்ட்ஸ் தேவாலயம், சேலம் கிறிஸ்து தேவாலயம் உள்ளிட்டவை புதுப்பிக்கப்படும்.

★ வக்ஃப் உடைமைகளைப் பாதுகாப்பதற்கான சீரிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. இம்முயற்சிகளால் கடந்த ஆண்டில், ரூ.52 கோடி மதிப்பிலான சொத்துக்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. இம்முயற்சிகளின் தொடர்ச்சியாக, வக்ஃப் வாரிய சொத்துக்களின் தரவுத்தளம் உருவாக்கப்படும்.

இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள்

★ கோயில் சொத்துகளைப் பாதுகாப்பதற்கு அரசு தீவிர முயற்சிகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து, 4,491 ஏக்கர் பரப்பளவில் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட ரூ.4,236 கோடி மதிப்புள்ள கோயில் சொத்துக்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. கோயில் நிலங்களின் புவிசார் ஒருங்கிணைப்புகளைப் பதிவு செய்யவும், நில வளங்கள் பற்றிய தரவுத்தளத்தைத் தயாரிப்பதற்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, 1,08,000 ஏக்கரில் இப்பணிகள் நிறைவடைந்துள்ளன.

★ நடப்பாண்டில், 574 கோயில்களில் திருப்பணிகள் முடிக்கப்பட்டு, குடமுழுக்குகள் நடத்தப்பட்டன. திருச்செந்தூர் கோயிலில் ரூ.305 கோடியிலும், பெரியபாளையம் பவானி அம்மன் கோயிலில் ரூ.166 கோடியிலும் இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோயிலில் ரூ.146 கோடிச் செலவிலும் பெருந்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வரும் நிதியாண்டில், 400 கோயில்களில் திருப்பணிகள் முடிக்கப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்படும். வரும் ஆண்டில், பழனி, திருத்தணி, சமயபுரம் ஆகிய கோயில்களில் பெருந்திட்டப் பணிகள் ரூ.485 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

மக்கள் குறைதீர்ப்பு

★ பொதுமக்களின் குறைகளை விரைவாகவும், நிறைவாகவும் தீர்ப்பதற்கு இந்த அரசு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. இந்த ஆண்டு முதல்வரின் முகவரித் திட்டத்தில், பெறப்பட்ட 17.7 இலட்சம் மனுக்களில், 17.3 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. தீர்வு காணப்பட்ட மனுக்களின் மீது மனுதாரர்களிடமிருந்து பின்னூட்டங்கள் பெறப்பட்டுத் தரக்கண்காணிப்புப் பிரிவால் மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ அரசு அலுவலகங்களை மக்கள் தேடி வரும் நிலையை மாற்றி, அவர்கள் இருப்பிடத்திற்கே நிருவாகத்தைக் கொண்டு செல்வதே இந்த அரசின் குறிக்கோளாகும். 'கள ஆய்வில் முதலமைச்சர்' என்ற இந்த அரசின் புதிய திட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று, களஆய்வு மேற்கொள்கின்றார். இதன் அடுத்தகட்டமாக, அரசின் திட்டங்களையும் சேவைகளையும் கடைக்கோடி மக்களும் பெற்றுப் பயனடையும் வகையில் அனைத்து ஊராட்சிகளிலும், நகர்ப்புரப் பகுதிகளிலும் ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில், அனைத்து அரசுத் துறைகளையும் ஒருங்கிணைத்து அரசு சேவை முகாம்கள் நடத்தப்படும். ஒட்டுமொத்த அரசு நிருவாக இயந்திரமும், மக்களைத் தேடிச் சென்று, அவர்களுக்குத் தேவையான சேவைகளை அளிப்பதற்கு இத்திட்டம் வழிவகை செய்யும்.

நில நிருவாகம்

★ நில உரிமையாளர்கள் பயன்பெறும் வகையில், ஒரு நம்பகமான, எளிய நிலப்பதிவேட்டு முறையைக் கொண்டுவர அரசு உறுதியாக உள்ளது. அங்கீகரிக்கப்பட்ட நிலங்கள் விற்பனைப் பதிவு செய்யப்பட்டவுடன், அவற்றிற்கான பட்டாவைத் தடையின்றி மாற்றம் செய்வதற்காக, வருவாய், பத்திரப்பதிவு, நகர் ஊரமைப்புத் துறை, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து, புதிய மென்பொருள் உருவாக்கப்படும். இந்நிதியாண்டில், கிராம நத்தப் பதிவேடுகள் கணினிமயமாக்கப்பட்டு, நத்தம் நிலங்களுக்கான

பட்டா மாற்றும் முறை, இணையவழியில் மேற்கொள்ளப்படும்.

சமூகப் பாதுகாப்பு

★ விளிம்புநிலையில் உள்ள மக்களுக்கும், நலிவுற்ற பிரிவினருக்கும் தக்க சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்ய, பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், மே 2021 முதல் புதியதாக 5,76,725 பேர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை தவிர, பெறப்பட்ட விண்ணப்பங்களில் தகுதியான ஒரு இலட்சம் பேர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் வழங்கப்படும். இதன்மூலம், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் பெறும் பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை 35.8 இலட்சமாக உயரும். சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்களுக்காக இம்மதிப்பீடுகளில் ரூ.5,346 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காவல்

★ சட்டம் ஒழுங்கை இந்த அரசு திறம்பட நிலைநாட்டியதன் காரணமாக, தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகவும், சமுதாய நல்லிணக்கத்தின் எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்து வருகிறது. போதைப்பொருள் பயன்பாடு மற்றும் கடத்தலைத் தடுப்பதற்கு, அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்நடவடிக்கைகளால், 13,491 போதைப் பொருள் விற்பனையாளர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுடைய வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

★ நிருவாகத்தில் வெளிப்படைத் தன்மையை மேலும் அதிகரிக்க, மாநிலம் முழுவதிலுமுள்ள அனைத்துக் காவல் நிலையங்களிலும் ரூ.38.25 கோடி மொத்தச் செலவில் கண்காணிப்புக் கேமரா அமைப்பு மேம்படுத்தப்படும்.

★ சமூக ஊடகங்கள் வாயிலாகத் தவறான காணொலிகளைப் பரப்பி புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடையே அச்சத்தை உருவாக்க, அண்மையில் சமூக விரோதிகள் சிலரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அரசின் விரைவான, கடுமையான நடவடிக்கைகளால் ஒடுக்கப்பட்டுள்ளன. இச்செயல்களில் ஈடுபட்ட சமூகவிரோதிகள் மீது 11 வழக்குகள் பதியப்பட்டு, கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரசின் இந்த உறுதியான நடவடிக்கை அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது. சுமார் 4 இலட்சம் புலம்பெயர் தொழிலாளர்களை மாவட்ட நிருவாகமும், காவல்துறை அலுவலர்களும் நேரில் சந்தித்து உண்மையை விளக்கினர். வெளி மாநிலத் தொழிலாளர்கள் பணிபுரிவதற்கான பாதுகாப்பான பணிச்சூழலை எடுத்துரைத்து அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் அனைத்து முயற்சிகளையும் பீகார், ஜார்கண்ட் மாநில அரசுகளுடன் இணைந்து அரசு மேற்கொண்டு வருகிறது.

அரசுப் பணியாளர் நலன்

★ அரசுப் பணியாளர்கள், ஓய்வூதியதாரர்களின் நலனைப் பாதுகாப்பதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது. பழைய அரசு அலுவலர் குடியிருப்புகள் படிப்படியாகப் புதியதாகக் கட்டப்படும். வரும் நிதியாண்டில் ரூ.100 கோடி மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்படும். உயர்ந்து வரும் கட்டுமானச் செலவுகளைக் கருத்திற்கொண்டு, அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் வீடுகட்டும் முன்பணம் ரூ.40 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக வரும் நிதியாண்டிலிருந்து உயர்த்தப்படும்.

★ ஓய்வூதியதாரர் இறக்க நேரிட்டால், குடும்ப உறுப்பினர்களுக்கு 'தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தில்' நிதியுதவியாக ரூ.50,000 வழங்கப்படுகிறது. கோவிட் பெருந்தொற்றுக் காலத்திற்குப் பின்னர், இந்நிதியுதவிக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. ஓய்வூதியர்களின் குடும்ப நலனைக் கருத்தில் கொண்டு 2021-2022ஆம்

ஆண்டில் ரூ.25 கோடியும், 2022-2023ஆம் ஆண்டில் 50 கோடியும் சிறப்பு நிதியாக இந்த அரசு வழங்கியுள்ளது. நிலுவையிலுள்ள விண்ணப்பங்களைத் தீர்வு செய்ய மேலும் ரூ.25 கோடி சிறப்பு ஒதுக்கீடாக வழங்கப்படுகிறது. கொரோனா பெருந்தொற்றின்போது உயிரிழந்த 401 முன்களப் பணியாளர்கள் குடும்பத்தினருக்கு, தலா ரூ.25 இலட்சம் வீதம் ரூ.100 கோடி கருணைத் தொகை மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

பதிவுத்துறை

★ 01.04.2012 அன்று உயர்த்தப்பட்ட நிலத்தின் வழிகாட்டி மதிப்பு, 09.06.2017 அன்று முதல் ஒரே சீராக 33 சதவிகிதம் குறைக்கப்பட்டது. மேலும், விற்பனை, நன்கொடை, பரிமாற்றம், குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே அல்லாத ஏற்பாடு ஆவணங்களுக்கான பதிவுக் கட்டணம் ஒரு சதவிகிதத்திலிருந்து நான்கு சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. சந்தை மதிப்பிற்கு ஏற்ப வழிகாட்டி மதிப்பை உயர்த்தவும், பதிவுக் கட்டணத்தைக் குறைக்கவும் பல்வேறு தரப்பினரிடமிருந்து தொடர்ந்து கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. இந்த கோரிக்கைகளை ஏற்று, வழிகாட்டி மதிப்பில் திருத்தத்தைப் பரிந்துரைக்க ஒரு குழுவை அரசு அமைத்துள்ளது. இக்குழு நிலஅளவை எண் வாரியாக திருத்தம் மேற்கொள்ள கால அவகாசம் தேவைப்படும். ஆகவே, வெளிச்சந்தையில் சொத்துக்களின் மதிப்பு கணிசமாக அதிகரித்துள்ளதால், இக்குழுவின் அறிக்கை பெறும்வரை, வழிகாட்டி மதிப்பை 08.06.2017 வரை கடைபிடிக்கப்பட்டு வந்த வழிகாட்டி மதிப்பிற்கு ஈடாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. நிலம் வாங்குபவர்களின் சுமையைக் குறைக்க, பதிவுக் கட்டணத்தை 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இனி சொத்து விற்பனை, நன்கொடை, பரிமாற்றம் ஆகிய ஆவணங்களுக்கு, 08.06.2017 வரை கடைப்பிடிக்கப்பட்ட வழிகாட்டி மதிப்பில் 5 சதவிகிதம் முத்திரைத் தீர்வை, 2 சதவீதம் சொத்து மாற்று வரி மற்றும் 2 சதவிகிதம் பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டும். குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே அல்லாத ஏற்பாடு ஆவணத்திற்கு 7 சதவிகிதம் முத்திரைத் தீர்வை, 2 சதவிகிதம் பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டும். இந்த நடவடிக்கைகள் எளிய, நடுத்தர மக்களுக்கு, குறிப்பாக வங்கிக் கடன் மூலம் வீடு வாங்குபவர்களுக்குப் பெரிதும் பயனளிக்கும்.

மகளிர் உரிமைத் தொகை

★ சமூகத்தின் சரிபாதியான பெண்ணினத்தை, சரிநிகர் சமமாக உயர்த்த திட்டமிட்டுச் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது திராவிட மாடல் அரசு. கல்வியில், நிருவாகத்தில், அதிகாரம் மிக்க பொறுப்புகளில், பொருளாதாரத்தில், சமூகத்தில் பெண்களை உயர்த்தும் திட்டங்களைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமையும் போதெல்லாம் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம். மகளிருக்குச் சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் தனி இடஒதுக்கீடும் அளித்தது முதல், இன்று அவர்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்துப் பயணம் வழங்கியது வரை, மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதில் எப்போதும் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறோம். அந்த வரிசையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என்று நாங்கள் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்துள்ளோம். சொன்னதைச் செய்வோம் - செய்வதைச் சொல்வோம் என்ற இலக்கின்படி செயல்பட்டு வருபவர்கள் மட்டுமல்ல, சொல்லாத நல்ல பல திட்டங்களையும் நாங்கள் செயல்படுத்தி வருகிறோம் என்பதை மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். மக்களைத் தேடி மருத்துவம், புதுமைப் பெண், நான் முதல்வன் போன்றவை தேர்தல் அறிக்கையில் சொல்லப்படாதவை. இத்தகைய புதுமையான திட்டங்களைச் செயல்படுத்தியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மகளிருக்கு உரிமைத் தொகை தரப்படும் என்ற இந்த வாக்குறுதியையும் உறுதியாக நிறைவேற்றிட வேண்டும் என்று

தொடர்ந்து அறிவுறுத்தி வருகிறார்கள். அதன் அடிப்படையில், தகுதிவாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் ரூ.1,000 உரிமைத் தொகையாக வழங்கப்பட இருக்கிறது என்பதைப் பெரும் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். ஒன்றிய அரசால் பெருமளவு உயர்த்தப்பட்டுள்ள சமையல் எரிவாயு விலை, விலைவாசி உயர்வால் அதிகரிக்கும் குடும்பச் செலவுகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் தோறும் ரூ.1,000 என்பது அவர்களது அன்றாட வாழ்க்கைக்குப் பேருதவியாக இருக்கும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டான இந்த ஆண்டில், திராவிட இயக்க மாதம் எனச் சொல்லத்தக்க செப்டம்பர் மாதத்தில், தாய்த் தமிழ்நாட்டின் தலைமகன் - பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் மாதம் 15ஆம் நாள் முதல் இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட இருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் மகளிர் பயன்பெறுவதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டு விரைவில் வெளியிடப்படும். தமிழ்நாட்டு மகளிரின் சமூகப் பொருளாதார வாழ்வில் ஒரு புரட்சியை ஏற்படுத்தக்கூடிய இத்திட்டத்திற்காக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.7,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநில அரசின் நிதிநிலை

★ மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் சதவீதம் குறைந்து வரும் போக்கை தடுக்க, வரி விகிதங்களைச் சீரமைத்தல், வசூலிப்புத் திறனை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நிதி திரட்டும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இதன் விளைவாக, மாநிலத்தின் சொந்த வரி வருவாய், 2022-2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடான ரூ.1,42,799.93 கோடியுடன் ஒப்பிடும்போது திருத்த மதிப்பீடுகளில் ரூ.1,51,870.61 கோடியாக உயருமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் ரூ.1,81,182.22 கோடியாக மேலும் உயருமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது திருத்த மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் 19.30 சதவிகிதம் அதிகமாகும். வரவு-செலவுத் திட்டத்தில் கணித்தவாறு, மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாய் திருத்த மதிப்பீடுகளிலும் ரூ.15,309.40 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், திருத்த மதிப்பீடுகளைவிட 32.10 சதவிகிதமாக உயர்ந்து, ரூ.20,223.51 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

★ ஒட்டுமொத்தமாக, திருத்த மதிப்பீட்டில் மொத்த வருவாய் வரவினங்கள் ரூ.2,45,659.67 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2022-2023ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீடான ரூ.2,31,407.28 கோடியோடு ஒப்பிடும்போது 6.16 சதவிகிதம் அதிகமாகும். வரும் ஆண்டில், வருவாய் வரவினங்கள் ரூ.2,70,515.23 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, திருத்த மதிப்பீடுகளைவிட 10.12 சதவிகிதம் அதிகமாகும்.

★ மொத்த வருவாய்ச் செலவினங்கள் 2022–2023ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடான ரூ.2,84,188.45 கோடியோடு ஒப்பிடும்போது திருத்த மதிப்பீடுகளில் ரூ.2,76,135.68 கோடியாகக் குறையுமென மதிப்பிடப்பட்டுள்ளது. வளர்ச்சிப் பணிகளுக்குப் போதுமான நிதி வழங்கப்படுவதை அரசு உறுதி செய்துள்ளது. மானியங்கள், நிதி பரிமாற்றங்களுக்கான செலவினங்கள், 2022–2023ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மதிப்பிடப்பட்ட ரூ.1,13,643.10 கோடியைக் காட்டிலும் திருத்த மதிப்பீடுகளில் ரூ.1,18,841.01 கோடியாக அதிகரிக்கப்பட்டு, வரும் நிதியாண்டில், மொத்த வருவாய்ச் செலவினம் ரூ.3,08,055.68 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

தமிழ்நாடு வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2023-2024

சிறப்பு அம்சங்கள்

மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** அவர்கள் 2023 - 2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்தார் - 21.03.2023

வேளாண்மைத்துறை

★ கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் 2,504 கிராம ஊராட்சிகளில் ரூ.230 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு சிறு தானிய இயக்கம்

★ ஒன்றிய, மாநில அரசு நிதி உதவியுடன் ரூ.82 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் செயல்படுத்தப்படவுள்ளது.

மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம்

★ விவசாயிகளின் உடனடித் தேவைகளை நிறைவேற்றவும், வருமானத்தை உயர்த்தவும்,பல்வேறுதிட்டக்கூறுகளுடன், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம் ரூ.64 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

அங்கக வேளாண்மை ஊக்குவிப்பு

★ விவசாயிகள் அங்ககச் சான்றிதழ் பெறுவதை ஊக்குவிக்க, சான்றுக் கட்டணத்திற்கு 10,000 எக்டருக்கு மானிய உதவி அளிக்க ரூ.26 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

சிறந்த அங்கக விவசாயிக்கான "நம்மாழ்வார் விருது"

★ அங்கக வேளாண்மையில் திரு. நம்மாழ்வார் ஆற்றிய பெரும் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், தமிழ்நாடு அரசால் 'நம்மாழ்வார்' பெயரில் விருது வழங்கப்படும்.

வேளாண் காடுகள் மூலம் பசுமைப் போர்வை

★ 75 இலட்சம் செம்மரம், சந்தனம், தேக்கு, ஈட்டி போன்ற உயர்மதிப்புள்ள மரக்கன்றுகள் முழு மானியத்தில் வழங்க ரூ.15 கோடி ஒதுக்கப்படும்.

ஆதிதிராவிட, பழங்குடியின குறு, சிறு விவசாயிகளுக்குக் கூடுதலாக 20 சதவிகித மானியம்

★ ஆதிதிராவிட குறு, சிறு விவசாயிகளுக்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டிலும், பழங்குடியின குறு, சிறு விவசாயிகளுக்கு ரூ.1 கோடி நிதி ஒதுக்கீட்டிலும், வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டு இயந்திரங்கள், சூரிய சக்தி பம்புசெட்டுகள், சூரிய சக்தி உலர்த்திகள், குளிர் சாதனக் கிடங்குகள், ஒருங்கிணைந்த பண்ணையம், பசுமைக்குடில், நிழல் வலைக்குடில் போன்ற உயர்மதிப்பு இனங்களுக்கு 20 சதவீத கூடுதல் மானியம் வழங்கப்படும்.

மின்னணு வேளாண்மைத் திட்டம்

★ 37 மாவட்டங்களில் 385 வட்டார வேளாண் விரிவாக்க மையங்களிலும் பணமில்லாப் பரிவர்த்தனை விரிவுபடுத்தப்படும்.

ஒருங்கிணைந்த பண்ணையம்

★ ரூ.50 ஆயிரம் மானியத்தில் 10 ஆயிரம் ஒருங்கிணைந்த பண்ணையத் தொகுப்புகளுக்கு ரூ.50 கோடி ஒதுக்கப்படும்.

பயறு பெருக்குத் திட்டம்

★ பயறு வகைகளின் பரப்பளவையும், உற்பத்தியையும் அதிகரித்திட பயறு பெருக்குத் திட்டம் ரூ.30 கோடியில் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

★ கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, சேலம் மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளித்துத் துவரையை நடவு முறையில் சாகுபடி செய்ய ரூ.18 கோடி ஒதுக்கப்படும்.

எண்ணெய் வித்துக்கான சிறப்புத் திட்டம்

★ சூரியகாந்தி பயிரின் உற்பத்தித் திறனை உயர்த்தவும், அதிக இலாபம் தரக்கூடிய நிலக்கடலை, எள், சோயா, மொச்சை போன்ற பயிர்களைப் பரவலாக்கம் செய்திடவும் ரூ.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

தென்னை வளர்ச்சி மேம்பாடு

★ ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள் குறித்த செயல்விளக்கத் திடல்கள் 10 ஆயிரம் எக்டர் பரப்பிலும், மண்டலத் தென்னை நாற்றுப் பண்ணைகள் தோற்றுவித்தல், எருக்குழி தோற்றுவித்தல், மறுநடவு, புத்தாக்கத் திட்டம் ரூ.20 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

பருத்தி இயக்கம்

★ பருத்தி உற்பத்தியை 4 இலட்சத்து 52 ஆயிரம் பேல்களாக உயர்த்தும் வகையில், ரூ.12 கோடி நிதி ஒதுக்கீடு.

பயிர் காப்பீட்டுத் திட்டம்

★ காப்பீட்டுக் கட்டண மானியத்தில் மாநில அரசின் பங்களிப்பாக ரூ.2,337 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு

★ பழங்குடியின மக்களின் ஊட்டச்சத்துப் பாதுகாப்பிற்காகவும், அவர்களின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும், காய்கறி நாற்றுகள், விதைகள் அடங்கிய வீட்டுத்தோட்டத் தளைகள் 5,000 குடும்பங்களுக்கு வழங்க ரூ.22 இலட்சம் ஒதுக்கப்படும்.

கரும்பு விவசாயிகளுக்குச் சிறப்பு ஊக்கத்தொகை

★ ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள நியாயமான மற்றும் ஆதாய விலையான டன் ஒன்றுக்கு ரூ.2,821க்கு மேல் கூடுதலாக ரூ.195 தகுதியுள்ள கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக மொத்தம் ரூ.253 கோடி வழங்கப்படும்.

முருங்கை இயக்கம்

★ முருங்கையில் ஏற்றுமதி வாய்ப்புகளை மேலும் அதிகரிக்கும் வகையில் சாகுபடி முறைகள், மதிப்புக் கூட்டுதல் பயிற்சி, சான்றிதழ் பெறும் முறைகள், ஏற்றுமதி நெறிமுறைகள் குறித்த பயிற்சிகளுக்காக ரூ.11 கோடி ஒதுக்கப்படும்.

தக்காளி, வெங்காயம் சீராகக் கிடைக்கச் செய்தல்

★ பெரம்பலூர், நாமக்கல், சேலம், தூத்துக்குடி, திருச்சி, திண்டுக்கல், திருப்பூர் போன்ற மாவட்டங்களில் விதைப்பு இயந்திரங்கள், சேமிப்புக் கட்டமைப்புகள், அறுவடை இயந்திரங்கள், வெங்காயத்தாள் பிரித்தெடுக்கும் கருவிகள் ஆகிய உதவிகள் வழங்க ரூ.29 கோடி நிதி ஒதுக்கீடு.

★ தக்காளி உற்பத்தியினை அதிகரிக்க கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், திண்டுக்கல், தேனி, திருப்பூர், கோவை ஆகிய மாவட்டங்களில் புதிய உத்திகளுக்காக ரூ.19 கோடி ஒதுக்கீடு.

சௌ சௌ, பட்டாணி, பீன்ஸ் போன்ற குளிர்காலக் காய்கறிகள் உற்பத்தி

★ சௌ சௌ, பட்டாணி, பீன்ஸ் போன்ற குளிர்காலக் காய்கறிகள், மலைக்காய்கறிகள் உற்பத்தி செய்ய இத்திட்டம், 1,000 எக்டர் பரப்பில் ரூ.2.50 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

நுண்ணீர்ப் பாசனம் அமைத்தல்

★ ரூ.744 கோடி நிதியில், சுமார் 60 சதவிகித நிதியான ரூ.450 கோடியில் குறு வட்டங்களில், 53,400 எக்டர் பரப்பில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

பத்து இலட்சம் குடும்பங்களுக்குப் பழச் செடிகள் விநியோகம்

★ பத்து இலட்சம் குடும்பங்களுக்கு மா, கொய்யா, பலா, நெல்லி, எலுமிச்சை, சீதாப்பழம் போன்ற பல்லாண்டுப் பழச் செடிகள் அடங்கிய தொகுப்பு ரூ.15 கோடி நிதியில் வழங்கப்படும்.

பாதுகாக்கப்பட்ட சாகுபடி முறையைப் பரவலாக்கல்

★ பாதுகாக்கப்பட்ட சாகுபடி மூலம் உயர் மதிப்புள்ள காய்கறிகள், பூக்கள் ஆகியவற்றை விவசாயிகள் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்து அதிக வருமானம் பெற ரூ.22 கோடி ஒதுக்கீடு.

கீழ்பவானியில் ஒருங்கிணைந்த நுண்ணீர்ப் பாசன அமைப்பு

★ ரூ.50 கோடி மதிப்பீட்டில், ஈரோடு மாவட்டத்திலுள்ள கீழ்பவானி பாசனப் பரப்புப் பகுதியில் சாகுபடிக்கு உகந்த பகுதிகளில் ஒருங்கிணைந்த நுண்ணீர்ப் பாசனக் கட்டமைப்புகளைச் சோதனை முறையில் 960 எக்டர் பரப்பளவில் தொகுப்பு முறையில் ஏற்படுத்திட புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

தேனி மாவட்டத்தில் வாழை தொகுப்பு வளர்ச்சித் திட்டம்

★ தேனி மாவட்டத்தில், வாழைக்கென்று ஒரு தனித் தொகுப்புத் திட்டம் ரூ.130 கோடி மதிப்பீட்டில் அரசு, தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும்.

பனை மேம்பாட்டு இயக்கம்

★ பனை சாகுபடியை ஊக்குவிக்க விவசாயிகள், அரசு சாராத் தொண்டு நிறுவனங்களுக்கு ஆற்றங்கரைகள் போன்ற பொது இடங்களில் நடவு செய்ய 10 இலட்சம் பனை விதைகள் வழங்கப்படும்.

பனை ஆராய்ச்சி நிலையம் அமைத்தல்

★ தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரியில் பனைக்கெனத் தனி ஆராய்ச்சி நிலையம் அமைக்க ரூ.15 கோடி ஒதுக்கப்படும்.

வேளாண்மைப் பொறியியல் துறை

வேளாண் இயந்திரமயமாக்குதல்

★ வேளாண் இயந்திரங்கள், மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள், கரும்புச் சாகுபடிக்கு ஏற்ற இயந்திரங்கள், கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் ஆகிய இனங்களுக்காக ஒன்றிய, மாநில அரசின் நிதியிலிருந்து ரூ.125 கோடி ஒதுக்கீடு.

மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள்

★ தேனி மாவட்டத்தில் வைகை அணை, சேலம் மாவட்டத்தில் மேட்டூர் அணை ஆகிய அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் மழை நீர்ச் சேகரிப்புக் கட்டமைப்புகள் செயல்படுத்தப்படும்.

கடைமடைக்கும் பாசன நீர்

★ கடைமடைக்கும் பாசன நீர் செல்லும் வகையில் வாய்க்கால்களைத் தூர்வாரும் பணிகள், ஒரு இலட்சத்து 32,000 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் ரூ.5 கோடி ஒதுக்கீடு.

வட்டார அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் செயல்பாட்டினை வலுப்படுத்துதல்

★ டிராக்டர்கள், ரோட்டவேட்டர்கள், எந்திரக் கலப்பைகள், கரும்பு அறுவடை இயந்திரங்கள், நெல் அறுவடை இயந்திரங்கள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு தேவைப்படும் விவசாயிகளுக்குத் துறையின் இ-வாடகைச் செயலியின் மூலமாகக் குறைந்த வாடகைக்கு விடப்படும்.

ஒவ்வொரு கிராமத்திற்கு இரு "பவர் டில்லர்கள்'

★ "கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட" கிராமங்களில், ஒரு கிராமத்திற்கு இரண்டு பவர்டில்லர் இயந்திரங்கள் என்ற அடிப்படையில் 2,504 கிராமங்களுக்கு ரூ.43 கோடி மானியத்தில் 5,000 பவர்டில்லர்கள் வழங்கப்படும்.

வேளாண்மை விற்பனை – வேளாண் வணிகத்துறை

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் புதிய, கூடுதல் கட்டமைப்புகள்

★ விழுப்புரம், தஞ்சாவூர், திருவண்ணாமலை, கடலூர் மாவட்டங்களில் பரிவர்த்தனைக் கூடங்கள், உலர் களங்கள், சேமிப்புக் கிடங்குகள் போன்ற வசதிகள் மொத்தம் ரூ.22 கோடி மதிப்பீட்டில் ஒன்றிய, மாநில அரசு நிதியில் அமைக்கப்படும்.

★ சேலம், நாமக்கல் மாவட்டங்களில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குப் புதிய கட்டமைப்பு வசதிகள், ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு கூடுதல் சேமிப்புக் கிடங்குகள் ரூ.36 கோடி மதிப்பீட்டில் விற்பனைக் குழு நிதியில் அமைக்கப்படும்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் சேமிப்புக் கிடங்குகளை மறு கட்டமைப்பு செய்தல்

★ 22 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உள்ள 27 சேமிப்புக் கிடங்குகளில் 34,000 மெட்ரிக் டன் கொள்ளளவு ஏற்படும் வகையில், ரூ.54 கோடி நிதி ஒதுக்கீட்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் மறு கட்டமைப்பு மேற்கொள்ளப்படும்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைப் புதுப்பித்தல்

★ ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அதிக வரத்துள்ள 100 விற்பனைக் கூடங்களில் உள்ள கட்டமைப்பு வசதிகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் விற்பனைக்குழு நிதியில் புதுப்பிக்கப்படும்.

உழவர் சந்தைகளைப் புதுப்பித்தல்

★ திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, நாமக்கல், புதுக்கோட்டை, திருப்பூர், திருவண்ணாமலை போன்ற மாவட்டங்களில் உள்ள 25 உழவர் சந்தைகளுக்கு அடிப்படைத் தேவைகளான குடிநீர், கழிப்பறை வசதி, கடைகள் புனரமைப்பு, நடைபாதை வசதிகள் போன்ற பணிகள் ரூ.9 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

கொப்பரைத் தேங்காய் கொள்முதல்

★ ரூ.640 கோடி மதிப்பிலான 56,000 மெட்ரிக் டன் கொப்பரைத் தேங்காயினை ஒன்றிய அரசு அறிவித்த குறைந்தபட்ச ஆதரவு விலையில் தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையத்துடன் இணைந்து கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

★ தமிழ்நாடுவேளாண்மைப்பல்கலைக்கழகத்திற்கு வரும் ஆண்டு ரூ. 530 கோடி நிதி வழங்கப்படும்.

தாவரவியல் பூங்காவினைச் சீரமைத்தல்

★ கோவை மாநகரத்தில் புகழ்பெற்றுத் திகழும் தாவரவியல் பூங்காவினைச் சீரமைக்க, ரூ.5 கோடி ஒதுக்கீடு.

வாழை ஆராய்ச்சி நிலையம் அமைத்தல்

★ தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரியில் வாழைக்கென ஒரு தனி ஆராய்ச்சி நிலையம் அமைக்க ரூ.15 கோடி ஒதுக்கீடு.

கூட்டுறவு, உணவு, நுகர்வோர் பாதுகாப்பு

கூட்டுறவுப் பயிர்கடன்

★ வரும் ஆண்டில் ரூ.14,000 கோடி அளவிற்குக் கூட்டுறவுப் பயிர்க்கடன் வழங்கப்படும். ஆடு,

மாடு, கோழி, மீன் ஆகியவற்றை வளர்க்கும் விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கூட்டுறவுக் கடனாக ரூ.1,500 கோடி வழங்கப்படும்.

நேரடி நெல் கொள்முதல்

★ நெல் கொள்முதல் செய்ய சன்னரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்குக் கூடுதலாக 100 ரூபாயும், பொதுரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்குக் கூடுதலாக 75 ரூபாயும் ஊக்கத் தொகையாக வழங்க ரூ.500 கோடி ஒதுக்கீடு.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் வேளாண் இயந்திரங்கள்

★ தமிழ்நாட்டில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பகுதிகேற்ற வேளாண் இயந்திரங்கள் வாங்க ரூ.500 கோடி நபார்டு வங்கி உதவியுடன் ஒதுக்கீடு.

நீர்வளத் துறை

★ காவிரி பாசனப் பகுதிகளில் உள்ள ஆறுகள், வாய்க்கால்கள், வடிகால்களில் தூர்வாரும் பணிகள் ரூ.90 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

ஊரக வளர்ச்சி

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம்

★ ரூ.6,600 கோடி மதிப்பீட்டில் இயற்கை வள மேலாண்மைப் (NRM) பணிகளான தடுப்பணை, பண்ணைக் குட்டைகள், கசிவு நீர்க்குட்டைகள், புதிய குளங்கள், கால்வாய்களைத் தூர்வாருதல் உள்ளிட்ட விவசாயம் சார்ந்த பணிகள், கல் வரப்பு, மண் வரப்பு, தனிநபர் கிணறு, சமுதாயக் கிணறு, பால் சேகரிப்பு மையம், உணவு தானியக் கிடங்கு, தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிட 19,400 பயனாளிகளுக்கு உதவித்தொகை வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

★ ரூ.710 கோடிச் செலவில் கிராமப் பஞ்சாயத்துகளில் 2,750 கிலோமீட்டர் நீளத்திற்கு ஊரகச் சாலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-IIஇல் ரூ.368 கோடி மதிப்பீட்டில் கதிரடிக்கும் களம், சேமிப்புக் கிடங்கு, பால் சேகரிப்பு மையம், சிறு பாசனத் தொட்டிகள், குளங்கள், ஊருணிகளின் புத்தாக்கம், புனரமைப்பு ஆகியவற்றை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம்

★ 40 சிறுதானிய தொகுப்புகளுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் நிதி உதவி தந்து ஊக்குவிப்பதற்காக, அரசு ரூ.40 இலட்சம் நிதியினை ஒதுக்கும். மேலும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் 'மதி-பூமாலை' வளாகத்திலும் சிறுதானியங்களில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்காக, சிறுதானிய சிற்றுண்டி உணவகம் உருவாக்கப்படும்.

★ குடும்ப வருமானத்தை உயர்த்தும் வகையில், அந்தந்தப் பகுதியில் கிடைக்கும் இயற்கை வள ஆதாரங்களை உரிய முறையில் பாதுகாத்து, ஒருங்கிணைந்த பண்ணையத் தொகுப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டில் தலா ரூ.40 இலட்சம் நிதி உதவி வழங்கும் வகையில் ரூ.44 கோடி ஒதுக்கப்படும்.

எரிசக்தி

★ உழவர் பெருமக்களுடைய நீர்ப் பாசன வசதியை மேம்படுத்துவதற்காக 23 இலட்சம் இலவச மின் இணைப்புகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தேவையான கட்டணத் தொகையாக, சுமார் ரூ.6,536 கோடி நிதியினைத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு அரசு வழங்கும்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

★ உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்கள் அமைக்கும் தனிநபர்களுக்கும் குழுக்களுக்கும் மானிய உதவி, சுயஉதவிக்குழுக்களுக்கு ஆதார மூலதனம், பொதுவான கட்டமைப்புகள் ஆகியவற்றுக்காக ரூ.160 கோடி ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கப்படும்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் வேளாண் சார்ந்த தொழிற்சாலைகள்

★ காவிரி டெல்டா பகுதிகளில் வேளாண்மை சார்ந்த பல்வேறு துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்துத் திறம்பட செயல்படுத்தும் வகையில், அடுத்த ஐந்து ஆண்டுகளில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் வேளாண் தொழில் பெருந்தடத் திட்டம் செயல்படுத்தப்படும்.

ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு ‘மகளிர் உரிமைத் தொகை’ வழங்கும் திட்டம்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மகளிர் உரிமைத் தொகை குறித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அளித்த விளக்கம் - 27.03.2023

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே.மணி அவர்கள், மகளிர் உரிமைத் தொகை பற்றிப் பேசுகிறபோது, மனந்திறந்து பாராட்டினார். ஆனால், அதே நேரத்தில், கிடைக்காதவர்களின் நிலை என்ன என்று ஒரு கேள்விக்கணையையும் அவர் தொடுத்து, அந்தப் பிரச்சினையையும் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார். இது இந்த அவையிலே மட்டுமல்ல; வெளியிலேயும், அதிலும் குறிப்பாக, பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும், அதையும் தாண்டி, பல சமூக வலைதளங்களிலும் இதுகுறித்துப் பல்வேறு விவாதங்கள் - இதைப்பற்றி விமர்சனங்கள் செய்தும், பாராட்டியும், புகழ்ந்தும் தொடர்ந்து பேசியும், எழுதியும் கொண்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் ஒரு நீண்ட விளக்கத்தை நான் இந்த அவையில் பதிவு செய்வது என் கடமையெனக் கருதுகிறேன்.

சுயமரியாதைக் கொள்கையில் தந்தைப் பெரியார், இனமான எழுச்சியில் அறிவுச்சுடர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா, நவீனத் தமிழகத்தைக் கட்டமைப்பதில் நம்முடைய தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோர் வகுத்தளித்த பாதையில், தமிழ்நாட்டை வளமான, வலிமையான மாநிலமாக உருவாக்கிடவும், அனைத்துத் துறைகளிலும் முன்னணி மாநிலமாகத் திகழ்ந்திடச் செய்திடவும், நாள்தோறும் எண்ணற்ற மக்கள்நலன் சார்ந்த திட்டங்களை நமது அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருவதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

சமூகம், அரசியல், பொருளாதாரம், மக்கள் மேம்பாடு அனைத்திலும் நவீனமயம் என்கிற திராவிட மாடல் ஆட்சியை நாம் நடத்தி வருகிறோம். ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், தேர்தல் அறிக்கையில் தெரிவித்த வாக்குறுதிகளை நிறைவேற்றிடும் வகையிலான அறிவிப்புகளை மட்டுமல்லாமல், அறிவிக்காத பல உன்னதமான திட்டங்களையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை இந்தப் பேரவையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்களும், இந்த நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள்.

அந்தவகையில், இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், இந்த நூற்றாண்டின் மகத்தானத் திட்டமான 'மகளிர் உரிமைத் தொகை' குறித்த அறிவிப்பு வெளியாகி, நாடெங்கும், ஏன், உலகெங்கும் இருக்கக்கூடிய பொருளாதார வல்லுநர்கள் அனைவருடைய கவனத்தையும் அது ஈர்த்துள்ளது. இந்த மாபெரும் திட்டத்தினைச் செயல்படுத்தும்விதம் குறித்தும், அதில் பயன் பெறப்போகக்கூடிய குடும்பத் தலைவிகளின் தேர்வு குறித்தும், இம்மாமன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவித்த கருத்துகளையொட்டியும், அதற்குத் தேவையான விளக்கத்தை இந்த அவையில் நான் பதிவு செய்வது என் கடமையாகக் கருதுகிறேன்.

வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப்பார்த்தால், தாய்வழிச் சமூக முறைதான் மனிதகுலத்தை முதலில் வழிநடத்தி வந்திருக்கிறது என்ற உண்மை தெரியவரும். உழவுக் கருவிகளைக் கண்டுபிடித்து, வேளாண் சமூகமாக மாறியபோதுகூட, பெண்களின் உழைப்பு ஆண்களுக்கு நிகராகவே அமைந்திருந்தது. ஆனால், காலப்போக்கில், மதத்தின் பெயராலும், பழமையான மரபுகளின் பெயராலும், பல்வேறு ஆதிக்க வர்க்கத்தாலும் பெண்கள் வீட்டுக்குள் முடக்கப்பட்டார்கள். அவர்களுக்குக் கல்வியறிவு மறுக்கப்பட்டது. பெண்குலத்தின் உழைப்பு நிராகரிக்கப்பட்டது. பூட்டிய இரும்புக் கூட்டின் கதவினைத் திறந்து, பெண் அடிமைத்தனத்தைத் தகர்த்து, அவர்களுக்கான சமூக, பொருளாதார சுதந்திரத்தை மீட்க எத்தனையோ சமூகச் சீர்திருத்தவாதிகள் முன்வந்தாலும், இருபதாம் நூற்றாண்டினுடைய தந்தைப் பெரியாரின் சுயமரியாதை இயக்கமே வீறுகொண்ட போராட்டங்களின் மூலமாகப் பெண் விடுதலைக்குப் பாதை அமைத்தது. நீதிக்கட்சி ஆட்சி தொடங்கி, கடந்த ஒரு நூற்றாண்டுக் காலம் திராவிட இயக்கம் அயராது பணியாற்றியதன் விளைவு, இன்று பள்ளி, கல்லூரிப் படிப்புகளில் மாணவிகள் அதிகம் நுழைந்துள்ளார்கள்.

அதுமட்டுமல்ல; அவர்கள் அதிக மதிப்பெண்கள் வாங்குவதைப் பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது. அரசுப் பணியாளர் தேர்வுகளில் பெண்கள் அதிகம் தேர்ச்சி பெறுவது தமிழ்ச் சமூகத்தின் முதிர்ச்சியைக் காட்டுகிறது. இன்றளவும் ஏழை மக்களின் குடும்பங்களிலும், கிராமப் பொருளாதாரத்தைச் சுமக்கும் முதுகெலும்பாகவும் பெண்கள் இருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. வேலையிலும், ஊதியத்திலும், சமூகப் பொறுப்பில் இடைவெளியும், வேறுபாடும் ஒருசில இடத்தில் இருந்தாலும், ஆணின் உழைப்புக்கு எந்தவிதத்திலும் பெண்கள் குறைந்தவர்கள் அல்லர் என்பது நம் கண்முன்னால் நிரூபிக்கப்பட்டு வருகிறது.

சமூகத்தில் வெற்றி பெறக்கூடிய ஒவ்வொரு ஆணுக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பார் என்று கூறுவதுண்டு. உண்மையில், ஒவ்வொரு நாளும் தன் திறனுக்கேற்ற பணிபுரிந்து, பொருள் ஈட்டும் ஒவ்வொரு ஆணுக்குப் பின்னாலும், தன் தாய், சகோதரி, மனைவி என அந்த ஆணின் வீட்டுப் பெண்களுடைய பல மணிநேர உழைப்பு மறைந்து இருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது? ஒரு ஆணின் வெற்றிக்காகவும், தங்கள் குழந்தைகளின் கல்வி, உடல்நலம் காக்கவும் இந்தச் சமூகத்திற்காகவும் வீட்டிலும், வெளியிலும் ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரங்கள் அவர்கள் உழைத்து இருப்பார்கள்? அதற்கெல்லாம் ஊதியம் கணக்கிட்டு இருந்தால், இந்நேரம் நம் நாட்டில் குடும்பச் சொத்துகள் அனைத்திலும் சமமாகப் பெண்கள் பெயரும், சட்டம் இயற்றாமலேயே இடம் பெற்றிருக்கும்.

இப்படிக் கணக்கில் கொள்ளப்படாத பெண்களின் உழைப்பை முறையாக அங்கீகரிக்கத்தான் 'மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரசு அங்கீகரித்தால், ஆண்களை உள்ளடக்கிய இந்தச் சமூகமும் பெண்களுக்கான சமஉரிமையை வழங்கிடும் நிலை விரைவில் உருவாகிடும் என்று நமது அரசு உறுதியாக நம்புகிறது. எனவேதான், இந்தத் திட்டத்திற்கு மகளிருக்கான உதவித் தொகை என்று இல்லாமல் 'மகளிர் உரிமைத் தொகை' என்று கவனத்துடன் பெயரிடப்பட்டிருக்கிறது.

Universal Basic Income என்ற பெயரில் உலகில் பல நாடுகளில் சோதனை முறையில், குறிப்பிட்ட சில பகுதிகளில், ஒரு சில சமூகப் பிரிவினரிடம் மட்டும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. அப்படிப் பரிசோதனை அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட திட்டத்தின் மூலமாகவே, பல குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதாகப் பொருளாதார ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்தத் திட்டத்தின் மூலம், வறுமை பாதியாகக் குறைந்திட வாய்ப்பு உண்டு என்றும், கிடைக்கும் நிதியைப் பெண்கள் தங்கள் குழந்தைகளின் கல்விக்கும், ஊட்டச்சத்து மற்றும் மருத்துவச் செலவு செய்திடவும் முன்னுரிமை தருகிறார்கள் எனவும், சிறு சிறு தொழில்களைச் செய்ய முன்வருகிறார்கள் எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இவை அனைத்துக்கும் மேலாக, தன்னம்பிக்கை பெற்றுள்ளார்கள் என்றும் சொல்லப்படுகிறது. பரிசோதனை முயற்சியாக உலகில் சில நாடுகளில் ஆங்காங்கே நடைமுறைப்படுத்திய திட்டத்திற்கே இவ்வளவு பயன்கள் கிடைக்கின்றன என்றால், தமிழ்நாட்டில் செயல்படுத்தப் போகும் இந்த மாபெரும் முயற்சி, எதிர்காலத்தில் தமிழ்ச் சமூகத்தில் உருவாக்கப் போகும் பயன்களை, இந்த மாமன்ற உறுப்பினர்கள் ஒரு நிமிடம் எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

இந்த 'மகளிர் உரிமைத் தொகை' வழங்கும் திட்டத்திற்காக, இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.7,000 கோடி ஒதுக்கப்பட்டு இருப்பதையொட்டி, எவ்வளவு பேர் பயன்பெறுவார்கள் என்று பலர் மனக்கணக்குப் போட்டு வருகிறார்கள் என்பதை நாம் பார்த்து வருகிறோம். இதுகுறித்து என்னுடைய கருத்தைப் பதிவு செய்வதற்கு முன்னால், ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஊடகம் ஒன்றில், "இந்தத் திட்டத்தின் உதவியைச் செல்வந்தர்களுக்கும், வருமான வரி செலுத்துபவர்கள், அரசு ஊழியர்கள் என அனைவருக்கும் கொடுக்கலாமா?" என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு, 'இல்லாத ஏழை மக்களுக்குக் கொடுத்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும்' என்று ஒரு பெண்மணி பதில் சொல்கிறார்.

இந்தத் திட்டம் யாருக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று பொதுமக்களுக்கே தெரிகிறது. 'பகிர்தல் அறம்' என்றும்; 'பசித்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்றும்; தமிழ் மரபின் தாக்கத்தால் உருவான நலத்திட்டங்களின் நோக்கமும், தேவையானவர்களுக்குத் தேவையான உதவியை, உரிய நேரத்தில் தேடித் தேடி வழங்குவதில்தான் இருக்கும். 'அனைவருக்கும் வீடு' என்ற திட்டம் அறிவிக்கப்பட்டால், வீடு இல்லாதவர்களுக்கு ஓர் கனவு இல்லம் அமைத்துத் தருவது என்று பொருள். 'அனைவருக்கும் நிலம்' என்றொரு திட்டம் என்றால், நிலமற்ற கூலித் தொழிலாளர்கள், உழுபவர்களுக்கு நிலம் சொந்தம் என்பதுதான் அடிப்படை நோக்கம். 'முதியோர் ஓய்வூதியம்' என்றால், ஆதரவற்ற முதியோரின் நலன் காக்க முனையும் திட்டம் என்று பொருள். அனைவருக்கும் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் என்றால், வேலைவாய்ப்பற்றவர்களுக்கு முன்னுரிமை என்று பொருள்.

அந்தவகையில், இந்த 'மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்' இரண்டு நோக்கங்களைக் கொண்டது. பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக்கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம் முதன்மையானது. அடுத்து, ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாகும்.

மகளிரின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அறிவிக்கப்பட்டிருக்கும் மாதம் ரூ.1,000 என்பது, தேவைப்படும் குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், அதிகாலையில் கடற்கரை நோக்கி விரைந்திடும் மீனவ மகளிர், கட்டுமானத் தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், வணிகம் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களில் சொற்ப ஊதியத்தில் பணிபுரியும் மகளிர், ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியக்கூடிய பெண்கள் எனப் பல்வேறு வகைகளில் தங்கள் விலைமதிப்பில்லா உழைப்பைத் தொடர்ந்து வழங்கி வரும் பெண்கள் இந்தத் திட்டத்தால் பயன்பெறுவார்கள். இந்தத் திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் வெளியிடப்படும்.

இதனைச் செய்ய முடியுமா? இதற்கு நிதி இருக்குமா என்றெல்லாம், கேள்விகளை எழுப்பி, எங்கே திராவிட முன்னேற்றக் கழக அரசு இதனைச் செய்துவிடுமோ என்ற தங்கள் அச்சத்தைப் பல்வேறு வகைகளிலே வெளிப்படுத்தி வந்தவர்களுக்குப் பதிலளிக்கக்கூடிய விதமாக, தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சமூகநீதி திட்டங்களிலேயே ஒரு மாபெரும் முன்னெடுப்பாக, வரலாற்றில் விளங்கவுள்ள, இந்த மகத்தான 'மகளிர் உரிமைத் தொகை' வழங்கும் திட்டம் ஏறத்தாழ ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ரூ.1,000 வழங்கிடும் வகையில் அமைந்திடும் என்பதை இந்த மாமன்றத்தில் மிகுந்த பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூகத்தின் சரிபாதியான பெண்களுக்குச் சமூக விடுதலை பெற்றுத் தந்தது திராவிட இயக்கம் என்றால், பொருளாதாரச் சமத்துவத்தை வழங்குவதுதான் திராவிட மாடல் அரசு என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். மாதம் ரூ.1,000 தங்கள் வாழ்வைச் சிறிதேனும் மாற்றிவிடும் என நம்பும் எந்தக் குடும்பத் தலைவியையும், மனிதநேய அடிப்படையிலான பெண் உரிமை காக்கக்கூடிய எனது தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசு கைவிட்டுவிடாது என்ற உறுதியை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்து அமைகிறேன். ❖

"அனைவருக்கும் IITM" திட்டத்தில் 250 அரசுப் பள்ளிகளுக்கு மின்னணு செய்முறைப் பெட்டகங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் மின்னணு செய்முறைப் பெட்டகங்களை வழங்கி ஆற்றிய உரை - 05.04.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 05.04.2023 அன்று சென்னை ஐ.ஐ.டி. வளாகத்தில், "அனைவருக்கும் IITM" திட்டத்தில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மின்னணு சார்ந்த செய்முறைப் பயிற்சிகள் அளித்திடும் வகையில் 250 அரசுப் பள்ளிகளுக்கு மின்னணு செய்முறைப் பெட்டகங்களை வழங்கினார். மேலும், "தமிழ்நாடு முதலமைச்சரின் திறனறித் தேர்வு" என்ற புதிய திட்டத்தினை அறிவித்தார்.

பல்வேறு கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்கள்

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வி நலன் கருதி பள்ளிகளின் வகுப்பறைக் கட்டடங்கள், குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், இணைய வசதிகளைப் பள்ளிகளில் ஏற்படுத்துதல், 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வித் தரத்தினை உயர்த்திட "இல்லம் தேடிக் கல்வி", "நம் பள்ளி நம் பெருமை", 'நான் முதல்வன்' என்கிற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம், அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் "புதுமைப் பெண்" திட்டம் எனப் பல்வேறு கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

அனைவருக்கும் IITM திட்டமானது, மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் 05.01.2023 அன்று சென்னை ஐ.ஐ.டி. வளாகத்தில் தொடங்கி வைக்கப்பட்டு அன்று முதல் 08.02.2023 வரை ஆறு கட்டங்களாக 250 பள்ளிகளைச் சேர்ந்த 500 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

அனைவருக்கும் IITM

நம் நாட்டின் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் முதன்மை நிறுவனமான சென்னை ஐஐடியைக் கிராமப்புற மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்களுக்கும் கொண்டு சேர்க்கும் முயற்சியாக அந்நிறுவனம் உருவாக்கி செயல்படுத்திவரும் திட்டம் "அனைவருக்கும் IITM" ஆகும்.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, ஐ.ஐ.டி., சென்னையால் வழங்கப்படும் நான்காண்டுப் படிப்பான B.S. Data Science and Applications (தரவுப் பயன்பாட்டு அறிவியல்) பட்டப்படிப்பில் கடந்த கல்வியாண்டில் சேர தமிழ்நாட்டிலுள்ள 20க்கும் மேற்பட்ட மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 87 மாணவர்களில் 45 மாணவர்கள் அரசுப் பள்ளி மாணவர்கள் ஆவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இத்திட்டத்தின் ஒரு பகுதியாக அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 250 மாணவர்களுக்குக் கடந்த ஆண்டு ஒரு வார காலம் சென்னை ஐ.ஐ.டியில் அடிப்படைக் கணிதம் மற்றும் அறிவியல் குறித்த உண்டு உறைவிடப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

மின்னணுவியல் செய்முறைப் பயிற்சி

சென்னை ஐ.ஐ.டி. வாயிலாக 250 அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 500 அறிவியல் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் வாயிலாக 1 இலட்சம் மாணவர்கள் பயன்தரும் வகையில் தயாரிக்கப்பட்ட மின்னணு செய்முறைப் பெட்டகங்களை அப்பள்ளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மின்னணுவியல் செய்முறை குறித்த பயிற்சி அளிக்கவுள்ள பயிற்சி முடித்த அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு இப்பயிற்சியின்போது ஆசிரியர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கிடும் வகையில் சென்னை, ஐ.ஐ.டி.க்கும் பள்ளிக்கல்வித் துறைக்கும் இடையே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம், 250 அரசுப் பள்ளிகளின் 1 இலட்சம் மாணவர்கள் மின்னணு சார்ந்த செய்முறைப் பயிற்சி பெற்று பயன்பெறுவார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சரின் திறனறித் தேர்வுத் திட்டம்

இத்திட்டங்களின் தொடர்ச்சியாகத், "தமிழ்நாடு முதலமைச்சரின் திறனறித் தேர்வு" என்ற புதிய திட்டத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

இப்புதிய திட்டத்தின் வாயிலாகப் பத்தாம் வகுப்புப் பயிலும் 1,000 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் அனைவருக்கும் பதினொன்றாம், பன்னிரெண்டாம் வகுப்புகளை நிறைவு செய்யும் வரை ஒவ்வொரு மாதமும் ரூ.1,000 கல்வி உதவித்தொகை வழங்கப்படும். மேலும், இம்மாணவர்களுக்கு ஐ.ஐ.டி. போன்ற தமிழ்நாட்டிலுள்ள முன்னணி கல்வி நிறுவனங்களில் தொடர் பயிற்சிகளும் வழங்கப்படும்.

இது மட்டுமல்லாமல், இத்திட்டத்தில் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் அவர்களுடைய உயர்கல்வியைத் தொடரும்பொழுதும் ஒவ்வோர் ஆண்டும் ரூ.12,000 வீதம் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மிகுந்த மகிழ்ச்சியான மனநிலையில் இந்த நிகழ்ச்சிக்கு நான் வந்திருக்கிறேன். நம் நாட்டினுடைய முன்னாள் பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒரு தொலைநோக்கு உணர்வோடு இந்தக் கல்விக் கழகத்தை உருவாக்கி இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பல மாணவர்களின் கனவுகளை மெய்ப்பிக்கக்கூடிய ஒரு சிறப்பானத் திட்டத்தை இன்று தொடங்கி வைப்பதிலே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இப்போது 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற ஒரு உன்னதமான நோக்கம் கொண்ட திராவிட மாடல் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எதன் பொருட்டும் எவருக்கும் எந்த வாய்ப்பும் தடுக்கப்படக் கூடாது!

அனைவருக்கும் அனைத்து வாய்ப்புகளும் திறந்திருக்க வேண்டும்!

இதுதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய நெறிமுறையாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அதனால்தான் கல்வித் துறையில் அதிகமான கவனத்தை நாம் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

அனைவருக்கும் கல்வி – அனைவருக்கும் உயர்கல்வி

கல்வி என்பது அனைவருக்கும் சமமாகக் கிடைத்தால், அடுத்தடுத்து அனைத்து வாய்ப்புகளையும் அவர்கள் சமமாகப் பெற்றிட முடியும்.

- ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளி மாணவர்களின் திறன் வளர்ச்சிக்காகவும், பள்ளிகளில் தரமான கற்றல் சூழலை உருவாக்கக்கூடிய வகையிலும் பல்வேறு வகையிலான முன்னெடுப்புகளை நாம் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம்.

- அனைத்துக் குழந்தைகளும் படிப்பதற்கான சிறந்த இடமாக அரசுப் பள்ளிகள் இன்று மாறி வருகிறது.

'அனைவருக்கும் கல்வி - அனைவருக்கும் உயர்கல்வி' என்பதை இலக்காகக் கொண்டிருக்கிறது நம்முடைய அரசு.

- மாணவர்களுக்குத் தேவையான அறிவியல் அறிவினை வளர்த்துக்கொள்ள தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் இந்த விழாவும் அமைந்திருக்கிறது.

- இந்தியாவில் உள்ள தொழில்நுட்ப நிறுவனங்களில் முதன்மையான கல்வி நிறுவனம் என்ற பெயரைப் பெற்றது இந்த IIT, சென்னை.

- IIT சென்னையில் சேர்ந்து உயர்கல்வி பயில்வதே தம் வாழ்வின் இலட்சியமாக நினைத்து, இலட்சக்கணக்கான மாணவர்கள் தங்களுடைய கற்றல் திறன்களை மேம்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

- இத்தகைய சிறப்பு வாய்ந்த தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், நம்முடைய அரசுப் பள்ளி மாணவர்களுக்கு உதவக்கூடிய வகையிலும் அவர்களையெல்லாம் ஊக்கப்படுத்தக்கூடிய வகையிலும், அறிவியல் சிந்தனைகளை வளர்க்கக்கூடிய வகையிலும் நம் பள்ளிக்கல்வித் துறையுடன் இணைந்து உருவாக்கியுள்ள திட்டமே "அனைவருக்கும் IITM".

- அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் நாட்டிலுள்ள முன்னணிக் கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி பயில்வதற்குத் தயார்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாக அமைந்திருக்கிறது.

கல்வித்துறையில் மாபெரும் அறிவுப்புரட்சி

எனது கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' என்ற திட்டத்தின் தொடர்ச்சியான முன்னெடுப்புதான் இது. நான் முதல்வன் திட்டத்தைப் போலவே இந்தத் திட்டமும் பயனுள்ளதாக அமையப் போகிறது.

- அனைவருக்கும் IITM திட்டத்தின் முதற்கட்டமாக, IIT சென்னையில் நான்காண்டுப் படிப்பாக வழங்கப்படும் B.S. Data Science and Applications (தரவுப் பயன்பாட்டு அறிவியல்) பட்டப்படிப்பில் சேர தமிழ்நாட்டிலுள்ள 20க்கும் மேற்பட்ட மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 87 மாணவர்களில் 45 மாணவர்கள் அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் என்பதை அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

- வானவில் மன்றம், காலை உணவுத் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, எண்ணும் எழுத்தும் இயக்கம், அரசு மேல்நிலைப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள், புதுமைப்பெண் திட்டம், மருத்துவம் பொறியியல் உள்ளிட்ட தொழிற் படிப்புகளில் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு உள்ஒதுக்கீடு உள்ளிட்ட ஏராளமான திட்டங்களைக் கல்வி வளர்ச்சிக்காக நாம் செய்து வருகிறோம். இவை அனைத்தும் சேர்ந்து கல்வித் துறையில் மாபெரும் அறிவுப் புரட்சிக்கு வித்திட்டிருக்கிறது.

திட்டத்தின் நோக்கம்

நமது அரசு கல்விக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் தருகிறது என்பதை நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கக்கூடிய, செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய திட்டங்கள் மூலமாக நீங்கள் அறியலாம்.

- இதுபோன்ற திட்டங்களின் தொடர்ச்சியாக, தற்போது "தமிழ்நாடு முதலமைச்சரின் திறனறித் தேர்வுத் திட்டம்" என்ற மிக முக்கியமான புதிய திட்டத்திற்கான அறிவிப்பினை இந்த நிகழ்வில் வெளியிட்டு, அறிமுகம் செய்து, தொடங்கி வைப்பதில் நான் பெருத்த மகிழ்ச்சி அடைகிறேன்.
- தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை மேலும் ஊக்கப்படுத்துவதற்கும் அவர்கள் உயர்கல்வியைத் தொய்வின்றித் தொடர்வதற்கும் உதவி செய்வதே, இந்தத் திட்டத்தினுடைய நோக்கம்!
- இந்த திட்டத்தின் வாயிலாகப் பத்தாம் வகுப்புப் பயிலும், 500 மாணவர், 500 மாணவியர் என 1,000 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் அனைவருக்கும் சென்னை ஐ.ஐ.டி. போன்ற முன்னணி கல்வி நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு வழிகாட்டுதல் வழங்கப்படும். அவர்களுடைய பன்னிரெண்டாம் வகுப்பினை நிறைவு செய்யக்கூடிய வகையில், ஒவ்வொரு மாதமும் ரூ.1,000 வழங்கப்படும்.
- இந்தத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தங்களுடைய இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பைத் தொடரும் போதும் ஒவ்வொரு ஆண்டும் ரூ.12,000 வீதம் உதவித்தொகையும் பெறுவர் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எதன் பொருட்டும் ஒருவரது வாய்ப்புப் பறிபோகக்கூடாது என்று நான் தொடக்கத்திலே சொன்னேன். "அரசுப் பள்ளியில் படிக்கும் நமக்கு, தனியார் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு இணையான தனிப்பயிற்சிகள் கிடைக்கவில்லையே?" என்ற ஏக்கம் யாருக்கும் இருக்கக் கூடாது. அதற்காகத்தான் இந்தத் திட்டம்!

சமூகநீதி

சமூக அமைப்போ, பொருளாதார நிலைமையோ - அவர்களது வளர்ச்சியைத் தடுக்கக் கூடாது. பெண் என்பதற்காகப் பள்ளிப் படிப்போடு அவர்களது கல்வி நிலை சுருக்கப்படக் கூடாது.

இத்தகைய சமூக அநீதிகளைக் களைவது தான் சமூகநீதி!

இடஒதுக்கீடாக இருந்தாலும், கல்வி உதவித் தொகைகளாக இருந்தாலும் தரப்படுவதற்கு இதுதான் காரணம். இதுபோன்ற சமூக நலத்திட்டங்களின் காரணமாகத்தான் சமூகமும் வளர்ந்துள்ளது. நாடும் வளர்ந்துள்ளது.

சமூகத்தின் அனைத்துத் தரப்பின் அறிவு சக்தியும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அதற்கு கல்வி - அறிவியல்பூர்வக் கல்வி - பகுத்தறிவுக் கல்வி வேண்டும்.

மன ஆற்றல்

கல்வி என்பது, வேலைக்குத் தகுதிப்படுத்துவதாக மட்டும் இருக்கக் கூடாது. மாணவர்களைத் தன்னம்பிக்கை உள்ள மனிதர்களாகத் தகுதிப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

ஐ.ஐ.டி. போன்ற உயர் கல்வி நிறுவனங்கள் அறிவாற்றலை மட்டுமல்ல, மன ஆற்றலையும் உருவாக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர் திறனறித் தேர்வுத் திட்டத்தை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மீண்டும் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே உங்களோடு சேர்ந்து நானும் பங்கேற்கக்கூடிய ஒரு நல்வாய்ப்பைப் பெற்றமைக்கு மீண்டும் என்னுடைய நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

“வைக்கம் போராட்ட நூற்றாண்டு” ரூ.8.14 கோடிச் செலவில் கேரள மாநிலம் பெரியார் நினைவிடம் மறுசீரமைப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் குறித்து, விதி 110இன்கீழ் அளித்த அறிக்கை - 30.03.2023

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று வரலாற்றிலே ஒரு முக்கியமான நாள். 1924ஆம் ஆண்டு, மார்ச் 30 அன்று, மாபெரும் சமூகச் சீர்திருத்தத்திற்கு அடையாளமாக விளங்கும் வைக்கம் போராட்டம் தொடங்கியதன் நூற்றாண்டு தொடக்க நாள் இன்று.

அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நாளில் வைக்கம் போராட்டம் வெற்றி பெறக் காரணமாக இருந்த பகுத்தறிவுப் பகலவன் வைக்கம் வீரர் தந்தைப் பெரியாரைப் போற்றும் விதமாக, வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பு ஒன்றை விதி 110இன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு, இந்த மாமன்றத்தில் வெளியிடுவதை என் வாழ்வில் கிடைத்தற்கரிய நல்வாய்ப்பாக எண்ணி மகிழ்கிறேன்.

தந்தைப் பெரியார் அவர்களைப் பற்றி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய கவிதை வரிகள் சிலவற்றை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

வங்கத்துத் தாகூர் போல் தாடியுண்டு
பொங்குற்ற வேங்கை போல்
நிமிர்கின்ற பார்வை உண்டு

செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு
வெண் சங்கொத்த கண்களிலே
விழியிரண்டும் கருவண்டு
அதில் சாகும்வரை ஒளி உண்டு!
பம்பரமும் ஓய்வுபெறும் சுற்றியபின்
இவரோ, படுகிழமாய்ப் போன பின்னும்
பம்பரமாய்ச் சுற்றி வந்தார்;
எரிமலையாய்ச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடி ஒலியாய்
இன உணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக்கட்டும் கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்ஸ் நகர் சாக்ரடீசாய்
ஏன் என்று கேட்பதிலே வைரநெஞ்ச வால்டேராய்
எம்தந்தைப் பெரியாரும் வாழ்ந்திட்டார்.

இவை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியார் அவர்களைப் பற்றி எழுதிய கவிதை வரிகள்.

சமூக முன்னேற்றப் பாதை

திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முறையாக, 1967ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, 'இந்த ஆட்சியே தந்தைப் பெரியாருக்குக் காணிக்கை' என்றார் பேரறிஞர் அண்ணா. உடனடியாக பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் முதலானோர், திருச்சி சென்று பெரியாரைத்தான் முதன்முதலில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். இப்போது ஆறாவது முறை ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசும், இப்போது தந்தைப் பெரியார் காட்டிய சமூக முன்னேற்றப் பாதையில்தான் பயணிக்கிறது.

"ஈ.வெ.இராமசாமி என்கிற நான், திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல, மானமும், அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு, அதே பணியாய் இருப்பவன். இதைச் செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ, இல்லையோ, இந்த நாட்டில் அந்தப் பணியைச் செய்ய யாரும் வராததினால், நான் அதை மேற்போட்டுக் கொண்டு, தொண்டாற்றி வருகிறேன்" என்று அறிவித்து, 95 வயது வரை, இந்த நாட்டுக்காகவும், இந்த நாட்டு மக்களுக்காகச் சமூகநீதியை நிலைநிறுத்திடவும் அவர் நடத்திய சுயமரியாதைப் போராட்டங்கள் பற்பல. அவற்றில் மிக முக்கியமான போராட்டம்தான் வைக்கம் போராட்டம்.

வைக்கம் போராட்டம்

1924-1925ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த வைக்கம் போராட்டம் என்பது, இந்தியாவின் சமூகச் சீர்திருத்த வரலாற்றில் முக்கிய இடம் பெற்றது; இந்தியாவின் கோயில் நுழைவுப் போராட்டங்கள் அனைத்திற்கும் முன்னோடியாகத் திகழ்ந்தது; ஒடுக்கப்பட்டவர்கள் சமத்துவ உரிமையைப் பெறுவதில் முதற்படியாக அமைந்தது என்று சொன்னால், அது மிகையல்ல.

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்தில் உள்ள மகாதேவர் கோயிலைச் சுற்றிலும் அமைந்துள்ள தெருக்களில், ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்கு இருந்த தடைகளை நீக்கக் கோரி நடந்ததுதான் வைக்கம் போராட்டம். 1924ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் நாள், கேரளத் தலைவர் டி.கே.மாதவன் அவர்களால் தொடங்கப்பட்டது அந்தப் போராட்டம். அந்தப் போராட்டம் தொடங்கிய சில நாட்களிலேயே, அதே பகுதியைச் சேர்ந்த முக்கியமான காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள். தலைவர்கள் இன்றிப் போராட்டம் தவித்தது. இந்தச் சூழலில், கேரளத் தலைவர்களின் அழைப்பின் பேரில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக அப்போது இருந்த தந்தைப் பெரியார் அவர்கள், வைக்கம் சென்று, அந்தப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்றார். பல நாட்கள் அங்கு தங்கியிருந்து போராட்டத்தை ஒருங்கிணைத்தார். வெகுமக்களிடம் அந்தப் போராட்டம் குறித்து பரப்புரை செய்து, போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். போராட்டக் காலத்தில் இரண்டு முறை பெரியார் கைது செய்யப்பட்டார். முதல்முறை, 'அருவிக் குட்டி' என்ற ஊரின் காவல் நிலையச் சிறையில், ஒரு மாத காலம் சிறை தண்டனை அனுபவித்தார். இரண்டாம் முறை வழங்கப்பட்ட நான்கு மாதக் கடுங்காவல் தண்டனையை, திருவனந்தபுரம் சிறையில் கழித்தார். மற்றவர்கள் அனைவரும் அரசியல் கைதிகள் போல நடத்தப்பட்டார்கள். ஆனால் தந்தைப் பெரியார் அவர்களின் கையிலும், காலிலும் விலங்கு போடப்பட்டு, கழுத்தில் மரப்பட்டை அணிவிக்கப்பட்டு வைக்கப்பட்டு இருந்தார். சாதாரண கைதியைப் போலவே தந்தைப் பெரியார் நடத்தப்பட்டார்.

வைக்கம் வீரர்

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதும், உடனே திரும்பாமல், வைக்கம் சென்று மீண்டும் போராடினார் தந்தைப் பெரியார். வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டு 74 நாட்கள் சிறையில் இருந்தார்; 67 நாட்கள் அங்கேயே தங்கிப் போராடினார்; மக்களைத் திரட்டினார். ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேல் நடைபெற்ற வைக்கம் போராட்டம், 1925 நவம்பர் 23ஆம் நாள் முடிவுக்கு வந்தது. 1925 நவம்பர் 29ஆம் நாள் பெரியார் தலைமையில் வைக்கத்தில் வெற்றி விழாவும் நடைபெற்றது. 'வைக்கம் வீரர்' என்று பெரியாரைப் பாராட்டினார் 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க. அவர்கள். 'திருவனந்தபுரம் சிறையில் இருக்கும் தீரரைத் தமிழ்நாடு பாராட்டுகிறது' என்று சுதேசமித்திரன் இதழில் எழுதினார் மூதறிஞர் ராஜாஜி அவர்கள்.

போராட்டக்காரர்களுக்கும், மன்னருக்குமான பேச்சுவார்த்தையை நடத்திய அண்ணல் காந்தியடிகள் அவர்கள், தந்தைப் பெரியாரையே

உடன் அழைத்துச் சென்றார். கோயில் தெருவில் அனைவரும் நடக்கலாம் என்ற உரிமையைப் பெற்றுத்தந்த வெற்றி விழாவுக்கு, தந்தைப் பெரியாரும்,நாகம்மையாரும் அழைக்கப்பட்டார்கள். 1929ஆம் ஆண்டு மகர் போராட்டத்தைத் தொடங்கிய அண்ணல் அம்பேத்கர் அவர்கள், தனக்கு ஊக்கமளித்த போராட்டமாக வைக்கம் போராட்டத்தையே குறிப்பிடுகிறார். இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க வைக்கம் போராட்டம் நடந்து 100 ஆண்டுகள் ஆகின்றன. இன்று வரையில் வைக்கம் போராட்டம் என்பது சமூகநீதி வரலாற்றில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா

எளிய மக்களுக்காக எல்லைகளைக் கடந்து போராடி, வரலாற்றில் இத்தகைய புரட்சிகளை நிகழ்த்தி வெற்றி கண்ட தந்தைப் பெரியார் அவர்களின் நினைவைப் போற்றவும், சமூகநீதிக் கருத்துக்களைத் தொடர்ந்து வலியுறுத்தவும், "வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா" நிகழ்ச்சிகளை, தமிழ்நாடு அரசு சிறப்பாக நடத்தத் திட்டமிட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் உண்மையிலேயே நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

வைக்கம் போராட்டம் தொடங்கிய மார்ச் 30ஆம் நாளில், வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாவைத் தமிழ்நாடு அரசு தொடங்கவுள்ளது. வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நிகழ்ச்சிகள், 2023ஆம் ஆண்டு, மார்ச் 30ஆம் நாள் தொடங்கி, ஓராண்டு முழுவதும் நடத்தப்படும். போராட்டத்தின் வரலாற்றையும், நோக்கத்தையும், வெற்றியையும் பொதுமக்களும் மாணவர்களும் தெரிந்துகொள்ளும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகள் செய்யப்படும்.

வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா, பின்வரும் நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாக இருக்கும் என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

- வரும் ஏப்ரல் 1, 2023 அன்று, கேரள அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா" நிகழ்ச்சியில், மாண்புமிகு கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்களோடு நானும் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்கிறேன். வைக்கம் போராட்டம் நடைபெற்ற இடத்தில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட நினைவுத் தூணுக்கு மரியாதை செலுத்துகிறோம்.
- தமிழ்நாட்டில் மிக முக்கியமான ஆய்வாளர்களில் ஒருவரான பழ.அதியமான் அவர்கள் எழுதிய "வைக்கம் போராட்டம்" என்ற தமிழ் நூலின் மலையாள மொழிபெயர்ப்பு வெளியிடப்படுகிறது.
- தமிழ்நாடு பாடநூல், கல்வியியல் பணிகள் கழகம் மற்றும் கேரளாவில் உள்ள டி.சி.பதிப்பகம் ஆகியவற்றின் கூட்டு வெளியிடாக இது வெளியிடப்படவுள்ளது. இந்த நூலின் தெலுங்கு, கன்னடம், ஆங்கிலப் பதிப்புகளும் விரைவில் வெளியிடப்படும்.
- இந்த ஆண்டு நவம்பர் 29 அன்று, தமிழ்நாடு, கேரளா ஆகிய இருமாநில முதலமைச்சர்கள் மற்றும் பல்வேறு ஆளுமைகள் பங்கேற்கக்கூடிய வகையில், வெகு சிறப்பான நிகழ்ச்சி ஒன்று தமிழ்நாடு அரசால் நடத்தப்படும்.
- எல்லை கடந்து சென்று வைக்கத்தில் போராடிய பெரியார் அவர்களை நினைவுகூரும் வகையில், பிற மாநிலங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நலனுக்காகப் பாடுபட்டு, குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் ஆளுமைகள் அல்லது நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் "வைக்கம் விருது" சமூகநீதி நாளான செப்டம்பர் 17ஆம் நாளன்று தமிழ்நாடு அரசால் வழங்கப்படும்.
- கேரள மாநிலம் வைக்கத்தில் அமைந்துள்ள பெரியார் நினைவிடத்தை நவீனமுறையில் மறுசீரமைக்கவும், பெரியார் தொடர்பான நினைவுப் பொருட்கள் கூடுதலாக இடம் பெறுவதற்கும் ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
- தந்தைப் பெரியார் கைது செய்யப்பட்டு முதன்முதலாகச் சிறை வைக்கப்பட்டிருந்த 'அருவிக்குட்டி' கிராமத்தில் பெரியார் நினைவிடம் ஒன்று புதிதாக உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நினைவாகச் சிறப்பு நினைவு அஞ்சல் தலை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.
- தமிழ்நாட்டின் முக்கிய பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் வைக்கம் போராட்டம் தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்படும். பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சுப்

போட்டி, கட்டுரைப் போட்டி, வினாடி-வினா உள்ளிட்ட போட்டிகளை நடத்திப் பரிசுகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ வைக்கம் போராட்ட நூற்றாண்டு குறித்த விழிப்புணர்வை மாணவர்களுக்குக் கொண்டு சேர்க்கக்கூடிய வகையில், 64 பக்க நூல் ஒன்று கொண்டுவரப்படும். அது தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மூலமாக வெளியிடப்பட்டு, விற்பனை செய்யப்படும். இந்த நூல், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஒலிப்புத்தகமாகவும் வெளியிடப்படும்.

❖ வைக்கம் போராட்ட நூற்றாண்டுக் குறித்த சிறப்புக் கட்டுரைகள் பலவற்றைப் பல்வேறு அறிஞர்களிடமிருந்து பெற்றுத் தொகுத்து வைக்கம் போராட்ட நூற்றாண்டு மலர் ஒன்று 'தமிழரசு' பத்திரிகை மூலம் கொண்டு வரப்படும்.

இவை அனைத்தும் வரும் ஓராண்டுக் காலத்திற்குள் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

ஒரு சீர்திருத்த இயக்கம், அரசியல் பரிணாமம் பெற்று, ஆட்சியைப் பிடித்து, பேசிய கொள்கைகளை நிறைவேற்றும் சட்டங்களை இயற்றும் தகுதியை அடைந்தது, இந்திய அரசியல் வரலாற்றில் திராவிட இயக்கத்துக்குக் கிடைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய பெருமை. அத்தகைய பெருமைமிகு திராவிட மாடல் ஆட்சி நடந்துகொண்டு இருக்கும்போது, வைக்கம் நூற்றாண்டு விழா வருவது பொருத்தமான ஒன்று. சாதாரண இராமசாமியாக இருந்தவர் தந்தைப் பெரியாராக வளரக் காரணமான போராட்டக் களம் அது. அத்தகைய சமூகச் சீர்திருத்த நோக்கம் கொண்டவர்களாக இன்றைய இளைய சமுதாயம் திகழ, இதுபோன்ற கடந்தகால வரலாறுகளை நாம் நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

பெரியார் என்பவர், தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் மட்டும் சொந்தமானவர் அல்ல; அவர் மொழி கடந்தவர்; நாடு கடந்தவர் என்பதை அவரது கருத்துக்களின், செயல்களின் மூலம் நிரூபித்துக் காட்டியவர். சுயமரியாதை, பகுத்தறிவு, சமதர்மம், சமூகநீதி, இன உரிமை ஆகியவை உலகளாவிய கொள்கைகள். நேற்றைய கிளர்ச்சிக்கும், இன்றைய முயற்சிக்கும், நாளைய வளர்ச்சிக்கும் அடிப்படையானவை தந்தைப் பெரியாரின் கருத்தியல்கள். அத்தகைய சுயமரியாதைச் சமதர்மப் பாதையில் நமது திராவிட மாடல் அரசு தொடர்ந்து செயல்படும் என்பதைத் தெரிவித்து, அமைகிறேன்.

படமும் செய்தியும்

பின்னணிப் பாடகர் டி.எம்.செளந்தரராஜன் அவர்களின் பெயரில் புதிய சாலை திறப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 24.03.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், பின்னணிப் பாடகர் டி.எம்.செளந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டுச் சென்னையில் அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள மந்தைவெளி மேற்கு வட்டச் சாலைக்கு, "டி.எம்.செளந்தரராஜன் சாலை" எனப் புதிய பெயர் சூட்டப்பட்ட சாலையின் பெயர் பலகையைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

இந்தியாவுக்கே வழிகாட்டிய வைக்கம் சத்தியாகிரகப் போராட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்தில் நடைபெற்ற வைக்கம் சத்தியாகிரகப் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை - 01.04.2023

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்துள்ள மாண்புமிகு கேரள முதலமைச்சரும் எனது அன்புக்குரிய தோழருமான திரு. பினராயி விஜயன் அவர்களே!

என் அன்புக்குரிய, திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மலையாள மொழி பேசும் கேரள சகோதரி, சகோதரர்களே!

உங்கள் அனைவருக்கும் வணக்கத்தையும், தமிழ்நாடு மக்கள் சார்பில், இந்த விழாவை ஏற்பாடு செய்ததற்காக நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த மார்ச் 6ஆம் நாளன்று நாகர்கோயிலில் நடந்த தோள்சீலைப் போராட்டத்தின் 200ஆவது ஆண்டு விழாவில் நானும் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களும் கலந்து கொண்டோம்.

வைக்கம் போராட்டம்

அந்தக் கூட்டத்தில் பேசிய நான், "வைக்கம் போராட்டம் நடந்து 100 ஆண்டுகள் ஆகப் போகிறது. அதனைத் தமிழ்நாடு அரசும், கேரள அரசும் இணைந்து வைக்கம் நூற்றாண்டு வெற்றிவிழாவைக் கொண்டாட வேண்டும்" என்று நான் வேண்டுகோள் விடுத்தேன்.

எனக்குப் பிறகு பேசிய மாண்புமிகு கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்கள், அதனை உறுதிப்படுத்திப் பேசினார்கள்.

நாங்கள் நடத்துகிறோம் - நீங்கள் வருகை தாருங்கள் என்று எனக்கு அந்த மேடையில் வைத்தே அழைப்பு விடுத்தார்கள். உடலால் நாம் வேறு வேறு என்றாலும் உணர்வால் ஒருவர் என்பதை அந்த மேடையிலேயே பினராயி விஜயன் அவர்கள் நிரூபித்தார்கள்.

வைக்கம் நூற்றாண்டு விழா

சில நாட்களில் கேரள அமைச்சர் திரு. சாஜி செரியன் அவர்களைச் சென்னைக்கு அனுப்பி வைத்து என்னைச் சந்திக்க வைத்தார்கள்.

வைக்கம் நூற்றாண்டு விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு சகோதரர் பினராயி விஜயன் அவர்கள் அழைத்து நான் இதுவரை வராமல் இருந்தது இல்லை.

தமிழ்நாட்டில் இப்போது சட்டமன்றக் கூட்டத்தொடர் நடந்துகொண்டு இருக்கிறது. என்றாலும் வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவுக்கு நிச்சயம் சென்றாக வேண்டும் என்று நான் இங்கே வந்துள்ளேன்!

கேரளாவே இங்கு திரண்டு வந்திருக்கிறது என்று சொல்லத்தக்க அளவில் மிகப் பிரம்மாண்டமாக நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வைக்கம் - என்பது இப்போது கேரள மாநிலத்தில் இருந்தாலும், தமிழ்நாட்டுக்கு எழுச்சியை - உணர்ச்சியை ஏற்படுத்திய ஊர்!

சமூகநீதி வரலாற்றின் மகத்தான போராட்டம்

1924ஆம் ஆண்டு வைக்கத்தில் நடந்த போராட்டம் என்பது, கேரளத்தின் சமூகநீதி வரலாற்றில் மட்டுமல்ல - தமிழ்நாட்டு சமூகநீதி வரலாற்றிலும் மகத்தானப் போராட்டம்! இன்னும் சொன்னால் இந்தியாவுக்கே வழிகாட்டிய போராட்டம்!

"வைக்கம் போராட்டம்தான் மகர் போராட்டத்தை நடத்துவதற்கு எனக்குத் தூண்டுதலாக அமைந்திருந்தது" என்று அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பிற்காலத்தில் எழுதினார்கள். வைக்கம் போராட்டத்தின் தூண்டுதலால்தான் தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களில் அண்ணல் காந்தியடிகள் அவர்கள் அதிகம் கவனம் செலுத்தினார்கள்.

தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஈரோட்டிலும் சுசீந்திரத்திலும், திருவண்ணாமலையிலும், மதுரையிலும், திருச்சியிலும், மயிலாடுதுறையிலும் கோவில் நுழைவுப் போராட்டங்களை நடத்துவதற்கான தூண்டுகோலாக இருந்தது வைக்கம் போராட்டம்தான். எனவே, சுயமரியாதை - சமூகநீதிப் போராட்டத்தின் தொடக்கமான வைக்கம் மண்ணில் - நிற்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன். வெற்றிப் பெருமிதத்துடன் நான் இங்கே கம்பீரமாக நின்று கொண்டிருக்கிறேன்.

கேரளாவின் புரட்சி இயக்கம்

சூத்திரர்கள் என்றும், பஞ்சமர் என்றும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களைத் தலைநிமிர வைக்க கேரளத்திலும் தமிழ்நாட்டிலும் சீர்திருத்த இயக்கமானது பல்லாண்டுக் காலமாகச் செயல்பட்டு வருகிறது. இதனைச் சீர்திருத்த இயக்கமாக மட்டுமே சுருக்கிச் சொல்லி விட முடியாது. இவைதான் புரட்சி இயக்கங்கள்!

கேரளாவில் புரட்சி இயக்கம் என்பது, நாராயணகுரு, டாக்டர் பல்ப்பு பத்மநாபன், குமாரன் ஆசான், அய்யன்காளி, டி.கே.மாதவன் ஆகிய தலைவர்களால் வரிசையாக நடத்தப்பட்டது!

தமிழ்நாட்டுப் புரட்சி இயக்கமானது –

இராமலிங்க வள்ளலார், அய்யா வைகுண்டர், அத்திப்பாக்கம் வெங்கடாசலனார், பண்டித அயோத்திதாசர், டி.எம்.நாயர், தந்தைப் பெரியார் ஆகிய தலைவர்களால் வரிசையாக நடத்தப்பட்டது!

இதில் கேரளாவைச் சேர்ந்த டி.கே.மாதவன் அவர்களும் - தமிழ்நாட்டைச் சேர்ந்த தந்தைப் பெரியாரும் இணைந்து நடத்திய வெற்றிப் போராட்டம்தான் வைக்கம் போராட்டம்!

ஒடுக்கப்பட்ட சமூகத்து மக்கள் வைக்கம் கோயில் தெருவில் நடந்து செல்லத் தடை விதிக்கப்பட்டதை உடைக்க தீண்டாமை ஒழிப்புக் குழு அன்றைய காங்கிரஸ் கட்சித் தலைவர்களால் அமைக்கப்பட்டது.

தெருவுக்குள் நுழையக்கூடிய சத்தியாகிரகம்

1924ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் நாள் அன்று, தடையை மீறி அந்த தெருவுக்குள் நுழையக்கூடிய சத்தியாகிரகம் தொடங்கப்பட்டது. தொடர்ச்சியாக காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள். முக்கியமான 19 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், இந்தப் போராட்டமே இனி நடக்காது என்ற நிலைமை உருவானபோதுதான் - அந்த நேரத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த தந்தைப் பெரியாருக்குக் கேரளத் தலைவர்கள் கடிதம் எழுதி வரவழைக்கிறார்கள். 'நீங்கள் வந்து இந்த போராட்டத்திற்கு உயிரூட்ட வேண்டும்' என்று அந்தக் கடிதத்தில் இருந்தது. உடனடியாகப் பெரியார் அவர்கள் இங்கு வந்துவிட்டார்கள்.

எந்த மன்னருக்கு எதிராக இந்தப் போராட்டம் நடத்துவதற்காகத் தந்தைப் பெரியார் அவர்கள் இங்கு வந்தார்களோ, அந்த மன்னர் ஆட்சியே அவருக்குப் பெரிய வரவேற்பைக் கொடுத்தது. ஏனென்றால் அந்த மன்னர் குடும்பத்துக்குத் தந்தைப் பெரியாரை நன்கு தெரியும். ஈரோடு வந்தால் மன்னர் குடும்பத்தினர் பெரியாரின் வீட்டில்தான் தங்குவார்கள். அந்தளவுக்கு நட்பாக இருந்துள்ளார்கள்.

ஆனால், அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் மன்னருக்கு எதிராகவே போராடினார் தந்தைப் பெரியார் அவர்கள். கேரளா முழுவதும் பரப்புரை செய்தார். மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். அதனாலேயே

தந்தைப் பெரியார் அவர்களையும் கோவை அய்யாமுத்து அவர்களையும் கூட்டத்தில் பேசுவதற்குத் தடை விதித்தார்கள். தடையை மீறிப் பேசியதற்காகக் கைது செய்து சிறையில் அடைத்தார்கள்.

பந்தனத்தில் நின்னு

விடுதலை செய்யப்பட்ட பிறகும், நேராக ஊருக்குத் திரும்பாமல் வைக்கம் சென்று மீண்டும் போராடினார் தந்தைப் பெரியார். மீண்டும் கைது செய்து சிறையில் அடைத்தார்கள். தந்தைப் பெரியார் அவர்களுக்கு என்ன சிறப்பு என்றால், இந்தப் போராட்டத்தில் கைதான மற்ற தலைவர்கள் அனைவரும் அரசியல் கைதிகளாக நடத்தப்பட்டார்கள். ஆனால் தந்தைப் பெரியாரை மிக மோசமாக நடத்தினார்கள். கையிலும் காலிலும் விலங்கு போட்டு, கழுத்தில் மரப்பலகையை மாட்டி, அடைத்து வைத்திருந்தார்கள். இந்தப் போராட்டத்தில் கைதாகி சிறையில் இருந்த தலைவர்களில் ஒருவரான கே.பி.கேசவமேனன் அவர்கள் 'பந்தனத்தில் நின்னு' என்ற தலைப்பில் மலையாளத்தில் ஒரு புத்தகம் எழுதி இருக்கிறார்.

அதன் சில வரிகளை மட்டும் நான் படிக்கிறேன்...

"தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரும், ஈரோடு முனிசிபல் கவுன்சிலின் சேர்மனாக இருந்தவரும், ஒரு பெரும் பணக்காரரும், உத்தம தேசாபிமானியுமான, ஈ.வெ.ராமசாமி அவர்களுக்குக் காலில் சங்கிலி மாட்டப்பட்டு இருந்தது. கைதிகளது தொப்பி மாட்டப்பட்டு இருந்தது. முழங்கால் வரையில் வேட்டி அணிந்திருந்தார். கழுத்தில் மரக்கட்டையை மாட்டிக் கொள்ளைக்காரர்கள் மற்றும் கொலைகாரர்களுடன் வைக்கப்பட்டுள்ளார். கேரளாவின் தீண்டாமைச் சாதிக்காரர்களது சுதந்திரத்திற்காகத் தமிழ்நாட்டின் மேல்குலத்தைச் சேர்ந்த இந்து ஒருவர் இப்படிப்பட்ட தியாகத்தைச் செய்தது எங்களுக்கெல்லாம் புத்துயிர் தந்தது" என்று கே.பி.கேசவமேனன் எழுதி இருக்கிறார்கள்.

தந்தைப் பெரியார் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருந்து ஏராளமான தியாகிகள் இங்கு வந்து போராடினார்கள். பெரியாரின் மனைவி நாகம்மையார் அவர்களும், அவருடைய சகோதரி கண்ணம்மாள் அவர்களும் இங்கேயே வந்து தங்கிப் போராடினார்கள். பெரியார் அவர்கள் 74 நாட்கள் இங்கே சிறையில் இருந்தார்கள். 67 நாட்கள் கேரளாவில் தங்கிப் போராடினார்கள். மொத்தம் 141 நாட்கள் வைக்கம் போராட்டத்திற்காகத் தன்னை ஒப்படைத்துக் கொண்டார் தந்தைப் பெரியார். காங்கிரஸ் தலைவர் என்கிற அடிப்படையில் அண்ணல் காந்தியடிகளை ராணி பேச்சுவார்த்தைக்கு அழைத்தார்.

பெரியாரிடத்தில் காந்தியடிகள் பேச்சுவார்த்தை

இந்தப் போராட்டத்திற்குத் தலைமை வகித்தவர் என்ற அடிப்படையில் பெரியாருடன் பேசி முடிவெடுத்துவிட்டுத்தான் காந்தி அவர்களும் ராணியுடன் பேச்சுவார்த்தை நடத்தச் சென்றார்.

'கோயிலுக்குள் நுழைவோம் - என்று ஈ.வெ.ராமசாமி சொல்வதை நிறுத்தச் சொல்லுங்கள். தெருவைத் திறந்து விடுகிறோம்' என்று ராணி சொல்ல, அதனைப் பெரியாரிடம் வந்து காந்தியடிகள் சொல்ல, 'நமது இறுதி இலக்குக் கோயில் நுழைவுதான் என்றாலும், இப்போதைக்கு முதல் கட்ட வெற்றியைப் பெறுவோம்' என்று பெரியார் அவர்கள் சொன்னார்கள்.

அதனடிப்படையில் வைக்கம் கோயில் சாலைகள் அனைவருக்கும் திறந்து விடப்பட்டது. இதன் வெற்றி விழா வைக்கத்தில் நடந்தபோதும் மறக்காமல் பெரியாரை அழைத்துப் பாராட்டினார்கள் கேரளத்துத் தலைவர்கள்.

அந்த வகையில் 100 ஆண்டுகள் கழித்தும் தமிழ்நாட்டை மறக்காமல் எங்களை அழைத்துள்ளார் கேரள மாநிலத்தினுடைய முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்கள். வைக்கம் பொன்விழாவானது 1975ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் தலைமையில் நடந்தது. திராவிடர் கழகத்தினுடைய தலைவர் அன்னை மணியம்மையார் அவர்களும் - திராவிடர் கழகத்தினுடைய பொதுச்செயலாளர் அய்யா ஆசிரியர் கி.வீரமணி அவர்களும் வந்து

அந்த நிகழ்ச்சியிலே பங்கேற்றார்கள். 1985ஆம் ஆண்டு பெரியாருக்கு வைக்கத்தில் நினைவுச் சின்னம் அமைக்க அடிக்கல் நாட்டு விழாவும் நடந்தது. 03.11.1985 அன்று நடந்த விழாவில், அன்றைக்குத் தமிழ்நாட்டினுடைய நிதி அமைச்சராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் - கேரள வருவாய்த் துறை அமைச்சர் பி.ஜே.ஜோசப் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

தந்தைப் பெரியாரின் புரட்சி மொழிகள் அந்த நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு அப்போது வெளியிடப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக இந்த விழாவை ஏற்பாடு செய்திருப்பது மிகமிக பொருத்தமானது. தமிழ்நாடு - கேரளத் தலைவர்கள் சேர்ந்து போராடிய போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியை இன்றைக்கு நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

தியாகிகளின் உணர்வு

தந்தைப் பெரியார், டி.கே.மாதவன், கே.பி.கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப், கேளப்பன், குரூர் நீலகண்டன் நம்பூதிரி, மன்னத்து பத்மநாபன், கோவை அய்யாமுத்து, எம்பெருமாள் நாயுடு, காந்திராமன், தாணுமாலையப் பெருமாள் போன்ற தியாகிகளை இந்த நாட்டு மக்களுக்கு மீண்டும் நாம் அறிமுகம் செய்தாக வேண்டும். அவர்களது உணர்வை நம் மாநிலத்து மக்கள் பெற்றாக வேண்டும்.

நேற்று முன்தினம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் வைக்கம் நூற்றாண்டு விழாவைச் சிறப்பிக்கும் வகையில் விதி எண் 110இன் கீழ் அறிக்கை ஒன்றை நான் அளித்தேன்.

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நினைவாகப் பல்வேறு முன்னெடுப்புகளை தமிழ்நாடு அரசின் சார்பில் செய்ய இருப்பதாக நான் சொல்லி இருக்கிறேன்.

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் முதல் படிகளில் ஒன்றாக, பழ.அதியமான் அவர்கள் எழுதிய 'வைக்கம் போராட்டம்' நூலின் மலையாள மொழிபெயர்ப்பு இன்று வெளியிடப்படுகிறது.

இந்த முன்னெடுப்பில் தமிழ்நாடு அரசுடன் இணைந்து பணியாற்றியுள்ள கேரளத்தின் முன்னணி பதிப்பாளர்களான D.C.Books நிறுவனத்துக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியார் நினைவகம் சீரமைப்பு

பெரியார் நினைவகம் சீரமைக்க ரூ.8.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட இருக்கிறது. பெரியார் சிறை வைக்கப்பட்ட அருவிக்குத்துச் சிறை வளாகத்தில் புதிய நினைவகம் அமைக்கவும் தமிழ்நாடு அரசு நினைக்கிறது. உரிய முறையான அனுமதிக் கடிதத்தைக் கேரள அரசுக்கு நாங்கள் விரைவில் அனுப்பி வைப்போம்.

தமிழ்நாட்டில் பிறந்துவிட்டதால் தந்தை பெரியார் அவர்கள் தமிழர்களுக்கு மட்டுமான தலைவர் அல்ல. இந்தியாவுக்கு மட்டுமான தலைவர் அல்ல. உலகம் முழுமைக்குமான தலைவர்தான் தந்தைப் பெரியார் அவர்கள். அவர் முன்மொழிந்த கொள்கைகள் அனைத்தும் அனைத்து நாட்டுக்கும் - அனைத்து மக்களுக்கும் பொதுவான சிந்தனைகள்!

எனக்கு எந்தப் பற்றும் இல்லை, மனிதப் பற்று மட்டுமே உண்டு என்று சொன்னவர் தந்தைப் பெரியார் அவர்கள்.

பெரியாரின் அடிப்படைக் கருத்தியல்கள்

1. சுயமரியாதை - self-respect, 2. பகுத்தறிவு - rationality, 3. சமதர்மம் - socialism, 4. சமத்துவம் - equality, 5. மானுடப்பற்று - Humanism, 6. இரத்த பேதமில்லை - Non-discrimination based on blood, 7. பால் பேதமில்லை - Non-discrimination based on Gender, 8. சுய முன்னேற்றம் - self development, 9. பெண்கள் முன்னேற்றம் - women empowerment, 10. சமூகநீதி - social justice, 11. மதசார்பற்ற அரசியல் - secular politics, 12. அறிவியல் மனப்பான்மை - scientific temper.

இவைதான் பெரியாரியத்தின் அடிப்படை. இவை உலகம் முழுமைக்குமான கருத்தியல்கள்தான். இந்தக் கருத்தியல்களை வென்றெடுக்க நாம் அனைவரும் உழைத்தாக வேண்டும்.

எத்தகைய சனாதனக் காலத்தைப் பல்வேறு போராட்டங்களின் மூலமாக நாம் கடந்து வந்துள்ளோம் என்பதை இன்றைய இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லும் பணியை இரு மாநில அரசுகளும் செய்தாக வேண்டும். மீண்டும் சனாதன, வர்ணாசிரம, சாதியவாத, மதவாத சக்திகள் கோலோச்ச நினைக்கும் காலத்தில் நமக்கு இந்தக் கடமை அதிகம் இருக்கிறது. இதற்குப் பெரியார் என்ற பெருவிளக்கு நமக்குப் பயன்படும். வைக்கம் போராட்டம் கலங்கரை விளக்காக அமையும்.

100 ஆண்டுகளுக்கு முன்னால் எத்தகைய ஒற்றுமையுடன் போராடி வென்றோமோ அதேபோன்ற ஒற்றுமையுடன் செயல்படுவோம்.

மகளிர் காவலர்கள் பொன்விழா ஆண்டு

அவள் திட்டம் தொடக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
'அவள்' திட்டத்தைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை - 17.03.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு காவல்துறையில் பெண் காவலர்கள் மற்றும் அதிகாரிகள் 1973ஆம் ஆண்டு முதல் பணியாற்றத் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி 17.03.2023 அன்று சென்னை, நேரு உள்விளையாட்டரங்கில் "மகளிர் காவலர்கள் பொன்விழா ஆண்டு" நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து, பெண் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் கொண்டு நடத்தப்பட்ட கவாத்து, திறன் பயிற்சி, சாகச நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டார்.

"மகளிர் காவலர்கள் பொன்விழா ஆண்டு" நிகழ்ச்சியில், சென்னைப் பெருநகரக் காவலில் பாதுகாப்பு நகர திட்டத்தின்கீழ்த் தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதல்படிப் பெண்கள் நலன் மற்றும் பாதுகாப்புக்காக "அவள்" (AVAL - Avoid Violence through Awareness and Learning) என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்து, அதற்கான இலச்சினையை அறிமுகப்படுத்தி, அத்திட்டத்திற்கான காணொலிக் காட்சி மற்றும் விழிப்புணர்வுக் காட்சியையும் வெளியிட்டார். மேலும், தற்காப்புக் கலை வல்லுநர்களால் பயிற்சி அளிக்கப்பட்ட 400 கல்லூரி மாணவிகள் மற்றும் பணிபுரியும் பெண்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் தற்காப்பு கலைப் பயிற்சியைச் செய்து காட்டினர். தொடர்ந்து, மகளிர் காவலர்கள் பொன்விழா ஆண்டு சிறப்பு தபால் உறையையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

"அவள்" திட்டத்தின் மூலம் பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தற்காப்புப் பயிற்சிகள் அளிக்கவும், பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான பிரச்சினைகளில் காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களின் அணுகுமுறை மற்றும் திறனை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ரூ.8.50 கோடி மதிப்பீட்டில் நான்கு அம்சப் பயிற்சி மற்றும் உள்கட்டமைப்புகள் ஏற்படுத்தி, "அவள்" திட்டம் சென்னைப் பெருநகரக் காவலில் செயல்படுத்தப்படவுள்ளது.

நான்கு அம்ச "அவள்" சிறப்புத் திட்டங்கள் குறித்த விவரங்கள்

I. சென்னைப் பெருநகரில் உள்ள காவல் சிறார் மன்றங்களை மேம்படுத்துதல்

சென்னைப் பெருநகரத்தில் உள்ள 112 பெண்கள் & ஆண்கள் சிறார் மன்றங்களுக்கு அவள் திட்டத்தின்கீழ் இணையதள வசதியுடன் கூடிய LED ஸ்மார்ட் டிவி வழங்கப்படும். இதன்மூலம் இணையதளம் வழியாக, தற்போதைய உலக நடப்புகள், கல்வி, விளையாட்டு, தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு விவரங்கள் காவல் சிறார் மன்ற சிறுவர், சிறுமியர் எளிதில் அறியும் வண்ணம் எடுத்துரைக்கப்படும். இதன் மூலம் 5,452 சிறுமியர் மற்றும் சிறுவர்கள் பயனடைவார்கள்.

II. காவல்துறையினருக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி

பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்புடைய பிரச்சினைகளில் புலன் விசாரணைத் திறனை மேம்படுத்திட ஆண்/ பெண் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்குப் புலன்விசாரணையில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளும், பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆலோசனை வழங்கும் வழிமுறைகள் மற்றும் அனைத்து நுட்பமான வழக்குகளிலும் தடயங்களைப் பகுப்பாய்வு செய்தல் குறித்துப் பயிற்சிகள் அளிக்கப்படும். இதன்மூலம், சென்னைப் பெருநகரக் காவலில் பணிபுரியும் 23,791 காவலர்கள் பயனடைவர்.

III. சமூக ஊடகங்கள் மூலம் மக்கள் தொடர்பு

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு, அவர்களின் உரிமைகள், பாதுகாப்பு, சமுதாயத்தில் பெண்களின் பங்கு, தனித்திறன்கள், வேலைவாய்ப்பு, சட்ட நுணுக்கங்கள் தொடர்பான தகவல்கள் போன்றவை குறித்து ஊடகங்கள், சமூக வலைதளங்கள் மற்றும் விளம்பரங்கள் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்த வழிவகை செய்யப்படும். இதன்மூலம், பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவிகள், பணிபுரியும் பெண்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பயனடைவர்.

IV. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தற்காப்புப் பயிற்சிகள்

பெண்கள், பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவிகள், பணிபுரியும் பெண்கள் என மொத்தம் 50,000 பெண்களுக்குச் சிறப்புப் பயிற்சியாளர்களைக் கொண்டு தற்காப்புப் பயிற்சி இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், காவல் சிறுமியர், சிறுவர் மன்றங்களுக்கு உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்தும் விதமாக இணையதள வசதி அளிக்கக்கூடிய வகையிலான தொலைக்காட்சி பெட்டிகளை இரண்டு காவல் சிறுமியர், சிறுவர் மன்றங்களிடம் வழங்கினார்.

பின்னர், "தமிழகக் காவல் துறையில் பெண்கள்" என்ற தலைப்பில் காணொலிக் காட்சி ஒளிபரப்பப்பட்டது. தொடர்ந்து, அதிரடிப்படை பெண் காவலர்களின் பயிற்சித் திறன், பெண்களின் தற்காப்புக்கலைச் செயல்முறை விளக்கம், ஆயுதப்படை பெண்காவலர்கள் சிலம்பம் சுற்றுதல், நீளகர்ணமடித்தல் போன்ற தற்காப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மகளிர் காவலர்கள் பொன்விழா ஆண்டையொட்டிச் சுமார் 100 பெண் காவலர்கள் கலந்துகொள்ளும் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையிலான 700 கிலோ மீட்டர் மிதிவண்டிப் பயணத்தைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

என்னுடைய மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டேன். பெண்களுக்கு நீங்கள் சொல்லும் அறிவுரை என்ன என்ற கேள்விக்கு நான் சொன்னேன், பெண்களுக்கு இல்லை, ஆண்களுக்கு ஒரு அறிவுரை சொல்ல விரும்புகிறேன் என்று சொல்லி ஆண்கள், பெண்கள் மீதான தன் பார்வையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றேன். அதனை மெய்ப்பிக்கக்கூடிய வகையில் இங்கு நான் வந்ததிலிருந்து பெண்கள் செய்த வீரச் செயல்களைப் பார்த்து நானும் சரி, இங்குள்ள அனைத்து ஆண்களின் பார்வையும் மாறிவிட்டது. அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பொன்விழா என்று சொல்லப்பட்டாலும் இது பெண் விழா.

மிகமிகக் கம்பீரமாகச் சிங்கப் பெண்களைப் போல உட்கார்ந்திருக்கும் உங்களை எல்லாம் பார்க்கும்போது, இதைப் பார்க்க தந்தைப் பெரியார் இல்லையே! பேரறிஞர் அண்ணா இல்லையே! முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இல்லையே! என்ற ஏக்கம்தான் எனக்கு முதலில் வந்தது.

பெண் காவலர்களின் கடமை

பெண்களின் கையில் இருக்கும் கரண்டியைப் பறித்துப் புத்தகங்களைக் கொடுத்தால் போதும் என்று சொன்னவர் தந்தைப் பெரியார் அவர்கள். படிக்க மட்டுமல்ல, அதிகாரம் பொருந்திய பொறுப்புக்கும் பெண்கள் வரவேண்டும் என்று மனதார விரும்பியவர் அவர். ஆண்களைப் போலவே பெண்கள் "கிராப்" வைத்துக்கொள்ள வேண்டும், பேண்ட் சட்டை போட்டுக்கொள்ள வேண்டும் என்று சொன்னவர் தந்தைப் பெரியார்.

பெண்கள் அதிகளவில் அரசியலுக்கு வரவேண்டும், அவர்கள் மேடைகளில் முழங்க வேண்டும் என்று ஊக்கப்படுத்தியவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள்.

பெண்கள் உயர்கல்வியைக் கற்று, தகுதிக்கேற்ற வேலைகளுக்குச் செல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

பெண்களுக்குச் சொத்துரிமை உண்டு என்பதைச் சட்டம் ஆக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அவர்தான் தமிழ்நாட்டு வரலாற்றில் முதன்முதலாகப் பெண்களும் காவலர் ஆகலாம் என்பதை உருவாக்கி, காக்கி பேண்ட் சட்டை அணிய வைத்துப் பெண்கள் கையில் துப்பாக்கியையும் ஏந்த வைத்தார். அந்த துப்பாக்கியை ஏந்த வைத்தது மட்டுமல்ல, இன்றைக்குத் தமிழ்நாட்டில் 35 ஆயிரத்து 329 பெண் காவல் ஆளினர்கள் பணியாற்றி வருகின்றனர் என்றால், இதற்கான விதையை விதைத்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். அவரை நினைத்துப் பார்ப்பதை என்னுடைய கடமையாக நான் கருதிக்கொண்டு இருந்தாலும், இங்கு வந்திருக்கக்கூடிய அனைத்துப் பெண் காவலர்களின் கடமையாகவும் நான் கருதுகிறேன்.

காவல் அரண்கள் நீங்கள்

ஐம்பதாவது பொன்விழாவைக் கொண்டாடும் இந்த நேரத்தில், தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றும் பெண் காவலர்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களை நன்றி உணர்வோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நாட்டைக் காத்துக் கொண்டு இருக்கும் காவல் அரண்கள் நீங்கள். கோடிக்கணக்கான மக்களின் உயிரும் உடமையும் உங்களை நம்பி ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் சொன்னால், முதலமைச்சர் என்ற முறையில் எனக்கான பாதுகாப்புப் படையிலும் பெண் காவலர்கள் இருக்கிறார்கள்.

முதலமைச்சர் செல்லும் பாதையில் பாதுகாப்புப் பணிக்காகக் காவலர்கள் நிறுத்தப்படுவது வழக்கம். நான் வேண்டாம் என்று சொன்னாலும், பாதுகாப்பு அதிகாரிகள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனாலும் அவர்களுக்கு, நான் முதலமைச்சர் என்கிற முறையில், முதலமைச்சர் ஆனதும் ஒரு வேண்டுகோளை வைத்தேன். பெண் காவலர்களை ரொம்ப நேரம் வெயிலில் நிற்க வைக்க வேண்டாம் என்று

நான் கேட்டுக்கொண்டேன். அதனை ஏற்று, பெண் காவலர்கள் சாலைகளில் இருபுறமும் நிற்க வைப்பது தவிர்க்கப்பட்டது, இது எல்லாம் உங்களுக்குத் தெரியும். பெண் காவலர்கள் மீது எனக்கு உள்ள ஒரு உணர்வுப்பூர்வமான, அக்கறையான வெளிப்பாடு.

மக்களைக் காக்கும் உங்களை நாங்கள் காப்போம்

பெண் காவலர்களுக்கான சீருடையில் திருத்தம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்தபோது, சட்டமன்ற உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அவர்களது பரிந்துரைப்படி உடை தேர்வு செய்யப்படும் என்று தாயுள்ளத்தோடு முடிவெடுத்தார் அன்றைக்கு இருந்த முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள்.

மக்களைக் காக்கும் உங்களை நாங்கள் எப்போதும் காப்போம் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் இவை.

1967ஆம் ஆண்டு கழக ஆட்சி முதன்முதலாக மலர்வதற்கு முன்பே காவலர்களின் பிரச்சினைக்காகக் குரல் கொடுத்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். 'உதயசூரியன்' என்ற நாடகத்தை எழுதி அதில் தலைவர் கலைஞர் அவர்களே நடித்தார்கள். அந்த நாடகத்தில் போலீஸ்காரர்களின் நிலைமையைச் சுட்டிக் காட்டும் வகையில் ஒரு பாடல், அதை கலைஞரே எழுதினார். அந்தப் பாட்டுக்காகவே அந்தக் காலத்தில் அந்த நாடகம் தடை செய்யப்பட்டது.

இதை மனதில் வைத்திருந்த கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததும், காவலர்களுக்காகத் தனியாக ஆணையம் அமைத்து ஊதியங்களை உயர்த்தினார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க உத்தரவு

அந்தக் காலத்தில் காவலர்கள் அனைவரும் அரைக்கால் சட்டைதான் போட்டிருப்பார்கள். அதனை 'பேண்ட்' ஆக ஆக்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

1973ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பெண் காவல் உதவி ஆய்வாளர் மற்றும் பெண் காவலர்களைக் காவல் பணியில் சேர்க்க வேண்டும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க உத்தரவை அதாவது அரசாணை எண் 2382, நாள் 05.09.1973இன் மூலம் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதை வெளியிட்டார்கள். அதன் விளைவாக, ஓர் உதவி ஆய்வாளர் மற்றும் 21 பெண் காவலர்கள் 27.12.1973 அன்று பணியில் சேர்க்கப்பட்டார்கள். சேத்துப்பட்டு சேவா சதன் பள்ளியில் ஓராண்டு அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட்டது. சிறப்பான பயிற்சி முடித்த நிலையில் 01.11.1974 அன்று ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் அப்போதைய ஐ.ஜி மதிப்பிற்குரிய F.V.அருள் அவர்களது தலைமையில், பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மகளிர் காவல் ஆணையரும், சென்னை மாநகரத்திலேயே பணியில் அமர்த்தப்பட்டார்.

தி.மு.கழக ஆட்சியில் பெண்கள், காவலர்கள் தொடங்கி எஸ்.பி, டி.ஐ.ஜி, ஐ.ஜி, காவல்துறை கூடுதல் இயக்குநர், காவல்துறை இயக்குநர், படைத்தலைவர் என எல்லா நிலைகளிலும், தமிழ்நாடு காவல் துறையில் இன்று 35,329 பெண் காவல் ஆளினர்கள் பணியாற்றி வருகின்றனர்.

பெண் காவலர் திட்டம்

தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்த ஒரு சகாப்தத்தின் ஐம்பதாம் ஆண்டு பொன்விழாவில், அவரது மகனான நான் முதலமைச்சராக வந்து கலந்துகொள்வது எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய பெரும் பெருமையாக, பெரும் பேறாக நான் கருதுகிறேன்.

இந்தப் பொன்விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய காவல்துறைத் தலைவர் சைலேந்திரபாபு அவர்களையும் காவல்துறை அதிகாரிகளையும் நான் பாராட்டுகிறேன்.

நேரம் காலம், வெயில் மழை, இரவு பகல் பாராமல் ஊருக்காக உழைக்கும் காவலர்களைப் பாராட்டுவதற்கான விழா இது.

பெண்களுக்கான விழா இது.

பெண் காவலர் திட்டத்தை உருவாக்கியதன் பொன்விழா வருகிறது என்று சொன்னபோது, இதை மிகப்பெரிய விழாவாக நடத்த வேண்டும் என்று நான் உத்தரவிட்டேன். காரணம், பெண்களின் தியாகத்தை மதிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொன்னேன்.

ஆண் காவலர்கள் - பெண் காவலர்கள் என்று பிரித்துப் பார்ப்பதாக ஆண் காவலர்கள் தயவு செய்து நினைத்துவிடக் கூடாது. காவல் பணியோடு சேர்த்துக் குடும்பப் பணிகளையும் செய்தாக வேண்டிய நெருக்கடி பெண் காவலர்களுக்கு இருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்திட

வேண்டும். அதனால்தான் பெண்களைப் பொறுத்தவரைக்கும் வீட்டையும் நாட்டையும் சேர்த்துப் பாதுகாக்கிறார்கள் நம்முடைய பெண் காவலர்கள். அதனால்தான் அவர்களை மனந்திறந்து பாராட்ட வேண்டும் என்று நான் சொன்னேன்.

ஆண் காவலர்களுக்கு ஒரு சல்யூட் என்றால், பெண் காவலர்களுக்கு இரண்டு சல்யூட். அதனால்தான் எல்லா நிலையிலும் பணியாற்றும் பெண் காவலர்களுக்கு முழு மரியாதை தர வேண்டும் என்று நான் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்.

பெண் காவலர், பெண் உதவி ஆய்வாளர், பெண் ஐ.பி.எஸ் அதிகாரி எனக் காவல் பணியில் சேர்ந்தநிலையில், தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் நேரடி நியமன டி.எஸ்.பி. பதவியில் மட்டும் எந்த ஒரு பெண்ணும் பணியில் சேர இயலாத சூழல் இருந்து வந்தது.

கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வை

இந்நிலையில், 1989இல் கழக ஆட்சி அமைந்தபோது, இத்தகைய குரூப்-1 தேர்வு உயர் பதவிகளை பெண்கள் அடைய வேண்டும் என்பதற்காகவே, அரசுப் பணியில் பெண்களுக்கு 30 விழுக்காடு இடஒதுக்கீட்டை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு அமல்படுத்தினார். இதன் விளைவாக, குரூப்-1 தேர்வில் பணியில் சேர்ந்த பெண் அதிகாரிகள் பலர், இன்றைக்குக் கூடுதல் காவல்துறை இயக்குநராகவும், காவல்துறைத் தலைவர்களாகவும், காவல் துணைத் தலைவர்களாகவும், காவல் கண்காணிப்பாளர்களாவும், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களாகவும், காவல் துணைக் கண்காணிப்பாளர்களாகவும் பணிபுரிந்து வருகின்றனர் என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ பெண்கள் இன்றைக்குக் காவல்துறையின் அனைத்துப் பிரிவுகளிலுமே, அதாவது, சட்டம்-ஒழுங்கு குற்றப்பிரிவு, இரயில்வேத் துறை, சி.பி.சி.ஐ.டி., போக்குவரத்து, உளவுத்துறை. லஞ்ச ஒழிப்புத் துறை, சிறப்புக் காவல் படை, இணைய குற்றப் பிரிவு, கமாண்டோ படை - ஏன்? முதலமைச்சர் பாதுகாப்பு படை என அனைத்துப் பிரிவுகளிலுமே மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

❖ சட்டம்-ஒழுங்கு காவல் நிலையங்களில் உள்ள 1,356 ஆய்வாளர் பணியிடங்களில், 503 காவல் ஆய்வாளர்கள் பெண்கள்தான். அதாவது, சட்டம்-ஒழுங்குப் பாதுகாப்பில் 37 விழுக்காடு பெண் காவல் ஆய்வாளர்கள் திறம்பட நம்முடைய திராவிடமாடல் ஆட்சியில் பணியாற்றி வருகின்றனர்.

❖ காவல் பணிகளில், நிலைய எழுத்தர், சி.சி.டி.என்.எஸ். பணி, கணினிப் பிரிவு, நீதிமன்ற அலுவல், காப்புப் பணி, காணாமல் போனவர்களை இணைய உதவியுடன் கண்டறியும் பணி போன்றவற்றில் அளப்பரிய பங்களிப்பினைப் பெண் காவலர்கள் செய்து வருகின்றனர்.

இந்த ஆண்டு பணியில் சேர்ந்த 21 காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்களில், 17 பேர் பெண்கள் என்றால், முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையை நம்மால் இன்றைக்குத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

முதன்மையானத் திட்டங்கள்

காவல் துறையில் பெண்களுக்குப் பல முதன்மையான திட்டங்களைத் தந்ததும் கழக அரசுதான்!

❖ 160 ஆண்டுக்கால பெருமைமிகு சென்னை மாநகரக் காவல் ஆணையரகத்தில், முதல் பெண் காவல் ஆணையரை நியமித்ததும், முதல் பெண் காவல்துறை தலைமை இயக்குநரை / படைத்தலைவரைப் பணியமர்த்தி அழகு பார்த்ததும் நம்முடைய கழக அரசுதான்.

❖ தற்போது கழக அரசு அமைந்தவுடன், கொரோனா தொற்றுக் காலத்தில் காலமான காவலர்கள் உட்பட, பணியின்போது உயிர் துறந்திருக்கக் கூடிய காவலர்களின் வாரிசுகளுக்கு அரசு வேலை அளிக்கும் விதமாக, காவல் நிலைய வரவேற்பாளர் பணியிடங்களை உருவாக்கி 1,025 நபர்கள் பணியமர்த்தப்பட்டனர். அதிலும், 501 பணியிடங்கள் பெண்களுக்கு வழங்கப்பட்டது.

❖ பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க, இளஞ்சிறார்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களைக் கையாள, அனைத்து மகளிர் காவல் நிலையம் என்பது அனைத்துக்

காவல் உட்கோட்டங்களிலும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 41 உட்கோட்டங்களில் இத்தகைய மகளிர் காவல் நிலையங்கள் இல்லாத நிலையில், 2021ஆம் ஆண்டு நமது அரசு அமைந்தவுடன், 20 புதிய மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டன.

பெண்கள் நலன் காக்கும் விதமாக, இந்த ஆண்டு கோயம்பேடு, கோட்டூர்புரம், புழல் உட்பட 19 இடங்களில் புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஐ.நா.அவை, மகளிர் தினத்தை உலக அளவில், "புதுமைகளும், தொழில்நுட்பமும் பாலின சமத்துவத்தை நோக்கியதாக இருக்க வேண்டும்" என்ற தலைப்பில் கொண்டாடப்படுகிறது. இந்த இலக்கை நாம் எப்போதோ எட்டிவிட்டோம்.

நமது காவல் துறையைப் பொறுத்தவரையில், இணையத் தொழில்நுட்பத்தை 70 விழுக்காடு பெண்கள்தான் செயல்படுத்துகிறார்கள். காவல் தொழில்நுட்பப் பிரிவில் 140 பெண் உதவி ஆய்வாளர்கள் பணிபுரிகின்றனர். விரல் ரேகைப் பிரிவில் புதிய தொழில்நுட்பமான நஃபிஸ் (NAFIS) மற்றும் ஃபேக்ட் 7 எனும் புதிய தொழில்நுட்பத்தைச் செயல்படுத்தும் விதமாக விரல்ரேகைப் பிரிவில், 72 பெண் அதிகாரிகள் பணிபுரிந்து வருகின்றனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பு

இந்த வரிசையில் இந்தப் பொன்விழா கொண்டாடும் நாளில் பெண் காவலர்களுக்கு நவரத்தினம் போன்று ஒன்பது வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்புகளைத் தற்போது வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. பெண் காவலர்கள், குடும்பத் தலைவிகளாகவும் இருந்துகொண்டு கடினமான காவல் பணியையும் செய்து வருவதால், அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான, 'ரோல்-கால்' எனப்படும் காவல் வருகை அணிவகுப்பு, இனிமேல் காலை ஏழு மணி என்பதற்குப் பதிலாக, எட்டு மணி என்று மாற்றியமைக்கப்படும்.

2. சென்னை, மதுரை ஆகிய பெருநகரங்களில் பெண் காவலர்கள் தங்கும் விடுதிகள் விரைவில் அமைக்கப்படும்.

3. அனைத்துக் காவல் நிலையங்களிலும், பெண் காவலர்களுக்கெனக் கழிவறை வசதியுடன் தனி ஓய்வறைக் கட்டித் தரப்படும்.

4. பெண் காவலர்கள், காவல் நிலையங்களில் பணிக்கு வரும்போது, தங்களது குழந்தைகளைத் தனியாக விட்டுவிட்டு வரக்கூடிய சூழலை உணர்ந்து, சில மாவட்டங்களில் காவல் குழந்தைகள் காப்பகம் தொடங்கப்பட்டது. அதை முழு அளவில் மேம்படுத்திச் செயல்படுத்தும் விதமாக, விரைவில் தேவையான அனைத்து இடங்களிலும், "காவல் குழந்தைகள் காப்பகம்" அமைக்கப்படும்.

5. பெண் காவல் ஆளினர்களின் திறமையை முழுமையாக அங்கீகரிக்கும் விதமாக, பெண்களை முதன்முறையாக காவல் பணியில் ஈடுபடுத்திய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது நினைவாக, அவரது பெயரில் "கலைஞர் காவல் பணி விருதும், கோப்பையும்" ஆண்டுதோறும் வழங்கப்படும்.

6. ஆண் காவலர்களுடன் போட்டியிட்டு வெற்றிபெறும் இன்றைய சூழ்நிலையில்,

பெண் காவலர்கள், குடும்பத் தலைவிகளாகவும் பல பொறுப்புகளை ஆற்ற வேண்டியிருப்பதால், அவர்களது குடும்பச் சூழலுக்கு ஏற்ப, விடுப்பு, பணியிட மாறுதல் வழங்குமாறு, காவல் உயர் அலுவலர்களுக்கு உரிய உத்தரவுகள் வழங்கப்படும்.

7. பெண் காவலர்களுக்குத் துப்பாக்கிச் சுடும் போட்டித் தனியாக ஆண்டுதோறும் நடத்தப்பட்டு, விருதுகளும் பரிசுகளும் வழங்கப்படும். அதேபோல், தேசிய பெண் காவலர்களுக்கு இடையேயான துப்பாக்கிச்சுடுதல் போட்டியைத் தமிழ்நாட்டில் நடத்திட ஏற்பாடு செய்யப்படும்.

8. பெண் காவல் ஆளினர்களின் தேவைகள், பிரச்சினைகள், செயல்திறன் பற்றி கலந்தாலோசனை செய்யும் விதமாக, "காவல்துறையில் பெண்கள்" எனும் தேசிய மாநாடு ஆண்டுதோறும் தமிழ்நாட்டில் நடத்தப்படும்.

9. பெண் காவல் ஆளினர்கள் தங்கள் பணிமுறையை மேலும் செம்மைப்படுத்திக் கொள்ளும் விதமாகவும், குடும்பம், வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளும் விதமாக, டி.ஜி.பி. அலுவலகத்தில் "பணி வழிகாட்டும் ஆலோசனைக் குழு" ஒன்று அமைக்கப்படும்.

இந்த அறிவிப்புகள் உங்கள் அனைவருக்கும் பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தித் தரும் என்று நம்புகிறேன். உங்களுடைய கரவொலியின் மூலமாக அதை நான் உணருகிறேன்.

சட்டம்தான் உங்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு. அந்தச் சட்டத்தை நிலைநாட்ட உங்களது திறமையும், வீரமும், கருணையும் பயன்படட்டும்.

தமிழ்நாடு காவல் துறையின் செயல்பாடுகள், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி, தொழில் முன்னேற்றத்திற்கான தேவையான பங்களிப்பையும் தொடர்ந்து வழங்கி வருகிறது. இதன்மூலம் அமைதியான தமிழ்நாடு உருவாக உங்களது பணி உதவி செய்து வருகிறது.

குற்றங்களைக் குறைக்கும் துறையாக மட்டுமல்லாமல், குற்றங்கள் நடைபெறாத சூழலை உருவாக்கும் துறையாக நீங்கள் இருக்க வேண்டும். அதற்குப் பெண் காவலர்கள் பெரும் பங்கை ஆற்ற வேண்டும் என்று கேட்டு, பொன்விழா கொண்டாடும் அனைத்துப் பெண் காவலர்களுக்கும் மீண்டும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

சிவகங்கை மாவட்டத்தில் ரூ.18.43 கோடிச் செலவில்

“கீழடி அருங்காட்சியகம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 05.03.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 05.03.2023 அன்று சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை உலகத் தமிழர்கள், பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் 31,000 சதுர அடி பரப்பளவில் ரூ.18.43 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ள கீழடி அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை கீழடி அகழாய்வுத் தளத்தில் 2018ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து தற்போது வரை ஐந்து கட்டங்களாக அகழாய்வு மேற்கொண்டு வருகிறது. தமிழர்களின் பண்பாட்டின் முக்கியத்துவம், தொன்மையை நிரூபிக்கவும், அதை உலகளவில் கொண்டு செல்லவும் தொல்லியல் துறை உலகப் புகழ்பெற்ற அறிவியல் ஆய்வகங்களுக்குக் கீழடியில் கண்டெடுக்கப்பட்ட முக்கியமான கண்டுபிடிப்புகளை அனுப்பி அதிகாரப்பூர்வமான முடிவுகளைப் பெற்றுள்ளது. கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட மாதிரிகளின் அறிவியல் காலக்கணிப்பு கி.மு. ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வைகை

ஆற்றங்கரையில் நகரமயமாக்கல் இருந்ததை உறுதிப்படுத்தியது. மேலும், கங்கைச் சமவெளியின் நகரமயமாக்கலுக்குச் சமகாலமானது என்பதையும் உறுதிபடுத்தியுள்ளது. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தமிழ்ச் சமூகம் கல்வியறிவும் எழுத்தறிவும் பெற்றிருந்தனர் என்பதை அறிவியல் அடிப்படையில் நிலைநிறுத்தியுள்ளது.

கீழடி அகழாய்வில் 1,000க்கும் மேற்பட்ட குறியீடுகளும், 60க்கும் மேற்பட்ட தமிழி எழுத்துப் பொறிப்புக் கொண்ட பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இப்பானை ஓடுகளில் குவிரன் ஆதன், ஆதன் போன்ற தனிநபர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளதன் வாயிலாகச் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் கல்வியறிவு பெற்றிருந்தனர் என்பதை வெளிப்படுகிறது.

தற்போது கிடைக்கப்பெற்றுள்ள தரவுகள் மற்றும் கண்டுபிடிப்புகளின் வாயிலாக வைகை ஆற்றங்கரையில் வாழ்ந்த தமிழ்ச் சமூகமானது வேளாண்மை மூலம் பொருளாதாரத்தினை உயர்த்திக் கொண்டனர், மட்கலன்கள், இரும்பு,

நெசவு, மணிகள், சங்கு வளையல்கள் ஆகிய தொழில்களை மேற்கொண்டிருந்தனர் என்பதும் அகழாய்வுச் சான்றுகள் மூலம் அறிகிறோம்.

மகாராஷ்டிரம், குஜராத் பகுதிகளில் கிடைக்கப்பெறுகின்ற மூலக்கற்களைக் கொண்டு சூதுபவள மணிகள், அகேட் போன்ற கல்மணிகள் செய்யப்பட்டுள்ளது. அப்பகுதியுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பைக் காட்டுகின்றது. அதுபோல, கங்கைச் சமவெளியைச் சார்ந்த கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முந்தைய வெள்ளி முத்திரைக் காசுகள் கிடைப்பதன் மூலம் கங்கைச் சமவெளியுடன் வணிகப் பரிமாற்றம்

நடைபெற்றுள்ளதை உறுதிசெய்ய முடிகிறது. மேலும், ரோம் நாட்டுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்புக்கு நாட்டு நாணயங்களும், ரோம் நாட்டு ரௌலட்டட் மற்றும் அரிட்டன் வகை பானை ஓடுகளும் வலுசேர்க்கின்றன.

கீழடியில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்கள் நகர நாகரிகத்திற்கானக் கூறுகளை வெளிப்படுத்தியுள்ளது. பண்டைத் தமிழ்ச் சமூகம் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் எழுத்தறிவு பெற்றும், நகர நாகரிகத்துடனும் மேம்பட்ட தமிழ்ச் சமூகமாகவும் விளங்கியதை கீழடி அகழாய்வு முடிவுகள் வாயிலாக அறிவியல் பூர்வமாகத் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை நிலை நிறுத்தியுள்ளது.

கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் உலகத் தமிழர்கள் பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் 31,000 சதுர அடி பரப்பளவில் ரூ.18.43 கோடி செலவில் கீழடி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகத்தில், மதுரையும் கீழடியும், வேளாண்மையும் நீர் மேலாண்மையும், கலம் செய்கோ, ஆடையும் அணிகலன்களும், கடல்வழி வணிகம், வாழ்வியல் எனும் ஆறு பொருண்மைகள் அடிப்படையில் தனித்தனிக் கட்டடங்களில் தொல்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. தமிழர்களின் தொன்மை, பண்பாடு, நாகரிகம், கல்வியறிவு, எழுத்தறிவு, உலகின் பல்வேறு பகுதியுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பு ஆகியவற்றினைப் பறைசாற்றும் விதத்திலும், அதனை உலகிற்கு வெளிக்கொணரும் வகையிலும், உலகத் தமிழர்கள் பெருமை கொள்ளும் வகையிலும் மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்கள் 05.03.2023 அன்று கீழடி அருங்காட்சியகத்தைத் திறந்து வைத்து, பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, கீழடி அருங்காட்சியகத்தை அமைத்த தொல்லியல் துறை வல்லுநர்கள், சிற்பிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கீழடி அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ள சிறப்பம்சங்கள்

தமிழ்நாட்டின் தொன்மை மற்றும் வரலாற்றினையும், கீழடியின் முக்கியத்துவத்தையும் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் 15 நிமிட ஒளி-ஒலிக் காட்சி குளிரூட்டப்பட்ட அரங்கில் காட்சிப்படுத்தப்படுகிறது.

வைகை ஆற்றங்கரையில் உள்ள தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைத் தொடுதிரையில் அறிந்துகொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

கீழடி அருங்காட்சியகத்தில் பொருண்மை சார்ந்து அமைக்கப்பட்ட கட்டடங்களான, வேளாண்மை, இரும்புத் தொழில், நெசவு, மணிகள் தயாரித்தல் கடல்வழி வணிகம், மேம்பட்ட சமூகம், எழுத்தறிவு ஆகியவற்றிற்கு உரிய விளக்கம் இரண்டு நிமிட உயிரூட்டுக்காட்சி (Animation) வாயிலாகக் காட்சிப்படுத்தப்படுகிறது.

கீழடி அகழாய்வுப் பணிகள், தோற்றம், செயல்பாடுகள் ஆகியவற்றை மெய்நிகர் காட்சி (Virtual Reality Exhibition) வாயிலாக தத்ரூபமாக உணர்ந்துகொள்ளும் வகையில் சிறப்பாக மெய்நிகர் காட்சிக்கூடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சூதுபவள கற்களால் செய்யப்பட்ட மோதிரக்கல்லின் மாதிரி சுழன்று காணும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

சங்ககால மக்களின் கடல்சார் வணிகத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் சங்ககாலக் கப்பலின் மாதிரி வடிவமைக்கப்பட்டுள்ளது.

அகழாய்வில் அரிதாகக் கண்டெடுக்கப்பட்டுள்ள தொல்பொருட்கள், மட்பாண்டங்கள், அகழாய்வுக் குழிகள், செங்கற்கட்டுமானங்கள் போன்றவற்றின் மாதிரிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

குழந்தைகளும் மாணவர்களும் தமிழர் விளையாட்டுக்களைத் தொடுதிரையில் விளையாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட அதிமுக்கியமான தொல்பொருட்கள் முப்பரிமாண வடிவில் (3 Dimension) பொதுமக்கள் உவகையுடன் கண்டு களிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்களது பெயரினைத் தொடுதிரையில் எழுதினால் தமிழி எழுத்தில் தங்களது பெயரைக் காண்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிவகங்கைச் சீமையின் மரபுசார் உணவு முறைகளை ஊக்குவிக்கும் வகையில் சிறுதானிய உணவு வகைகளை விற்பனை செய்யும் உணவுக்கூடமும் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை, கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் ரூ.71.81 கோடி மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு சிகிச்சைப் பிரிவு கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அடிக்கல் நாட்டினார் - 08.03.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.03.2023 அன்று கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளுடன் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 1,18,371 சதுர அடி பரப்பளவில் ரூ.71.81 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள சிறப்பு மருத்துவமனைக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

கொளத்தூர், பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனை 37 ஆண்டுகளாக தரைத்தளம் மற்றும் நான்கு அடுக்குக் கட்டடமாக 100 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவியேற்றவுடன் 18.05.2021 அன்று இம்மருத்துவமனையைப் புனரமைப்புச் செய்து தரம் உயர்த்துவதற்கான அரசாணை வெளியிட்டு, 100 படுக்கைகளில் இருந்து 300 படுக்கைகளாக தரம் உயர்த்தப்பட்ட இம்மருத்துவமனையை 13.08.2021 அன்று பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் திறந்து வைத்தார்.

மேலும், இம்மருத்துவமனையில் ரூ.1 கோடி மதிப்பிலான அதிநவீன வசதிகளுடன் கூடிய அவசரகால ஊர்தி (Advanced Life Support Ambulance), 100 அதிநவீன வசதிகள்

கொண்ட படுக்கைகள், ரூ.1 கோடி மதிப்பிலான 10 படுக்கை வசதிகள் கொண்ட இரத்த சுத்திகரிப்பு வார்டு (Dialysis Ward), ரூ.5 கோடி மதிப்பிலான நான்கு நவீன அறுவை அரங்கங்களை கொண்ட அறுவைக்கூடம், ஆக்சிஜன் உற்பத்தி கலன் (PSA Plant), முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கான சிறப்புப் பிரிவு, அதிநவீன RTPCR சோதனைக் கூடம், 25 படுக்கைகள் கொண்ட உயர்தர உயிர் காக்கும் உபகரணங்களுடன் கூடிய தீவிர சிகிச்சைப் பிரிவு, 12 படுக்கைகள் வசதிகொண்ட Hybrid குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு (ECRP), 6KL திரவ பிராணவாயு கலன், CT Scan, ECHO,

அல்ட்ரா சவுண்ட் டாப்லர் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இம்மருத்துவமனையில் அவசரச் சிகிச்சைப் பிரிவு, பொது மருத்துவப் பிரிவு, அறுவைச் சிகிச்சைப் பிரிவு, குழந்தைகள் நலப் பிரிவு, மகளிர் மற்றும் மகப்பேறு பிரிவு, கண் மருத்துவப் பிரிவு, காது மூக்கு தொண்டை மருத்துவப் பிரிவு, சித்த மருத்துவப் பிரிவு, எலும்பியல் பிரிவு போன்ற சிகிச்சைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு 2,000 முதல் 2,500 புறநோயாளிகளும், 150 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேம்படுத்தப்பட்ட உயர்தர அறுவைச் சிகிச்சை அரங்கில் மாதந்தோறும் 100 பெரிய அறுவை சிகிச்சைகளும், 1,500 சிறிய அளவிலான அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகிறது. இரத்த சுத்திகரிப்புப் பிரிவின் (Dialysis) கீழ் மாதந்தோறும் 450 முதல் 500 பேர் பயனடைந்து வருகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள பெரியார் நகர் அரசு புறநகர் சிறப்பு மருத்துவமனையின் சிறப்பு அம்சங்கள்

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் 2022-2023ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், சென்னை பெரியார் நகர் மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை, விபத்துகாய சிகிச்சைப் பிரிவு, தொற்றுநோய் பிரிவு, டயாலிசிஸ், இரத்த வங்கி போன்ற சேவைகள் வழங்க உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூ.71.81 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி எண் 110இன் கீழ் 07.05.2022 அன்று “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களது தொகுதி மக்களுடைய தேவைகளை அறிந்து அந்தந்த மாவட்ட ஆட்சியர்களிடம் 10 முக்கியத் திட்டங்கள் குறித்த பட்டியலை அளிக்க வேண்டும் என்று அறிவித்தார்கள். இந்த அறிவிப்பின்படி, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பெரியார் நகரில் மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவமனை அமைக்க கோரிக்கை வைக்கப்பட்டது.

அதன்படி, பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனை வளாகத்தில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 1,18,371 சதுர அடி பரப்பளவில் ரூ.71.81 கோடி மதிப்பீட்டில், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு சிகிச்சைப் பிரிவு கொண்ட சிறப்பு மருத்துவமனைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இப்புதிய மருத்துவமனையில், மாற்றுத்திறனாளிகளுக்கென பிரத்தியேக வசதிகளுடன் கூடிய ஆண்கள் மற்றும் பெண்களுக்கான புறநோயாளிகள் பிரிவு, கூழாங்கல் பதித்த நடைபயிலும் கூடம் மற்றும் இயன்முறை சிகிச்சைக் கூடம், மாற்றுத்திறனாளிகளுக்கான உள்நோயாளிகள் பிரிவு வார்டுகள், செயற்கை கை, கால் தயாரிக்கும் கூடம் ஆகியவையும், 20 படுக்கைகளுடன் தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முனைப்பு உயர்த்துதல், ECHO ஆய்வகம், மகப்பேறு பிரிவு, இரத்த வங்கி, மூன்று அறுவை சிகிச்சை அரங்குகள், பச்சிளம் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவு, முழு உடல் பரிசோதனை மையம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக்

காப்பீட்டு திட்டப் பிரிவு, நம்மை காக்கும் 48 திட்டப் பிரிவு, அனைத்து வித தீவிர சிகிச்சை பிரிவுகள் போன்ற மருத்துவப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளது. இப்புதிய கட்டடத்தில் மின் தூக்கி வசதிகள், ஜெனரேட்டர் வசதிகள், சிறப்பு மருத்துவ இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், தீத்தடுப்பு கட்டமைப்புகள், கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் மறுசுழற்சிக் கட்டமைப்புகள் போன்ற வசதிகளும் அமைக்கப்படவுள்ளன.

பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.03.2023 அன்று கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.3.49 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, ரூ.1.14 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.61.98 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவில் ரூ.61.98 கோடி மதிப்பீட்டில் வில்லிவாக்கம் சந்திக்கடவு எண்.1க்கு மாற்றாக வடக்கில் கொளத்தூர் பிரதான சாலையையும் தெற்கில் ஐ.சி.எப். சாலையையும் இணைக்கும் வண்ணம் புதியதாக கட்டப்பட்டு வரும் மேம்பாலப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், வில்லிவாக்கம் மேம்பாலத்தின் கீழ்ப்பகுதியில் ரூ.1.14 கோடி மதிப்பீட்டில் நடைபாதை, சிறுவர் விளையாட்டுத் திடல், திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம், குடிநீர் வசதி, மரம், செடி மற்றும் புல்வெளி அமைத்தல், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையிலான கழிப்பறை, மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு, கண்காணிப்பு கேமராக்கள் ஆகிய வசதிகளுடன் புதியதாக அமைக்கப்படவுள்ள பூங்காவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து, கொளத்தூர் 65ஆவது வார்டுக்குட்பட்ட பூம்புகார் நகர் 28ஆவது தெருவில் ரூ.69.20 இலட்சம் மதிப்பீட்டில் திருவீதியம்மன் கோயில் குளத்தினை தூர்வாரி, அங்கு புதியதாக அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு வசதி, நடைபாதை, யோகா மேடை மற்றும் திறந்தவெளி ஆண்கள் உடற்பயிற்சி மையம் ஆகியவற்றை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

பின்னர், மழைக்காலங்களில் வீனஸ் நகர் மற்றும் செல்வி நகர் பகுதிகளில் நீர்தேங்கா வண்ணம் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் இரண்டு மழைநீர் வெளியேற்றும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மழைநீர் வெளியேற்று நிலையமும் தலா 1.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு மழைநீர் தேங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. நீரை அகற்ற ஒவ்வொரு தொட்டியிலும் 100 குதிரைத்திறன் கொண்ட இரண்டு நீர்மூழ்கி மோட்டார்கள் பொருத்தப்பட்டு மோட்டார் அறைகள் கட்டப்பட்டுள்ளது. இப்புதிய இரண்டு நீரேற்று நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, குடியிருப்பு நலச் சங்கத்தினரிடம் நீரேற்று நிலையங்களுக்கான சாவிகளை வழங்கினார்.

முன்னதாக, கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பெறப்பட்ட மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை, பயனாளிகளுக்கு மருத்துவ உதவித்தொகை, திருமண உதவித்தொகை, இஸ்திரி பெட்டிகள், மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர ஸ்கூட்டர், காதுகேட்கும் கருவி என 119 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

"தமிழ்நாடு தொழில்நுட்ப ஜவுளி, மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களிலிருந்து செயற்கை இழை நூல், செயற்கை இழை துணி, ஆடை தயாரிப்புகளுக்கான சிறப்புத் திட்டம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வெளியிட்டார் - 18.03.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.03.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு, வர்த்தகத்துறை சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள "தமிழ்நாடு எத்தனால் கொள்கை 2023", "தமிழ்நாடு நகர எரிவாயு விநியோகக் கொள்கை 2023", "தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டம் 2023", "தமிழ்நாடு தொழில்நுட்ப ஜவுளி, மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களிலிருந்து செயற்கை இழை நூல், செயற்கை இழை துணி, ஆடை தயாரிப்புகளுக்கான சிறப்புத் திட்டம்" ஆகியவற்றை வெளியிட்டார்.

தமிழ்நாடு, பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில், இந்தியாவிலேயே முதன்மை மாநிலங்களில் ஒன்றாக விளங்கிவருகிறது. பன்னோக்குத் திட்டங்களைப் பெருமளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கவும், மாநிலப் பொருளாதாரத்தை வலுவடையச் செய்திடவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி என்ற இலக்கினை அடைந்திட பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்றது முதல் இதுநாள்வரை 209 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு ரூ.2,34,123 கோடிக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 3,49,261 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வரசு பொறுப்பேற்றது முதல் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்காகத் தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை 2021 (Tamil Nadu Fintech Policy), தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை 2021 (Tamil Nadu Export Promotion Strategy), தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை 2022 (Tamil Nadu Research and Development Policy), தமிழ்நாடு வான்வெளி மற்றும்

பாதுகாப்புத் தொழில் கொள்கை 2022 (Tamil Nadu Aerospace and Defence Industrial Policy), தமிழ்நாடு உயிர் அறிவியல் கொள்கை 2022 (Tamil Nadu Life Sciences Promotion Policy), தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை 2022 (Tamil Nadu Footwear and Leather Products Policy), தமிழ்நாடு மின்வாகனக் கொள்கை 2023 (Tamil Nadu Electric Vehicle Policy) ஆகிய கொள்கைகள் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, பல்வேறு தொழில் நிறுவனங்களின் கோரிக்கைகளை ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்கண்ட கொள்கைகள் மற்றும் திட்டங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு எத்தனால் கொள்கை 2023

கொள்கையின் நோக்கம்

தமிழ்நாட்டைப் பசுமைப் பொருளாதாரம் மற்றும் குறைந்த செலவில் மாற்றுப் பசுமை எரிபொருளுக்கான முதலீட்டு மையமாக மேம்படுத்துதல் இக்கொள்கையின் நோக்கமாகும்.

கொள்கையின் அவசியம்

எத்தனால் கலந்த பெட்ரோல் மூலம் வாகனங்கள் வெளியேற்றும் புகை உமிழ்வு வெகுவாகக் குறையும் என்பதால் சுற்றுப்புற மாசுபாட்டின் நிலை பெருமளவு குறைந்து, மக்களின் சுகாதாரம் பேணப்படும் மற்றும் அவர்களின் வாழ்க்கை நிலை மேம்படும். இம்முயற்சி, ஐக்கிய நாடுகள் சபையின் COP 26இல், காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்காக, 2070ஆம் ஆண்டிற்குள் நிகர பூஜ்ஜிய புகை உமிழ்வு இலக்கை அடைவோம் என்று இந்தியா அளித்துள்ள உறுதிமொழியை நிறைவேற்றுவதில் தமிழ்நாட்டின் முக்கிய பங்களிப்பாக இக்கொள்கை அமையும்.

எத்தனால் கலந்த பெட்ரோலை ஊக்குவிப்பதற்கான காரணிகள்

உபரி பருவத்தில், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனில் மறுமலர்ச்சி ஏற்பட்டு இதனால் சர்க்கரை ஆலைகளின் பணப்புழக்கம் அதிகரிக்கும். எனவே, விவசாயிகளுக்குத் தரப்படவேண்டிய

விளைபொருள் கொள்முதலுக்கான நிலுவைத் தொகை தாமதமின்றி, வழங்கிட இயலும், கரும்பு, மக்காச்சோளம் போன்ற மூலப்பொருட்களை பயிரிடும் விவசாயிகளின் வருமானம் பெருமளவு அதிகரிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும், வடிப்பாலை கரையக்கூடிய ஈரதானியப் பொருட்கள் (DWGS) மற்றும் வடிப்பாலைக் கரையக்கூடிய உலர் தானியப் பொருட்கள் (DDGS) ஆகியன கால்நடைகளுக்கு தீவனமாகப் பயன்படும், எரிபொருள் இறக்குமதியில் வெளிநாடுகளைச் சார்ந்து இருத்தல் குறையும் என்பதால் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு இது பெரிதும் உதவும்.

இக்கொள்கை அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும்.

தமிழ்நாடு நகர எரிவாயு விநியோகக் கொள்கை 2023

சுற்றுச்சூழலுக்கு உகந்த பசுமையான எரிபொருளான இயற்கை எரிவாயுவின் உபயோகத்தினை ஊக்கப்படுத்தவும், அதற்கான உட்கட்டமைப்பைத் தமிழ்நாட்டில் விரைவாக அமைக்கத் தேவையான விதிகள், நடைமுறைகளை உருவாக்கும் நோக்கத்தோடு இக்கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளுக்கும், வாகன பயன்பாட்டிற்கும், 2.30 கோடி வீடுகளுக்கும் குழாயின் மூலம் இயற்கை எரிவாயு வழங்க இக்கொள்கை மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இதன்மூலம் சுமார் ரூ.35,000 கோடி முதலீடு 8 ஆண்டுகள் கால அளவில் ஈர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொள்கையின் நோக்கம்

நகர எரிவாயு விநியோகத்திற்கான உட்கட்டமைப்பை விரைவாகச் செயல்படுத்துவதை உறுதி செய்தல், விரைவான அனுமதிகளை வழங்குதல், இயற்கை எரிவாயு பயன்பாட்டைப்

படிப்படியாக ஊக்குவிக்கத் தேவையான விதிகள்/ ஒழுங்குமுறைகளை உருவாக்குதல், பாதுகாப்பான, தடையில்லா இயற்கை எரிவாயுவினை விநியோகிக்கத் தேவையான உட்கட்டமைப்பை நகர எரிவாயு விநியோக நிறுவனங்கள் பராமரிக்க வலியுறுத்துதல், மீன்பிடிக் கப்பல்கள், தொலைத்தொடர்புத் துறையில் திரவ இயற்கை எரிவாயுவை எரிபொருளாக ஏற்றுக்கொள்ள ஊக்குவித்தல் ஆகியவை இக்கொள்கையின் நோக்கமாகும்.

தமிழ்நாடு சரக்குப் போக்குவரத்துக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டம் 2023

மாநிலத்தின் வேகமான பொருளாதார வளர்ச்சிக்கு நம்பகமான, சிக்கனமான, நிலையான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குப் போக்குவரத்துச் சூழல் அமைப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட போட்டித்திறனை ஊக்குவிக்கும் வகையில் தொலைநோக்குப் பார்வையுடன் இக்கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.

முக்கிய கருப்பொருட்கள் (Themes)

ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் வலுவான போக்குவரத்து உட்கட்டமைப்பினை உருவாக்குதல் (Integrated and Robust Logistics Infrastructure Development), குறைந்த செலவிலான, உயர்ந்த தரத்திலான சேவைகள் கிடைக்கும் நிலையை ஊக்குவித்தல் (Cost effective & high quality logistics services), ஒற்றைச்சாளர அனுமதி வழங்கும் அமைப்பை உருவாக்குதல் (Single Window Clearance), சரக்குப் போக்குவரத்துச் சூழல் அமைப்பின் மீள்திறன் மற்றும் நிலைப்புத்தன்மையை உறுதி செய்தல் (Resilience & Sustainability), புதிய தொழில்நுட்ப உத்திகளைச் செயல்படுத்தல் (New Technology), சரக்குப் போக்குவரத்துத் துறையில் திறன் மேம்பாட்டை ஊக்குவித்தல் (Skill Development) ஆகியவை இக்கொள்கையின் முக்கிய கருப்பொருட்கள் ஆகும்.

இக்கொள்கையின் மூலம் சரக்குப் போக்குவரத்துத் துறைக்கு, "தொழில் அந்தஸ்து (Industrial Status) வழங்குதல், "ஒற்றை சாளர அனுமதி" (Single Window Clearances) வழங்குதல் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சரக்குப் போக்குவரத்து துறையில் புதிய தொழில்நுட்ப உத்திகளைச் செயற்படுத்துதல், திறன் மேம்படுத்துதல், நிலைப்பு தன்மையை (Sustainability) உறுதி செய்தல் ஆகியவற்றிற்கு ஊக்கமளிக்கப்படும்.

"சரக்குப் போக்குவரத்துச் செயல் திட்டம் "(Logistics Plan) மூலம் மூன்று பெருவழித் தடங்களில் மட்டுமே, 50 செயல்திட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் அடுத்த பத்தாண்டுகளில் ரூ.63,000 கோடி அளவிற்குச் செயல் திட்டங்களும், 1.6 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பும் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு தொழில்நுட்ப ஜவுளி, மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களிலிருந்து செயற்கை இழை (Man Made Fibre) நூல், செயற்கை இழை துணி மற்றும் ஆடை தயாரிப்புகளுக்கான சிறப்புத் திட்டம்

இச்சிறப்புத் திட்டமானது, உயர் மதிப்புக் கூட்டல் மற்றும் ஏற்றுமதித் திறன் கொண்ட புதிய தலைமுறை ஜவுளிப் பிரிவுகள் (தொழில்நுட்ப ஜவுளி / செயற்கை இழை நூல்) மறுசுழற்சிச் செய்யப்பட்ட பொருட்களிலிருந்து செயற்கை இழை நூல் மூலம் சுழற்சிப் பொருளாதாரத்தை ஊக்குவித்தல், ஆடை உற்பத்தியில் பெரும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், குறிப்பாகப் பெண்களுக்கு அதிக அளவிலான வேலைவாய்ப்புகள் வழங்குதல், பெரிய திட்டங்களுக்குச் சற்றே குறைவாக உள்ள முதலீடுகளுக்கும் அதிக அளவிலான ஊக்கத்தொகை வழங்குதல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டினை ஊக்குவித்து, இத்துறையைப் பல்வகைப்படுத்துதல், மாநிலம் முழுவதும், முக்கியமாகத் தொழில்ரீதியாக வகை செய்யப்பட்டுள்ள 'B' & 'C' வகை மாவட்டங்களில் சமச்சீரான தொழில் மேம்பாடு ஆகியவை குறித்து விளக்குகிறது.

இன்றைய இளைய தலைமுறையினர் வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்பத்தினைச் சரியாகப் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற்றம் காணவேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
சென்னை வர்த்தக மையத்தில், தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் **BRIDGE'23** 50ஆவது மாநாட்டைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை - 14.03.2023

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் சார்பாக நடைபெறும் இந்த ஐம்பதாவது பிரிட்ஜ் கருத்தரங்கினைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பினை வழங்கிய அனைவருக்கும் முதலில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இது தொழில்நுட்ப காலம். தொழில்நுட்பத்தினுடைய யுகமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. மனிதரின் அன்றாடத் தேவைகளில் ஒன்றாகத் தொழில்நுட்பப் பொருட்கள் இன்றைக்கு மாறியிருக்கின்றன. செல்போன், கம்ப்யூட்டர், இண்டெர்நெட் போன்றவை நம் அன்றாட வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒன்றாக ஆகியிருக்கிறது.

தொழில்நுட்பம், இன்று உலகத்தை ஒரு குடையின்கீழ்க் கொண்டு வந்திருக்கிறது. உலகில் எங்கோ ஒரு முனையில் நடப்பது - இன்னொரு முனைக்கு அப்போதே தெரியக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. தொழில்நுட்ப வளர்ச்சியின் மிகப்பெரிய பயன்பாடு - கல்வித் துறையில்தான் இருக்கிறது. ஒருகாலத்தில் கல்வி அறிவை நாம் தேடிப் பெற்றோம். ஆனால், இப்போது தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக, விரல்நுனியில் வந்துவிட்டது; வகுப்பறைகள் நவீனமயமாகிவிட்டன. கையளவு செல்பேசியில் அனைத்துப் புத்தகங்களும் நமக்குக் கிடைக்கின்றன. மாணவர்கள் அறிவோடு

மட்டுமல்ல, அறிவியலோடும் இன்றைக்கு கற்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

மருத்துவத் துறையில் தொழில்நுட்ப வளர்ச்சியால் நோய் தடுக்கும் முறை, கண்டறியும் முறை, காக்கும் முறை என எல்லாமே இப்போது எளிமையாக வந்திருக்கிறது. தனிமனித பாதுகாப்பையும், சமூகப் பாதுகாப்பையும் உறுதி செய்ய தொழில்நுட்ப வளர்ச்சி இன்றைக்கு மிக இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது.

இயற்கைச் சீற்றங்களை முன்கூட்டியே அறிந்து, நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் தொழில்நுட்பம் பேருதவி புரிந்து கொண்டிருக்கிறது. நம் அன்றாட வாழ்க்கையில், தொழில்நுட்பம் பல பிரமிப்பூட்டும் மாற்றங்களை நிகழ்த்தி வருகிறது. ஒரு காலத்தில் கனவாகத் தோன்றியது எல்லாம், இப்போது உண்மையாக வந்து கொண்டிருக்கிறது. எல்லாத் துறைகளிலும் தொழில்நுட்பம் பெரும் மாற்றத்தை, ஒரு புரட்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

அப்படிப்பட்ட தகவல் தொழில்நுட்பத்தை அரசு நிருவாகத்திலும், மக்கள் சேவையிலும் புகுத்தி, நலத்திட்டங்கள் மக்களுக்கு விரைவாகச் சென்று சேர்ந்திட வேண்டுமென்பதை நன்கு உணர்ந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், தனது ஆட்சிக் காலத்தில், இங்கே அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப் போல, தகவல் தொல்நுட்பத் துறையில் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்திக் காட்டினார்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்,

- திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அதாவது 1997ஆம் ஆண்டே தகவல் தொழில்நுட்பக் கொள்கையை முதன்முதலில் தமிழ்நாட்டிற்கு வகுத்துக் கொடுத்தார்.
- அரசுப் பள்ளிகளில் பயிலும் கிராமப்புற, ஏழை, எளிய மாணவர்கள் கணினி எனும் இயந்திரத்தை நேரில் பார்த்திராத காலகட்டத்தில், அவர்களுக்குக் கணினிக் கல்வியைத் தந்தார்.
- 1999-2000ஆம் ஆண்டே, பள்ளிப் பாடத் திட்டத்தில் மட்டுமின்றி, கலை, அறிவியல், மருத்துவம், சட்டம் உள்ளிட்ட கல்விப் பாடத்திட்டங்களிலும் கணினிப் பாடத்தை அவர் கொண்டுவந்தார்.
- 1996-2001 ஆட்சிக் காலத்திலேயே 'Empower IT' என்ற நிகழ்ச்சியை ஆண்டுதோறும் நடத்தி, தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தைப் பட்டிதொட்டிகள் எல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு சென்றார்.
- அப்போதே Mobile Governance, E-Governance போன்றவை அரசு அலுவலகங்களில் - அரசு சேவைகளில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.
- தமிழ்நாட்டில் IT Professionals ஏராளமாக உருவாகக் காரணமாக இருந்தார்.
- தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தேடி வந்து தேர்வு செய்யக்கூடிய முதல் நகரமாகச் சென்னையை அவர் மாற்றிக் காட்டினார்.
- தகவல் தொழில்நுட்பத்துக்கு எனத் தனித் துறையையும் 1998ஆம் ஆண்டிலேயே உருவாக்கி, அதற்குத் தனி அமைச்சரையும் நியமித்தார்.
- கணினி என்ற பெயரைப் பலரும் கேள்விப்படுவதற்கு முன்னதாகவே,

டைடல் பார்க்கை தமிழ்நாட்டில் அமைத்த தொலைநோக்குப் பார்வை கொண்டவர்தான் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். 1997இல் தரமணியில் டைடல் பார்க்கை உருவாக்கிட அதற்கெனப் புதுக் கொள்கையினை உருவாக்கி, ஆசியாவிலேயே மிகப் பெரிய தகவல் தொழில்நுட்பக் கட்டடமாக அதனைக் கட்டி, 2000ஆம் ஆண்டில் அதனைத் திறந்து வைத்து, தமிழ்நாட்டிற்கேப் பெருமை சேர்த்தார்.

- தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாடு நிகழ்த்தியிருக்கும் இன்றைய சாதனை, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்குக் கிடைத்த வெற்றிதான் என்று நாம் உறுதியோடு சொல்லமுடியும்.

மற்ற மாநிலங்களைவிட தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு முன்னேறி இருக்கக் காரணம் தலைவர் கலைஞர் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வார்கள்.

இதே வழித்தடத்தில் நமது திராவிட மாடல் அரசும் இப்போது செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

தகவல் தொழில்நுட்பத் தொழில் முதலீட்டிற்கு இன்றியமையாத தேவைகளான, அறிவியல், சமூகக் கட்டமைப்பையும், மனித ஆற்றலையும் தமிழ்நாடு முழுமையாகக் கொண்டுள்ளது. இதை நன்கு பயன்படுத்தித் தகவல் தொழில்நுட்பத் தொழிலை வளர்ச்சி அடையச் செய்யவும், மக்களுக்கு அரசின் முழுப் பயன்கள் சென்று சேர்ந்திடவும், இந்தியாவிலேயே, தமிழ்நாட்டைத் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒப்புயர்வற்ற முதன்மை மாநிலமாக உருவாக்கிடவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும், தலைவர் கலைஞர் அவர்களது வழியில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய திராவிட மாடல் அரசு எடுத்து வருகிறது.

இத்துறையின் மாண்புமிகு அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட திரு. மனோ தங்கராஜ் அவர்கள், இதனுடைய வளர்ச்சிக்காக நித்தமும் அவர் உழைத்துக் கொண்டிருக்கிறார். புதிய புதிய முயற்சிகளைத் துணிச்சலாக எடுக்கும் ஆற்றல் படைத்தவராக அவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். மருத்துவம், கல்வி, வேளாண்மை மற்றும் அரசுத் துறைகள் அனைத்தையும் டிஜிட்டல் மையமாக மாற்றும் நடவடிக்கையில் இறங்கி இருப்பதாக அவர் அறிவித்திருக்கிறார். இத்தகைய தொலைநோக்குப் பார்வை கொண்ட மாண்புமிகு அமைச்சர் திரு. மனோ தங்கராஜுக்கும் இந்தத் துறையின் அதிகாரிகள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களை, வாழ்த்துக்களை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

- தகவல் தொலைத் தொடர்பு சார்ந்த தேசிய மின் ஆளுமைத் திட்டங்கள் மற்றும் மாநில அரசின் பல்வேறு மின் ஆளுமைத் திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதில், மற்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு முன்னோடியாக விளங்கிக் கொண்டிருக்கிறது.
- தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் சார்பில் உயர்கல்வி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பல்வேறு தகவல் தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்து வருகிறது.
- 2009ஆம் ஆண்டு கழக ஆட்சியில்தான் தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப அகாடமி (ICTACT) தொடங்கப்பட்டது.

ஆசிரியர் மேம்பாடு, மாணவர் திறன் மேம்பாடு, இளைஞர் மேம்பாடு, டிஜிட்டல் மேம்பாடு, தொழில்-நிறுவன ஆராய்ச்சி, ஆய்வு இதழ் வெளியீடுகள் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வரக்கூடிய இந்த நிறுவனத்தின் செயல்பாடு உள்ளபடியே பாராட்டுக்குரியது.

ஐ.சி.டி. அகாடமி முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள், அவற்றின் முக்கியத்துவம் சார்ந்த விழிப்புணர்வைக் கல்வி நிறுவனங்களில் ஏற்படுத்துவதற்கு மாநாடுகளை நடத்தி வருவது உள்ளபடியே பாராட்டத்தக்கது. இத்தகைய கருத்தரங்குகள், மாநாடுகள், பயிற்சிகள் வாயிலாக, தமிழ்நாட்டிலுள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளவும், மாநிலத்தில் நிலவும் திறன் இடைவெளிக் குறைந்திடவும் வழிவகை செய்யும்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகித்து வரும் சூழ்நிலையில், அதன் வளர்ச்சியைத் தக்கவைத்துக்கொள்வது மட்டுமல்லாமல், அதை விரைவுபடுத்தவும் தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளது. இதனால் தமிழ்நாடு பொருளாதார வளம், அதிகரித்த வேலைவாய்ப்பு என இரட்டைப் பலன்களை அடையமுடியும்.

IT உள்கட்டமைப்புச் சேவைகளை வழங்குதல் மற்றும் மாநில குடும்ப தரவுத் தளம், பிளாக்செயின் மற்றும் இ-அலுவலகம் மூலம் SMART நிறுவனத்தை நிறுவுவதன் மூலமாகச் சேவைகளை மேம்படுத்திட இயலும் என்பதால், தமிழ்நாடு அரசு அதில் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. இதன்மூலம் குடிமக்கள் விரைவில் காகிதமில்லா, வெளிப்படைத்தன்மையுடனான சேவைகளை பெற இயலும். "தரவுகள்" எனப்படும் "Data"தான் இந்தக் காலத்தின் புதிய எரிபொருள்.

தமிழ்நாடு Data Centre பாலிசியை வெளியிட்டதன் மூலம், தமிழ்நாட்டில் உள்ள நிறுவனங்கள் Date Centre உட்கட்டமைப்பை உருவாக்க உதவும் முதல் நோக்கம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பச் சூழலை மேம்படுத்திட, தகவல் தொழில்நுட்பத் துறை, கல்வித்துறை, நாஸ்காம் ஆகியவற்றில் சிறந்த அனுபவம் வாய்ந்த உறுப்பினர்களைக் கொண்டு, "எதிர்காலத்திற்கான ஆலோசனைக் குழுவை" மாநில அரசு அமைத்துள்ளது.

தமிழ்நாட்டில், துடிப்பான தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பை உருவாக்கிட, திறன் இடைவெளியைக் குறைப்பது என்பது மிகவும் முக்கியமானது. அதனை உணர்ந்துதான், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் மூலமாக, அண்ணா பல்கலைக்கழகம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், ஐ.பி.எம். ஆகியவற்றின் மூலமாக 50 ஆயிரம் ஐ.டி. / கணினித் துறை மாணவர்களுக்கு 3-கிரெடிட், கட்டாயக் கற்றல் படிப்பாக வழங்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற பயிற்சியை மற்ற துறைகளுக்கும் விரிவுபடுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தகவல் தொழில்நுட்பத்திற்கு - இரண்டு பக்கம் உண்டு. அதனை எப்படி, எந்தளவுக்கு, எந்த நோக்கத்துக்குப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே அதனுடைய பயன்கள் இருக்கும்.

இளைய தலைமுறை தங்களது வளர்ச்சிக்கு இதனைப் பயன்படுத்த வேண்டுமே தவிர, தொழில்நுட்பங்களின் அடிமைகள் ஆகிவிடக் கூடாது. தொழில்நுட்பங்களை ஏமாற்றுவதற்குப் பயன்படுத்தும் குற்றச் சம்பவங்கள் அதிகம் நடக்கின்றன. வதந்திகளைப் பரப்பி சட்டம் ஒழுங்கைக் கெடுக்கவும் இதனைச் சில அரசியல் சக்திகள் பயன்படுத்துகிறார்கள். ஆபாச வலைத்தளங்களும் பெருகி வருகிறது. ஆன்லைன் ரம்மி விளையாட்டு மனித உயிர்களை நித்தமும் பலி வாங்கிக் கொண்டிருக்கிறது.

எனவே, வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பத்தினை இன்றைய இளைய தலைமுறையினர் சரியாகப் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற்றம் காணவேண்டும்; நாட்டின் வளர்ச்சிக்காகப் பாடுபட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்துத் துறை வளர்ச்சி என்ற தமிழ்நாடு அரசின் திராவிட மாடல் கொள்கைக்கு இந்த கருத்தரங்கு வலுசேர்க்கும் என நான் நம்புகிறேன்.

தகவல் தொழில்நுட்பத் துறை வளர வேண்டும், அது இந்தியாவில் மற்ற மாநிலங்களைவிட முன்னேறிய துறையாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொண்டு, இந்த மாநாட்டில் உங்களோடு சேர்ந்து நானும் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச்சொல்லி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

மனித குலத்துக்கு மகத்தான உதவி செய்யும் கருணைத் தொட்டில் தமிழ்நாடு

"வெளிமாநிலத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் தாக்கப்படுவதாக வதந்திகளைப் பரப்புபவர்கள், இந்திய நாட்டிற்கு எதிரானவர்கள்; நாட்டின் ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் விளைவிப்பவர்கள். சமூக ஊடகங்களில் இப்படிக் கீழ்த்தரமாகச் சிலர் அரசியல் செய்வது கடும் கண்டனத்திற்குரியது"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிக்கை - 04.03.2023

வந்தாரை வாழவைக்கும் தமிழ்நாடு இது. இதனை நம்மை விட வடமாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்து வாழும் மக்களே அழுத்தமாகச் சொல்வார்கள். தனியார் தொலைக்காட்சி நடத்திய விவாத மேடையில் பேசிய வடமாநிலத்துப் பெண் ஒருவர் பேசிய பேச்சு ஒன்று, சமூக ஊடகங்களில் சமீபத்தில் அதிகம் பரவியது.

"வாய்ப் பேச முடியாத தனது குழந்தையைத் தூக்கிக்கொண்டு தமிழ்நாட்டுக்கு வாழ வந்த நான், ரேஷன் கார்டு பெற்று, அதன் மூலமாக முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், பல இலட்சம் ரூபாய் மதிப்பிலான சிகிச்சையை இலவசமாக செய்து வைத்தேன். இப்போது என் குழந்தை பேசுகிறது. இதற்குத் தமிழ்நாடு தான் காரணம்" என்று அளித்த பேட்டியானது யாராலும் மறக்க முடியாதது. தாய்த் தமிழ்நாடு என்பது மனித குலத்துக்கு மகத்தான உதவி செய்யும் கருணைத் தொட்டிலாகவே எப்போதும் இருந்துள்ளது. இனியும் அப்படித்தான் இருக்கும்.

வர்த்தகத்திற்காக, தொழிலுக்காக, மருத்துவத்துக்காக, கல்விக்காக, வேலைக்காக எனப் பல்வேறு மாநில மக்கள் தமிழ்நாட்டுக்கு வருவது காலம் காலமாகத் தொடர்ந்து வருகிறது. அவர்கள் தாங்களும் உயர்ந்து, தமிழ்நாட்டையும் உயர்த்தி இருக்கிறார்கள். சமீப காலமாக வேலைவாய்ப்புகளைத் தேடி அனைத்து மாநிலத் தொழிலாளர்களும் தமிழ்நாட்டிற்கு வருவது அதிகரித்து வருகிறது. சேவைத் துறைகள், கட்டுமானம், சிறு, பெருந்தொழில் நிறுவனங்கள் எனப் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புகளை வழங்கும் வகையில் தமிழ்நாடு திகழ்வதுதான் இதற்குக் காரணம். தமிழ்நாட்டிற்குச் சென்றால் வேலை கிடைக்கும், அமைதியான வாழ்க்கை அமையும் என்பதே இங்குப் பல்வேறு மாநிலங்களிலிருந்து தொழிலாளர்கள் வருவதற்குக் காரணமாகும். இவ்வாறு நம்பிக்கையோடு வருகை தரும் அனைத்து மாநிலத் தொழிலாளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைத் தமிழ்நாடு அரசு செய்து தருவதோடு, தொழிலாளர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அவர்களுக்கு உரிய சலுகைகளையும், பாதுகாப்பினையும் உறுதி செய்து வருகிறது.

கொரோனா இரண்டாவது அலையின்போது சொந்த மாநிலங்களுக்குத் திரும்பச் செல்ல விரும்பிய வடமாநிலத் தொழிலாளர்களுக்கு உதவி செய்யும் வகையில், மாவட்டம்தோறும் கட்டுப்பாட்டு அறைகள் உருவாக்கப்பட்டன. சென்னை, கோவை, திருப்பூர், மதுரை, நெல்லை, சேலம் ஆகிய மாவட்டங்களில் உள்ள இரயில் நிலையங்களில் உதவி மையங்கள் உருவாக்கப்பட்டன.

சென்னைப் பெருநகர மாநகராட்சி, உள்ளாட்சி அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இணைந்து அந்தத் தொழிலாளர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு, போக்குவரத்து வசதிகளும் செய்து தரப்பட்டன. இவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த முகாமுக்கு நானே சென்று பார்த்து, அவர்களுக்கு உரிய வசதிகள் செய்து தரப்பட்டதை உறுதி செய்தேன். அதேபோல், குடும்ப அட்டை இல்லாத, வேலைகளை இழந்த 1,29,440 புலம்பெயர் தொழிலாளர்களுக்கு 15 கிலோ அரிசி, 1 கிலோ துவரம் பருப்பு, 1 கிலோ சமையல் எண்ணெய் வழங்கப்பட்டது.

அனைத்து மாநிலத் தொழிலாளர்களுக்கு, பணிக்காலத்தில் ஏற்படும் விபத்து இழப்பீடாக 01.04.2021 முதல் இதுவரை ரூ.6.27 கோடி வழங்கப்பட்டுள்ளது. கட்டுமானத் தொழிலில் அவர்கள் பணிபுரியும்போது, பாதுகாப்பாகப் பணிபுரியவும், விபத்துக்களைத் தவிர்க்கவும் அவர்களுக்கு உரிய விழிப்புணர்வுப் பயிற்சி முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில், இதுவரை 456 பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. அதன்மூலம், 43,000 தொழிலாளர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்துப் புலம்பெயர் தொழிலாளர்களும் தங்களது பெயர்களைப் பதிவு செய்ய வலைத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்படி வெளிமாநிலத் தொழிலாளர்கள் அனைவரையும் கனிவோடு நாங்கள் கவனித்து வருகிறோம்.

இந்த அமைதிமிகு சூழ்நிலையைக் காணப் பொறுக்காத சிலர், அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில், தமிழ் மக்களின் பண்பாட்டினை அவமதிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, சில குறுமதியாளர்கள் முயற்சி செய்கிறார்கள். அவர்களது எண்ணம் ஈடேறாது. இங்குள்ள அனைத்து மாநிலத் தொழிலாளர்களுக்கும் இங்கு நிலவும் இயல்பான சூழ்நிலை தெரியும். அதனால்தான், தற்போதும் வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குத் தொழிலாளர்கள் தொடர்ந்து வந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களைத் தமிழ்நாடு எப்போதும் போல் வரவேற்கின்றது.

வேறு மாநிலங்களில் நடைபெற்ற சில சம்பவங்களின் வீடியோக்களையும், படங்களையும் தமிழ்நாட்டில் நடைபெற்றதாக வேண்டுமென்றே வதந்தி பரப்பி, அச்சத்தையும் பீதியையும் பரப்புபவர்கள் மீது சட்டரீதியாக, கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வெளிமாநிலத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் தாக்கப்படுவதாக வதந்திகளைப் பரப்புபவர்கள், இந்திய நாட்டிற்கு எதிரானவர்கள்; நாட்டின் ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் விளைவிப்பவர்கள். இல்லாத ஒரு பிரச்சினையை வைத்து, இப்படிக் கீழ்த்தரமாகச் சிலர் அரசியல் செய்வது கடும் கண்டனத்திற்குரியது.

வடமாநிலத் தொழிலாளர் தோழர்கள் எவ்வித அச்சமும் அடைய வேண்டாம். அப்படி யாராவது உங்களை அச்சுறுத்தினால் காவல்துறையின் உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் தகவல் தாருங்கள் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இங்குள்ள அனைத்து மாநிலத் தொழிலாளர்களுக்கும் அரணாக இந்த அரசும், தமிழ்நாட்டு மக்களும் இருப்பார்கள் என்பதை இங்குள்ள தொழிலாளர் சகோதரர்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்வதோடு, தவறான செய்திகளின் அடிப்படையில் நீங்கள் எவரும் எவ்வித அச்சமும் கொள்ள வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பீகாரைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர், வேறு ஏதோ மாநிலத்தில் நடந்த இரண்டு தனிப்பட்ட நபர்களுக்கு இடையிலான மோதலைத் தமிழ்நாட்டில் நடந்ததைப்போல பரப்பியதே, இதன் தொடக்கமாக அமைந்துள்ளது. எனவே, ஊடகங்கள், தொலைக்காட்சி நிறுவனங்கள், சமூக வலைதளங்களைப் பயன்படுத்துவோர் தங்களுக்கு இருக்கும் சமூகப் பொறுப்பை உணர்ந்தும், ஊடக நெறிமுறைகளோடு செய்திகளை வெளியிட வேண்டும் என்றும், செய்திகளை உறுதிப்படுத்தாமல் பரபரப்புக்காக வெளியிட வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பீகார் மாநில முதலமைச்சர், எனது பெருமதிப்பிற்குரிய சகோதரர் மாண்புமிகு நிதிஷ்குமார் அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இது தொடர்பாக நான் பேசி இருக்கிறேன். அனைத்துத் தொழிலாளர்களும், எங்கள் தொழிலாளர்கள் என்பதையும், எங்கள் மாநிலத்தின் வளர்ச்சிக்கு உதவி செய்து வருபவர்கள் என்பதையும், அவர்களுக்கு எந்த பாதிப்பும் இங்கு நேராது என்பதையும் அவருக்கு உறுதியாகச் சொல்லி இருக்கிறேன்.

வளமான - அமைதியான தமிழ்நாட்டை உருவாக்க அனைவரும் பாடுபடுவோம்.

அரியலூர், மருத்துவக் கல்லூரியில் ரூ.22 கோடிச் செலவில்

“அனிதா நினைவு அரங்கம்”



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு - 14.03.2023

அரியலூர் மாவட்டத்தில் குழுமூர் கிராமத்தில் ஏழை ஆதிதிராவிடக் குடும்பத்தில் பிறந்த கூலித் தொழிலாளியின் மகள் அனிதா சிறுமியாக இருந்தபோதே அவரின் தாயார் இறந்துவிட்டார். தமிழ்வழிக் கல்வியில் பயின்று, அரியலூர் மாவட்டத்தில் 12ஆம் வகுப்புத் தேர்வில் 1200க்கு 1176 மதிப்பெண்கள் பெற்றிருந்த நிலையில், ஒன்றிய அரசு, மருத்துவச் சேர்க்கையினை 12ஆம் வகுப்புத் தேர்வு மதிப்பெண்ணுக்குப் பதிலாக, நீட் மதிப்பெண் அடிப்படையிலேயே நடைபெறும் என்ற அறிவிப்பினால் மனமுடைந்தார்.

ஏழை கிராமப்புற மாணவர்கள் நீட் தேர்வுக்குத் தயாராவதற்குத் தேவையான விலையுயர்ந்த நீட் தேர்வு பயிற்சிகளைப் பெறுவது சாத்தியமில்லை என்பதையும், 12ஆம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில், மருத்துவச் சேர்க்கை தேர்வுகள் நடத்தப்பட்டால் மட்டுமே, தன்னைப் போன்ற கிராமப்புற மாணவர்கள் மருத்துவ இடங்களைப் பெறமுடியும் என்பதையும் உணர்ந்து, நீட் தேர்வு கிராமப்புற மாணவர்களின் நலன்களுக்கு எதிரானது என அனிதா உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

நீட் தேர்வின் அடிப்படையில் மட்டுமே மாணவர் சேர்க்கை நடத்தப்பட வேண்டும் என்ற இந்திய உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகு, தீர்ப்பு வெளியான ஒன்பது நாட்களில் அனிதா தனது இன்னுயிரை 2017 செப்டம்பர் 1ஆம் நாள் மாய்த்துக் கொண்டார். அவரது மரணம் நீட் தேர்வு முறையின் கொடூரத்தை உலகுக்கு உணர்த்தியது.

திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ்நாட்டில் பொறுப்பேற்றவுடன் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. ஏ.கே.ராஜன் அவர்கள் தலைமையில் குழுவை அமைத்து, அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைந்த அரசுச் செயலாளர்கள் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுத் தமிழ்நாடு அரசு, சட்டமன்றத்தில் நீட் எதிர்ப்பு மசோதாவை நிறைவேற்றி மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பியது. மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் அம்மசோதா திருப்பி அனுப்பப்பட்டது. மீண்டும் அந்த மசோதா தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த மசோதாவிற்கு ஒன்றிய அரசு விரைவில் ஒப்புதல் தர வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

அரியலூர் மருத்துவக் கல்லூரி வளாகம் 2022 ஜனவரி 12 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, இரண்டு ஆண்டுகளாக மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. தற்போது இந்தப் புதிய மருத்துவக் கல்லூரியில் நவீன மருத்துவமனை கட்டப்பட்டு, இம்மாவட்ட மக்களின் நலனிற்காக இன்று திறந்து வைக்கப்பட உள்ளது. இவ்வேளையில் நீட் எனும் தேர்வினை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நிகழ்த்தி, தனது இன்னுயிரை இழந்த அனிதா அவர்களின் நினைவாக அரியலூர் மாவட்டம், அரியலூர் மருத்துவக் கல்லூரி வளாகத்தில், ரூ.22 கோடிச் செலவில், 850 பேர் அமரக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ள அரங்கத்திற்கு “அனிதா நினைவு அரங்கம்” எனப் பெயர் சூட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

படமும்/செய்தியும்

சென்னை, சேப்பாக்கம், விளையாட்டரங்கத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கலைஞர் மு.கருணாநிதி மாடம் திறப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 17.03.2023 அன்று சென்னை, சேப்பாக்கம், எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கலைஞர் மு.கருணாநிதி மாடத்தைத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் திரு. மகேந்திரசிங் தோனி மற்றும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

படமும்/செய்தியும்

செய்தி மக்கள் தொடர்புத்துறை மண்டல இணை இயக்குநர்கள் பணி ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில், 14.03.2023 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் ஆறு மண்டல இணை இயக்குநர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் மரு. இரா.செல்வராஜ், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

"நான் முதல்வன் திட்டம்" போட்டித் தேர்வுகள் பிரிவுத் தொடக்கம்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் தொடங்கி வைத்தார் - 07.03.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட மாபெரும் திறன் மேம்பாட்டிற்கான "நான் முதல்வன் திட்டத்தின் போட்டித் தேர்வுகள் பிரிவு" தொடக்க நிகழ்ச்சி 07.03.2023 அன்று சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் நடைபெற்றது.

"நான் முதல்வன் திட்டத்தின்" போட்டித் தேர்வுகள் பிரிவின்கீழ் அரசுத் தேர்வுகளான எஸ்.எஸ்.சி. (SSC), இரயில்வே (RAILWAY), வங்கி (BANKING) மத்திய (UPSC), தமிழ்நாடு அரசுப்பணி (TNPSC), இராணுவம் (DEFENCE) போன்ற பல்வேறு போட்டித்தேர்வுகளுக்குத் தமிழ்நாடு முழுவதும் சிறந்த முறையில் பயிற்றுவிக்கும் வகையில் இத்திட்டம் துவங்கப்பட்டுள்ளது.

இப்போட்டித்தேர்வுப் பிரிவில் மாணவர்களுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் பயிற்சி வகுப்புகள் இலவசமாக வழங்கப்படும். இதன்மூலம், தமிழ்நாட்டு இளைஞர்கள் போட்டித் தேர்வுகளை எளிதாக அணுகும் வண்ணம் இப்போட்டித் தேர்வு பிரிவு துவங்கப்பட்டுள்ளது.

அரசுப்பணி ஒன்றையே கனவாகக் கொண்டுள்ள ஆயிரம் ஆயிரம் இளைஞர்களின் கனவை மெய்ப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம். மத்திய அரசுப் பணி போட்டித் தேர்வுகளில் தமிழர்களின் பங்கேற்பைக் கணிசமான அளவில் அதிகரித்து வெற்றிபெறச் செய்வதோடு மட்டுமல்லாமல் கூடிய விரைவில் ஐஐடி (IIT), என்.ஐ.டி. (NIT), தேசியச் சட்டப் பல்கலைக்கழகங்கள் (NATIONAL LAW UNIVERSITY), அகில இந்திய மருத்துவ நிறுவனம் (ALL INDIA INSTITUTE OF MEDICAL SCIENCES) ஆகிய முன்னணி கல்வி நிறுவனங்களில் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் பயிலும் வண்ணம் குமரி முதல் இமயம் வரை

> **மாணவச் செல்வங்களே, பள்ளிப் பிள்ளைகளே, கல்லூரி மாணவ, மாணவியரே நீங்கள் உரக்கச் சொல்லிப் பாருங்கள். நான் முதல்வன், நான் முதல்வன், நான் முதல்வன் என்று சொல்லிப் பாருங்கள். உங்களுக்குள் ஒரு சக்தி பிறக்கும், உங்களுக்குள் ஒரு நம்பிக்கை பிறக்கும், உங்களுக்குள் ஒரு தைரியம் பிறக்கும்.**
>
> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

நம் அறிவை விரிவு செய்ய இத்திட்டம் விசாலப் பாதை வகுக்கும் என்ற நோக்கத்தையும் கொண்டு "நான் முதல்வன்" போட்டித் தேர்வுகள் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை மாண்புமிகு இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த "நான் முதல்வன்" திட்டத்தின் ஒரு பகுதியான போட்டித் தேர்வுகள் பிரிவைத் தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என்ற துடிப்போடும், கனவோடும் வந்திருக்கின்ற உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு நவீனப் பாடப் பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கி அவர்களுக்கு தகுதியான வேலைவாய்ப்புகள் கிடைக்கவேண்டும், ஆண்டுதோறும் 10 இலட்சம் இளைஞர்கள் வேலைவாய்ப்புகளைப் பெற வேண்டும் என்ற தொலைநோக்குடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவங்கப்பட்ட ஓராண்டில் 483 அரசு, அரசு உதவி பெறும், சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் மூலம் 4 இலட்சத்து 60 ஆயிரம் மாணவ, மாணவியர்கள், 785 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைச் சார்ந்த 8 இலட்சத்து 10 ஆயிரம் மாணவ, மாணவியர்களுக்குத் தொழில் சார்ந்த திறன்களில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வி இடைநிற்றலை அறவே ஒழித்திட 1 முதல் 5 வரையிலான அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் காலை உணவுத் திட்டத்தினை அறிவித்துச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

நான், மாவட்டங்களுக்கு செல்லும்போது அந்தந்தப் பகுதியிலுள்ள பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை ஆய்வு செய்து வருகிறேன். அங்கு உணவு தரமாகக் குறித்த நேரத்தில் வழங்கப்படுகிறதா என்பது குறித்து மாணவர்கள், ஆசிரியர்களுடன் கேட்டறிந்து, எனது காலை சிற்றுண்டியினை அவர்களுடன் அமர்ந்து சாப்பிட்டு வருகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் புதுமைப்பெண் திட்டம், மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயணத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டத்தில் இதுவரையில் தமிழ்நாட்டில் உள்ள மகளிர் 250 கோடிப் பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 5 ஆண்டுகளில் வங்கி, இரயில்வே, போன்ற துறைகளுக்கான போட்டித் தேர்வுகள் நடத்தப்பட்டு 1.50 இலட்சம் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

இதில் தமிழ்நாட்டைச்சார்ந்தவர்கள் மிகவும் குறைவு என்பது வருத்தமளிக்கிறது. இந்த நிலை மாற வேண்டும், மாற்றப்பட வேண்டும் அண்மையில் ஒன்றிய பிரதமர் அவர்களைச் சந்தித்தபோது தமிழ்நாட்டில் ஒன்றிய அரசுப்பணிகளில் தமிழ்நாடு மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்க வலியுறுத்தியுள்ளேன்.

தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு நிறுவனங்களில் அனைத்து நிலைகளிலும் தமிழர்கள் அதிக அளவில் பணியாற்றுகின்ற நிலை வர வேண்டும். சென்னை போன்ற நகரங்களில் மட்டுமே அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வு மையங்கள் உள்ளன. கிராமப்புற மாணவர்களால் கூடுதல் கட்டணம் செலுத்தி இத்தகைய பயிற்சிகளை பெற முடியாது. இந்த நிலையை மாற்றி கட்டணமின்றிப் போட்டித் தேர்வுக்கான பயிற்சிகளை அளித்திட நம் முதல்வர் அவர்கள் இந்த திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே மாணவர்களுக்குத் தெரிவித்தவாறு, எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம், உங்களுக்கு தாயாக, தந்தையாகத் துணை நிற்பார். உழைத்தால் வெற்றி பெறலாம். நான் என்றும் உங்களின் அண்ணனாகத் துணை நிற்பேன்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில்
08.04.2023 அன்று சென்னை புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் மத்திய இரயில் நிலையத்தில்
சென்னை-கோயம்புத்தூர் இடையே வந்தே பாரத் விரைவு இரயில் சேவையை தொடங்கி வைத்தார்.

தமிழரசு

Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்,
மாண்புமிகு கேரள மாநில முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்கள்
01.04.2023 அன்று கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்தில் உள்ள
தந்தை பெரியார் நினைவிடத்தில் அவரது திருவுருவச் சிலைக்கு
மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

Published by D.MOHAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : D.MOHAN, I.A.S.,